உதயன்

23

www.onlineuthayan.com

26: பக்கங்கள் சுடர் 27 கதிர் 283 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 19 செவ்வாய்க்கிழமை (04/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00



# தமிழருக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்



அரியாலையில் சிறுமி ஒருத்தியிடம் அளவளாவும் சந்திரிகா.

## யாழ்ப்பாணத்தில் சந்திரிகா

யாழ்ப்பாணம், செப். 1

தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. முன்னறிவித்தல்கள் ஏதுமின்றி இரகசியமாக, திடீரென நேற்று யாழ்ப்பாணம் வந்தார் சந்திரிகா குமாரதுங்க. கிழக்கு அரியாலை மற்றும் அச்சுவேலிப் பகுதிகளுக்குச் சென்ற அவர் போரால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துப் பேசினார்.

''தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு பற்றி நான் பல காலங்களாகப் பேசி வருகின்றேன். இன்றும் அதனைத்தான் கூறுகின்றேன். தமிழ் மக்களுக்கு அவர்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டும். அதற்கான அரசமைப்பு ஒன்றை வரைந்து நான் அதனை நாட்டுக்கு முன்வைத்தேன். அது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. அதில் தமிழ் மக்களுக்கு நிறைய அதிகாரங்கள் வழங்கப்பட்டன. தனி நாடு அல்ல. ஆனால் நிறைய அதிகாரங்கள். அவை வழங்கப்படவேண்டும் என்றே நான் இன்றும் விரும்புகின்றேன். அடுத்து இந்தப் பிரதேசம் மிக வேகமாக அபிவிருத்தி செய்யப்படவேண்டும்'' என்று உதயனிடம் தெரிவித்தார் சந்திரிகா குமாரதுங்க. பார்க்க பக்கம் 4

**2** சட்டவிரோதமாக ஆலிக்கு ஆள்களை அனுப்பினார் என்ற குற்றச்சாட்டில் கைதான கூட்டமைப்பு வேட்பாளருக்கு பிணை

**5** 2011, 2012 ஆகிய வருடங்களில் பட்டம் பெற்று வெளியேறியோருக்கும் உடனடியாக வேலை வாய்ப்பை வழங்கக் கோரிக்கை

**8** இந்தியாவுக்கு சீனப் பாதுகாப்பு அமைச்சர் வருவதைக் கண்டித்து டில்லியில் திபெத்தியர்கள் ஆர்ப்பாட்டம்.

**9** சிரிய விமானத் தளத்தை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதால் பெரும் பதற்றம்

முற்றுகிறது வேம்படி அதிபர் பிரச்சினை

## ஒரே நாளுக்குள் தீர்வு வேண்டும் இன்றேல் வெடிக்கும் போராட்டம்

பழைய மாணவிகள் போர்க் கொடி

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். குடாநாட்டின் புகழ் பூத்த பெண்கள் பாடசாலையான வேம்படி மகளிர் கல்லூரியில் நிரந்தர அதிபரை நியமிக்கும் பிரச்சினை முற்றி வெடித்துள்ளது. இந்தப் பிரச்சினையில் சுமுகமான ஒரு முடிவை ஏற்படுத்த கல்வி அதிகாரிகள் தவறி விட்டனர் என்று குற்றஞ்சாட்டியுள்ள பழைய மாணவிகள் சங்கம் போராட்டத்துக்குத் தயாராகி உள்ளது.

இன்று ஒரு வேலை நாள் கால அவகாசத்தை கல்வி அதிகாரிகளுக்கு வழங்கியுள்ள பழைய மாணவிகள், தீர்வு கிடைக்கவில்லை என்றால் நாளை முதல் கவனவீர்ப்புப் போராட்டத்தில் குதிக்கப் போவதாகவும் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பில் பழைய மாணவிகள் சங்கம், மாகாண கல்விப் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அதில், ''இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்காது ஒதுக்கித் தள்ளிவிட்டனர்'' என்று பார்க்க பக்கம் 4

## கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இறைவன் வழங்கிய சந்தர்ப்பம்

வாக்குகளைச் சரியாகப் பயன்படுத்துமாறு சம்பந்தன் அழைப்பு

மட்டக்களப்பு, செப். 4

'' கிழக்கு மாகாணத் தேர்தலில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டுள்ளது. இதை மஹிந்த ராஜபக்ஷ கூட எதிர்பார்க்கவில்லை. இது கடவுளுடைய செயல். நீண்ட காலமாக நாம் துன்பங்களையும், துயரங்களையும் எதிர்நோக்கி வருகின்றோம். இறைவன் எமக்கொரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளான். இதை நாம் உறுதியாகப் பயன்படுத்த வேண்டும். '' - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கக் கோரும் பிரசாரக் கூட்டமொன்று துறைநீலாவணை மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் முன்பாக இடம் பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, த.தே. கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

சர்வதேச சமூகத்தின் மேற்பார் பார்க்க பக்கம் 4

## வீட்டுச்சுவர் இடிந்து யுவதி சாவு

யாழ்ப்பாணம், செப்.4

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட தனது வீட்டைத் துப்புரவு செய்து கொண்டிருந்த யுவதியொருவர், ஷெல் வீச்சுக்களால் தூர்ந்து போயிருந்த வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் முதுகுப்புறத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மரியநாயகம் கமலதர்ஷினி (வயது -20) என்ற யுவதியே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பார்க்க பக்கம் 4

## கடலில் மிதந்த போத்தலில் இருந்த திரவத்தை அருந்திய இளைஞர் சாவு

மன்னார் வங்காலையில் சம்பவம்

மன்னார், செப். 4

மன்னார் வங்காலைக் கடலில் மிதந்து வந்த போத்தல் ஒன்றில் இருந்த திரவத்தை மதுபானம் என்று நினைத்துப் பருகிய நான்கு இளைஞர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நான்கு இளைஞர்கள் வங்காலைக் கடற்கரைப் பகுதிக்குச் சென்றுள்ளனர். இதன் போது கடலில் மிதந்து வந்த போத்தல் ஒன்று கரையொதுங்கியது. இதனைக் கண்ட குறித்த இளைஞர்கள் அதனை எடுத்துப்பார்த்தனர். அதில் உள்ளது வெளிநாட்டு மது பானம் என நினைத்து அவர்கள் அதனைப் பருகியுள்ள னர்.

இந்த நிலையில் அவர்களில் மூவர் கடுமையாக பார்க்க பக்கம் 4

வன்முறைகள்

## 311

கொழும்பு,செப் 4

மூன்று மாகாணசபைகளுக்குமான தேர்தல்கள் அண்மித்துவருகின்ற இந்தப் பரபரப்பான சூழ்நிலையில் தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் வன்முறைச் சம்பவங்கள், குறித்த மாகாணங்களில் மலிந்துகிடக்கின்றன என மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான புத்தி ஜீவிகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

குறித்த பிரதேசங்களில் இடம்பெற்றுவருகின்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்களை அந்த ஒன்றியம் பட்டியலிட்டும் வெளியிட்டுள்ளது. பார்க்க பக்கம் 4

## இந்தியத் தூதுவர் பதவி நீடிப்பு கடும் அதிர்ச்சியில் இலங்கை

கொழும்பு,செப் 4

இலங்கை அரசுடன் சுமுகமான உறவைக் கொண்டிராத இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தாவுக்கு, இந்திய மத்திய அரசு ஆறு மாத சேவை நீடிப்பை வழங்கியுள்ளது. இது இலங்கைக்குக் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் இந்த அறிவிப்பு, அசோக் கே காந்தாவை அடுத்துப் பதவி யேற்கும் புதிய தூதுவர் மூலம், உறவுகளை கட்டியெழுப்பத் திட்டமிட்டிருந்த இலங்கை அரசின் முகத்தில் இராஜதந்திர ரீதியாகக் கொடுக்கப்பட்ட அறை என்று வர்ணிக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தாவின் பதவிக் காலம் அடுத்த மாதத்துடன் முடிவடையவிருந்தது. இதனால் சற்று நிம்மதியடைந்த இலங்கை அரசு புதிதாக வரும் தூதுவர் மூலம் சுமுகமான உறவைக் கட்டியெழுப்பும் எதிர்பார்ப்பில் இருந்தது.

ஆனால், இலங்கை அர பார்க்க பக்கம் 4

## பல்கலைக்கழகங்களுக்கு 4,928 மாணவரை மேலதிகமாக சேர்க்க நீதிமன்று பரிந்துரை

-எஸ்.எஸ்.ஜனகன்-

கொழும்பு, செப்.4

அரச பல்கலைக்கழகங்களுக்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையைவிட 4,928 பேரை மேலதிகமாக இணைத்துக்கொள்ளுமாறு பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் நேற்றுப் பரிந்துரைத்தது.

இசற் புள்ளிப் பிரச்சினையால் மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக் குறித்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட 4 தீர்வுகளில் மூன்றாவதாக இருந்த மேற்படி தீர்வை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம், அதனைப் பரிந்துரைத்தது.

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க, நீதியரசர்கள் என்.ஜி.அமுனுகம மற்றும் கே.சிறிபவன் ஆகியோரைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் இந்தப் பரிந்துரையை வழங்கியது.

ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, பல்கலைக்கழகங்களுக்கு மேலதிக மாணவர்களை எடுப்பதற்கு முயற்சிக்கும்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பிரதம நீதியரசர் யோசனை கூறியிருந்தார். 1991 ஆம் ஆண்டு அவ்வாறு செய்யப்பட்டது என்பதையும் அப்போது அவர் சுட்டிக் காட்டியிருந்தார். பார்க்க பக்கம் 4

## நாவாந்துறை 'கிறீஸ்பூத' வழக்கு நேற்று மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப்.4

கடந்த வருடம் நாவாந்துறையில் நடமாடிய 'கிறீஸ் பூத' விவகாரம் தொடர்பிலான வழக்கு, யாழ். நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ். நீதிமன்ற நீதிவான் பெ. சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

வழக்குத் தொடுநர்களான நாவாந்துறையைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களும் நேற்று மன்றில் முன்னிலையாகியிருந்தனர். அவர்கள் தொடர்பான வழக்குகள் அனைத்தையும் நவம்பர் பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்.எஸ்.பி. ரணகலவுக்கு எதிராக உரிமை மீறல் மனு

கொழும்பு,செப் 4

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரேமலால் ரணகலவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எம்.ரி.ஹசன் அலி, அக்கட்சியின் அக்கரைப்பற்று அமைப்பாளர் ஹனீபா (மதனி) மற்றும் கிழக்கு மாகாண சபை வேட்பாளர் எம்.தவம் ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர்.

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, சட்ட மா அதிபர், பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன் மற்றும் கிழக்கு மாகாணப் பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவைத் தாக்கல் செய்த பின்னர் கருத்துத் தெரிவித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொதுச் செய்லாளரும், கல்முனை பிரதி மேயரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான நிசாம் காரியப்பர்,

''அமைச்சர் அதாவுல்லாவுக்கு ஆதரவாகச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரணகல தொடர்ந்து செயற்பட்டு வருகின்றார். இதனால் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளார்.

இது தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரணகலவுக்கு எதிராகப் பல முறைப்பாடுகளை மேற்கொண்ட போதிலும் பொலிஸ் மா அதிபரினால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்துடன், கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகானங்கள் அக்கரைப்பற்றில் வைத்து தாக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரணகலவினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் எமது கட்சியின் வேட்பாளர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்க கோரியும் இதுவரை வழங்கப்படவில்லை என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது'' என்றார்.

உயர் நீதிமன்றத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது சிரேஷ்ட சட்டத்தரணிகளான கலாநிதி ஜயம்பதி விக்ரமதுங்க மற்றும் நிசாம் காரியப்பர் ஆகியோர் முன்னிலையாகவுள்ளனர்.(த)




மட்டக்களப்புக்கு நேற்று பயணம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றினார்.

## 17 வயதுச் சிறுமிக்கு கத்திக் குத்து

கொழும்பு,செப் 4

கெக்கிராவ திப்பட்டுவயில் 17 வயதான சிறுமியொருவர் நேற்றுக் காலை கத்தியால் குத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காதல் விவகாரமொன்றின் காரணமாக இவர் இளைஞன் ஒருவனால் கத்தி யால் குத்தப்பட்டதாகவும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த சிறுமி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு வடக்கில் இதுவரை 2 முறைப்பாடுகள்

## வடமாகாணக் காரியாலயம் விசாரிக்கிறது

**பொலிஸார் தொடர்பாக முறைப்பாடுகள் மாத்திரமே தேசிய பொலிஸ் ஆணைக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால் காணிப்பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளே அதிகமாகக் கொண்டு வரப்படுகின்றன.**

யாழ்ப்பாணம், செப்.4

வடமாகாணத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பிராந்தியக் காரியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 2 மாதங்கள் கடந்துள்ள போதும் இதுவரை 2 முறைப்பாடுகளே கிடைக்கப்பெற்றுள்ளன. அந்த முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் நடைபெற்று வருவதாக வடமாகாணத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணிப்பாளர் க.சிறீதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் வடமாகாணக் காரியாலயம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ். மாவட்ட செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

பொலிஸார் தொடர்பாக முறைப்பாடுகள் மாத்திரமே தேசிய பொலிஸ் ஆணைக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும். பலர் இதுவரையில் முறைப்பாடுகள் செய்ய வந்தபோதும், பொலிஸ் சம்பந்தமான முறைப்பாடுகள் எவற்றையும் அவர்கள் கொண்டு வரவில்லை.

காணிப் பிரச்சினை தொடர்பிலேயே அதிக முறைப்பாடுகளை அவர்கள் கொண்டு வருகின்றார்கள்.

இரண்டு மாதங்களில் பொலிஸ் சம்பந்தமான இரு முறைப்பாடுகள் மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ள. அந்த முறைப்பாடுகள் தொடர் பில் நாம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றோம்- என்றார். (த-5)

# கூட்டமைப்பு வேட்பாளர் சுரேஸ்குமாருக்கு பிணை

குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் சுரேஸ்குமார் நேற்று திங்கட்கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பட்டியலில் கிழக்கு மாகாண சபை தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் சுரேஸ்குமார், நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தை மீறி ஆஸ்திரேலியாவுக்கு மீன்பிடி படகுகள் மூலம் திருகோணமலையிலிருந்து சட்டவிரோதமான முறையில ஆள்களை கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த மாதம் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

விசாரணைகளுக்காக நேற்று இவர் திருகோணமலை நீதிவான் நீதிமன்ற நீதிவான் யூ.எல்.ஏ.அஸ்கரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது, சுரேஸ்குமாரை 10 இலட்சம் ரூபா காசு பிணையிலும் ஆறு பேரின் சரீர பிணையிலும் நிபந்தனையின் கீழ் விடுவித்தார் நீதிவான். (ங)

# தமிழக மீனவர் 28 பேர் விடுதலை

சென்னை, செப் 4

கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டு இருந்த தமிழக மீனவர்கள் 28 பேரை பிடித்துச் சென்ற இலங்கை கடற்படை விசாரணைக்குப் பின்னர் அனைவரையும் விடுதலை செய்துள்ளது.

நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த சாமிநாதன், சுப்பிரமணியன், சசிக்குமார், சிங்காரவேல் ஆகியோருக்குச் சொந்தமான விசைப்படகில் கடந்த 23ஆம் திகதி 28 மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர்.

அவர்கள் கச்சத்தீவு அருகே கடந்த ஒரு வாரமாக மீன் பிடித்து விட்டுக் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது அவர்களை வழிமறித்த இலங்கைக் கடற்படை, கப்பலில் இருந்தோர் எல்லை தாண்டி வந்ததாகக் கூறி படகுகளில் இருந்த மீனவர்களைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் படகுகளில் இருந்த 28 மீனவர்களையும் கைது செய்து மன்னாருக்கு அழைத்துச் சென்றனர். அவர்களிடம் விசாரணை நடத்திய பின்பு அனைவரையும் எச்சரிக்கை செய்து விடுதலை செய்தனர். கடத்தப்பட்ட மீனவர்கள் அனைவரும் நேற்றுமுன்தினம் கரை திரும்பினர். (த)

## ஆஸி. செல்ல முயற்சி செய்த கிளிநொச்சி இளைஞர் கைது

**முகவரைச் சந்திக்க, கரூர் பஸ் நிலையத்தில் நின்றபோதே பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

சென்னை,செப் 4

ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல, முகவரைச் சந்திக்கச் சென்ற இலங்கை அகதியைக் கியூ பிரிவுப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சியை சேர்ந்த நிரோஜன் (வயது-23) எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருந்துள்ளார்.

இவர் ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமான முறையில் செல்வதற்காக, கரூரில் உள்ள முகவரைச் சந்திக்க, கரூர் பஸ் நிலையத்தில் நின்றுள்ளார்.

அங்கு ரோந்தில் ஈடுபட்டிருந்த கியூப் பிரிவுப் பொலிசார், நிரோஜனைப் பிடித்து விசாரித்ததில், மண்டபம் அகதிகள் முகாமைச் சேர்ந்தவர் எனத் தெரிய வந்தது. நிரோஜன் தற்போது மண்டபம், கியூ பிரிவுப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (த)

## கம்பி எண்ண வைத்த கசிப்பு

250 மில்லிலீற்றர் கசிப்பை சட்டவிரோதமாக வைத்திருந்தவர்களுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 2 மாதச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

புங்குடுதீவைச் சேர்ந்த குறித்த சந்தேக நபரை பொலிஸார் கைதுசெய்து, ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதிவான் ஆர். எஸ் மகேந்திரராஜாவிடம் நேற்று முற்படுத்தினார்.

சந்தேகநபர் தன்மீதுதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு65ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. எனினும் குறித்த சந்தேக நபர் அபராதத்தைச் செலுத்த தவறியதால் அவருக்கு 2 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ங-4)

# இலங்கையில் அமைதியை அமெரிக்கா உறுதி செய்யும்

## சென்னையில் அமெரிக்கத் துணைத்தூதுவர்

சென்னை,செப் 4

இலங்கையில் இனி மேல் எத்தகைய தவறுகளும் நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதும், அமைதியை உறுதிசெய்வதுமே அமெரிக்காவின் நோக்கம் என்று சென்னையில் உள்ள அமெரிக்காவின் துணைத் தூதுவர் ஜெனிபர் ஏ மக் இன்ரைர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அமைதியை உறுதி செய்வதும், மேற்கொண்டு எத்தகைய தவறுகளும் நடக்காமல் இருக்க உத்தரவாதமளிப்பதும் அமெரிக்காவின் முக்கிய நோக்கம். முக்கிய பிரச்சினைகளில் சிறிலங்கா முன்னோக்கி செல்லும் நிலையில், அனைத்துலகச் சமூகத்தின் ஏனைய கூட்டாளிகளுடன் இணைந்து இலங்கைக்கு ஆதரவளிக்க அமெரிக்கா தயாராகவே உள்ளது.

குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், புனர்நிர்மாணத்தை ஊக்குவிக்கவும், அரச - தனியார் கூட்டு முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு அமெரிக்கா [illegible] மேலும் கூறியுள்ளார். (த)

# ஆஸி. நோக்கிப் பயணித்த பலரின் நிலை தெரியவில்லை

மன்னார், செப். 4

மன்னார் மாவட்டத் தில் இருந்து கடல் வழி யாக ஆஸ்திரேலியா சென்ற பலரது நிலை இதுவரை என்னவென்று தெரியாத மையால் அவர்களுடைய குடும்பங்களும், உறவினர் களும் பெரும் துயரத்தில் ஆழ்ந்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

தற்போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சம் ரூபா பணத்தைக் கொடுத்து படகுகள் மூலம் ஆஸ்திரேலியா செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் ஆஸ்திரேலியா செல்வதாகக் கூறிப் புறப்பட்டுச் சென்றுள்ளனர். இவர்களில் பலர் ஆஸ்திரேலியா சென்றடைந்த நிலையில் தமது குடும்பத்தாருடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர்.

ஆனால் பெரும்பாலானோர் இதுவரை எந்தவிதத் தொடர்புகளும் இன்றி இருப்பதாக அவர்களது உறவினர்களும், குடும்பத்தினரும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

பலர் கடலில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (த-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் அபாயம்

## தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்

*தென்மராட்சி, செப் 4*

***தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ளதாகச்சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. அண்மைய மழையின் பின்னர் மட்டுவில், மீசாலை, வரணி ஆகிய இடங்களில் டெங்கு நோயினால் மூவர் பாதிக்கப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டதையடுத்து சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளனர்.***

டெங்கு நோய் காணப்பட்ட பிரதேசங்களில் அனைத்து இடங்களிலும் புகையூட்டல் பணிகளை மேற்கொண்டுள்ளதுடன் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை இனங்கண்டு அவற்றினை அழிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு பிரிவிலும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய பற்றைக் காணிகளை துப்புரவு செய்யுமாறு எச்சரிக்கை 'ஸ்ரிக்கர்' ஒட்டப்பட்டு வருவதாகவும், குறித்த தினத்துக்குள் துப்புரவு செய்யப்படா விடின் காணியின் உரிமையாளர்கள் மீது அல்லது பராமரிப்பாளர் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாவதை தடுக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு சுகாதாரப்பகுதியினரும் பொலிஸாரும் கூட்டாக வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

மழை காலம் நெருங்குவதால் முன்கூட்டியே டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுமாறு பிரதேச மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயாளி என இனங்காணப்பட்டவர்களில் ஒருவர் மட்டுமே கொழும்பிலிருந்து வந்ததாகவும் ஏனைய இருவரும் இடங்கு டெங்கு நுளம்புகளால் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகள் ஆரம்பித்துள்ளதால் நிர்வாகத்தினர் பாடசாலைஅபிவிருத்திச் சங்கத்தினூடாக சிரமதானங்களை மேற்கொண்டு மாணவர்களை டெங்கு நோயிலிருந்து பாதுகாக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-9)

# அடியார்களுக்கு இடையூறு விளைவித்தால் நடவடிக்கை

## சுதுமலையில் பொலிஸார் எச்சரிக்கை

வலி.தென்மேற்கு செப்.4

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கு வரும் அடியார்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படும் இளைஞர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள மானிப்பாய் பொலிஸார், பூசை நேரங்களைத் தவிர ஆலய மண்டபத்திலோ பின்புறமாகவுள்ள வற்றாப்பளை.அம்மன் சுற்றாடலிலோ அநாவசியமாகக் கூட்டம் கூட்டமாக இருக்கவேண்டாமென்றும் எச்சரிக்கை செய்துள்ளனர்.

பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்திலும் சுற்றாடலிலும் இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக நின்று வீண் பொழுது போக்குவதால் ஆலயத்துக்கு வரும் அடியார்கள் குறிப்பாக இளம்பெண்கள் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். ஆலயத்துக்கு வரும் பெண்களின் பல சைக்கிள்களும் திருடப்பட்டுள்ளன.

சில தினங்களுக்கு முன்பு ஆலய வீதியால் சென்ற வாலிபர் ஒருவர், மேற்படி இளைஞர்களால் மிரட்டப்பட்டதைத் தொடர்ந்து ஸ்தலத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

வீதியில் நின்று அடாவடித் தனம் புரியும் இளைஞர்களைப் கட்டுப்படுத்துவதற்கு முன்வந்துள்ள மானிப்பாய் பொலிஸார் ஆலய மண்டபத்திலோ சுற்றாடலிலோ பூசை நேரங்களைத் தவிர அநாவசியமான முறையில் நடமாடுவதையும் கூட்டம் கூட்டமாக இருப்பதைத் தவிர்க்குமாறு தெரிவித்துள்ளதுடன் ஆலயத்திலுள்ள விளம்பரப் பலகையிலும் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.(த-111)

# கொக்குவில் மீன்சந்தை கட்டடப் பணி துரித கதியில்

யாழ்ப்பாணம், செப்.4

நல்லூர் பிரதேச சபையினால் கொக்குவில் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் மீன் சந்தையின் கட்டுமானப் பணிகள் விரைவுபடுத்தப் பட்டுள்ளதாக சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

இந்த மீன் சந்தையை இந்த ஆண்டுக்குள் பொது மக்களின் பயன்பாட்டுக்கெனத் திறந்து விடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அதற்காகக் கட்டடப் பணிகள் துரிதமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சபையின் நிதி உதவியுடன் இந்த மீன் சந்தை அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-17)

# மோசமாகச் சேதமான விடுதியில் தொடர்ந்தும் நோயாளர்கள் சேர்ப்பு

## யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்த அவலநிலை


யாழ்ப்பாணம்,செப்.4

யாழ்.போதனா வைத்தியசாலையின் 22 ஆம் விடுதிக் கட்டடம் சேதமடைந்துள்ள நிலையில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்தும் நோயாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த விடுதியை முற்றாக இடித்துக் கட்டுவதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் 22 ஆம் இலக்க விடுதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.





பிரசவ விடுதியான இந்த விடுதியில் தொடர்ந்தும் தாய்மார்களும், குழந்தைகளும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர்.

கட்டடம் மோசமாகச் சேதமடைந்து வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கட்டத்தின் சிமெந்துப் பூச்சுகள் கீழே விழுந்துள்ளன. இதனால் உள்ளே இருக்கும் இரும்புக் கம்பிகள் வெளியில் தெரிகின்றன.

இவ்வாறானதொரு ஆபத்து நிறைந்த விடுதியில் தொடர்ந்தும் நோயாளர்கள் தங்க வைக்கப்பட்டு வருகின்றமை குறித்து விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவிடம் கேட்டபோது,

மேற்படி விடுதியின் புனரமைப்புத் தொடர்பில் கலந்துரையாடி வருகின்றோம்.

குறித்த விடுதியிலிருந்து வேறிடத்துக்கு நோயாளர்களை மாற்றுவதற்கு இடவசதி போதியதாக இல்லை.

இருப்பினும் மேற்படி விடுதியை முற்றாக இடித்து புதிய விடுதி அமைப்பதற்கு உரிய வேலைகளை மிக விரைவில் ஆரம்பிக்க இருக்கின்றோம்- என்றார். (த-5)

# படை முகாம்கள் அமைந்திருக்கும் தனியார் காணிகள் விடுவிக்கப்படும்

## தென்மராட்சிக் கூட்டத்தில் படைத்தளபதி உறுதி

தென்மராட்சி, செப்.4

தென்மாரட்சிப் பிரதேசத்தில் படைமுகாம்கள் அமைந்துள்ள தனியார் காணிகள் விரைவில் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும். தனியார் காணிகளை இடம்மாற்றுவதற்கு பிரதேசத்தில் உள்ள அரச காணிகளை வழங்குமாறு அரசிடம் கோரியுள்ளோம்.

அரச காணிகள் கிடைத்ததும் முகாம்கள் இடம்மாற்றப்பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும்.

இவ்வாறு உறுதிபடக் கூறினார் 523 படையணியின் புதிய கட்டளைத் தளபதி கேணல் விஜயசூரிய.

நேற்றுத் திங்கட்கிழமை தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்கள், படையினரின் பாவனையில் உள்ள பாடசாலைகள் மற்றும் தனியார் காணிகளை மீள வழங்கக் கோரி முறையிட்டனர்.

**முதற்கட்டமாக மீசாலை வீரசிங்கம் ஆரம்பப்பாடசாலை காணி விடுவிக்கப்படும்**

அவ்வேளையில் பதிலளித்த படையதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலைக் காணியில் இருந்தும் இம்மாதம் வெளியேறி பாடசாலை நிர்வாகத்திடம் கையளிப்பதாகவும் கரம்பகம் அ.த.க. பாடசாலையில் படையினரின் பயிற்சி முகாம் இருப்பதால் பயிற்சி முகாமை வேறு இடத்துக்கு மாற்றி அந்தப் பகுதியில் வெடி பொருள்கள் அகற்றிய பின்னர் கையளிக்கப்படும் எனவும் கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையம் அமைந்திருந்த காணியின் ஒரு பகுதியில் தங்கியிருந்த சிறு முகாம் இம்மாத இறுதிக்குள் கையளிக்கப் படும் எனவும்,

தனிப்பட்ட காணிகளை சுவீகரிக்கும் எண்ணம் எமக்கில்லை. அரசினால் முகாம்கள் அமைக்க காணிகள் வழங்கப்பட்டதும் நிச்சயமாக தனியார் காணிகளை கையளிப்போம் என உறுதி கூறுகின்றேன எனவும் அவர் அங்கு கூறினார். (த-9)

# காரைநகர் மக்களின் குடிதண்ணீருக்கு இரக்கம் கொண்டு உதவி செய்யுங்கள்

## பிரதேச சபை உப தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.4

காரைநகர் பிரதேச மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவுமாறும் காரைநகர் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் குடிதண்ணீர் விநியோகத்துக்காக அயல் பிரதேசங்களில் உள்ளவர்கள் நன்னீர் கிணறுகளை வழங்கி உதவுமாறும் சபையின் உப தலைவர் ச.துர்க்கேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர்அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காரைநகர் பிரதேச மக்கள் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் தமது அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்வதற்கு தேவையான நீரைப் பெறுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். காரைநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள 80 வீதமான கிணறுகள் முற்றுமுழுதாக வற்றிவிட்டன. அத்துடன் எமது பிரதேசத்தில் அமைந்துள்ள சிறிய குளங்களும் கேணிகளும் முழுமையாக வறண்டு காணப்படுவதால் கால்நடைகள் கூட அருந்துவதற்கு நீரின்றி தவிக்கின்றன.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலே வறட்சிக் கால குடிதண்ணீராக அரச அதிபரின் அனுசரணையுடன் எமது பிரதேசவாசிகளுக்குத் தினமும் ஒருவருக்கு 4 லீற்றர் என்ற வீதம் வழங்குவதற்குப் பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த நிலையில் மேற்குறிப்பிட்ட அளவு நீரைப் பெறுவதற்கு கூட எமது பிரதேச சபையால் முடியவில்லை. எமது மக்களின் பரிதாப நிலையைக் கருத்தில் கொண்டு எமது மக்களின் நன்னீத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு எமது சக பிரதேச சபைகளையும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களையும் பொது அமைப்புக்களையும் உடனடியாக உதவி வழங்க முன்வருமாறு கோருகிறோம்.

அத்துடன் மூளாய், வட்டுக்கோட்டை போன்ற அயல் கிராமங்களில் வசிப்பவர்கள் தமது உறவுகளுக்கு உதவி புரியும் எண்ணத்துடன் உரிய கிணறுகளை எமக்கு அடையாளப்படுத்தினால் அந்த நீரை எமது சபை நீர்த்தாங்கியின் உதவியுடன் பெற்று மக்களுக்கு விநியோகிப்போம். மேற்படி விடயம் தொடர்பாக எமக்கு உதவ முன் வருவோர் எமது பிரதேச சபையுடனோ அல்லது பிரதேச சபை தொலைபேசி இலக்கம் 021 222 6447 ஊடாகவோ உடனடியாகத் தொடர்பு கொள்ள முடியும் என்றுள்ளது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே நாளுக்குள்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கல்வி அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டியுள்ளது.

''ஏறத்தாழ மூன்று மாதங்களாக எமது பாடசாலையின் அதிபர் நியமனம் தொடர்பாக நிலவி வரும் குழப்ப நிலையினால் வேதனையுறுகின்றோம். பொறுப்பான பதவியில் இருக்கும் அலுவலர்கள் இவ்வாறு தமது கடமையைச் செய்யாதிருப்பது மிகவும் விரக்தியை ஏற்படுத்துகிறது. இவர்களின் பொறுப்பற்ற தன்மை யாழ்ப்பாணத்தின் கல்வித் தராதர வீழ்ச்சிக்கும் பாடசாலைகளின் நிர்வாக ஒழுங்கீனத்துக்கும் அடிகோரும். இந்த நிலைமை இன்னும் 3 மாதங்களில் சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களின் கல்வியைப் பெரிதும் பாதிக்கும்'' என்று பழைய மாணவிகள் சங்கக் கடிதத்தில் காட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-01)

## வீட்டுச்சுவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மேலும் தெரியவருவதாவது-

கடந்த செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பிலுள்ள தனது வீட்டை துப்புரவு செய்துகொண்டிருந்த வேளை சுவர் இடிந்து வீழ்ந்ததில் அதில் சிக்குண்டார். உடனடியாக தர்ஷினி புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து முள்ளியவளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பின்னர் முள்ளியவளையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (16)

## வன்முறைகள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இதனடிப்படையில் 311 தேர்தல் வன்முறைச் சம்பவங்களும், தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என அந்த ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

## நாவாந்துறை கிறீஸ்பூத...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மாதத்துக்கு ஒத்திவைத்தார். நீதிவான் பெ.சிவகுமார்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி இரவு நாவாந்துறையில் கிறீஸ்பூதம் நடமாடிய விவகாரத்தின் பின்னர் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது.

இதன்பின்னர் அன்றிரவு நாவாந்துறையில் உள்ள வீடுகளுக்குள் புகுந்த இராணுவத்தினர் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதலை நடத்தியிருந்தனர். இந்த கொடூரத் தாக்குதலில் பெண்கள் இருவர் உட்பட 102 பேர் காயமடைந்தனர். அவர்களில் சுமார் 20 இற்கும் மேற்பட்டவர்களது கைகால்கள் அடித்து முறிக்கப்பட்டன. இராணுவத்தினரே தம்மைத் தாக்கியதாக காயப்பட்டவர்கள் தெரிவித்திருந்தனர்.

பொதுமக்களை இரவோடு இரவாகக் கைது செய்த பொலிஸார், அவர்களை யாழ். பொலிஸ் நிலையத்தில் மருத்துவ சிகிச்சைகள் மறுக்கப்பட்ட நிலையில் மனிதாபிமானமற்ற முறையில் 8 மணி நேரமாகத் தடுத்து வைத்திருந்தனர். மறுநாள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த விவகாரம் தொடர்பான வழக்குவிசாரணை பலதடவை நீதிமன்றுக்கு வந்து ஒவ்வொரு தடவையும் ஒத்திவைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ங-4)

## தமிழருக்கு உரிமை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அரியாலை கிழக்கு நாவலடி, அச்சுவேலி மேற்கு செல்வநாயகபுரம் தந்தை செல்வா சனசமூக நிலையம் ஆகிய பகுதிகளுக்கு பயணம் செய்து கடந்த வருடம் அங்குள்ள மக்களுக்கு ஷா நிறுவனம் வழங்கிய சூரிய மின் கலங்களின் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்ததுடன் மக்களின் தேவைகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

1970 , 1971 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த முன்னாள் ஜனாதிபதி 40 வருடங்களின் பின்னர் நேற்று வருகை தந்ததை அடுத்து பொது மக்கள் இவரை ஆர்வத்துடன் சென்று பார்வையிட்டதுடன் அவரின் வருகையையிட்டுத் தாம் மகிழ்ச்சியடையவதாகவும் தெரிவித்தனர்.

வரவேற்பு நிகழ்வுகள் எதுவும் இடம்பெறாத நிலையில் ஷா நிறுவன அதிகாரிகளுடன் அப்பகுதிகளுக்கு அவர் சென்று மக்களுடன் அளவளாவினார்.

சந்திரிகா குமாரதுங்க உதயனிடம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர் முடிந்தமை குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால் வேறு வேறு அரசுகளின் கீழ் கடந்த 25 வருடங்களாக நடந்த போரால் இந்த மக்கள்தான் பெரிதும் வேதனைப்பட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்.

போர் அவர்களின் வாழ்க்கையை மிக மோசமாகப் பாதித்திருக்கிறது. வீதிகள், வீடுகள் என எல்லாவற்றையும் சேதமாக்கி இருக்கிறது போர்.

இங்கு பல வேலைகள் ஆற்றப்பட வேண்டியிருக்கிறது. அரசு மேலும் பல வேலைகளைச் செய்ய வேண்டி இருக்கிறது. அத்துடன் தனிப்பட்ட அமைப்புக்கள், உதாரணத்துக்கு என்னுடையதைப் போன்றன மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவும் ஆற்ற வேண்டிய பணிகள் நிறைய உண்டு. அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்கிறேன். ஆனாலும் இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டியிருக்கிறது.

இந்த மக்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகள் அனைத்தும் கிடைத்து அவர்கள் இயல்பான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதைத்தான் நான் விரும்புகின்றேன்.

இங்கே பணிகள் இப்போது நகரும் வேகத்தைவிட விரைவாகச் செய்து முடிக்கப்பட்டிருக்கலாம். போர் முடிந்ததற்குப் பின்னரான காலத்தில் மிக விரைவாக இந்தப் பணிகளைச் செய்து முடித்திருக்கலாம்.

ஆழிப்பேரலையால் எமது கரையோரங்கள் பாதிக்கப்பட்டபோது எனது அரசு மிகத் துரிதமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் பணியாற்றியது. அப்படி இங்கும் வேலைகள் வேகமாக, விரைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும்.

போர் முடிந்ததன் பின்னர் கடந்த மூன்று ஆண்டுகளில் தெற்கில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் - சிங்களவர்கள் மற்றும் ஏனையவர்கள் - இந்தப் பகுதிகளையும் மக்களையும் பார்ப்பதற்காக வந்து திரும்பியிருக்கிறார்கள். அவர்கள் சுற்றுலாப் பயணங்களாகவே - மகிழ்ச்சிகரமான சுற்றல்களாகவே - இங்கு வந்திருந்தார்கள். என்னிடமும் கேட்டார்கள், நீங்கள் போகவில்லையா என்று, நான் இல்லை என்று சொன்னேன்.

''வெற்றிகொள்ளப்பட்ட நிலங்களையும் தமிழ் மக்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு நாம் வரமுடியாது. அவர்களுக்கு நாம் ஏதாவது செய்தாக வேண்டும். ஏனெனில் இந்த மக்கள் இராணுவத்தின் கரங்களாலும் புலிகளின் கரங்களாலும் பல சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்திருக்கிறார்கள். எனவே அவர்களது நல்வாழ்வுக்காக எதையாவது செய்த பின்னர்தான் நான் போவேன்'' என்று அவர்களிடம் கூறினேன்.

எனவே எனது அமைப்பு மூலம் ஏழை மக்களுக்கு உதவித் திட்டத்தை நிறைவேற்றினோம். 100 வீடுகளுக்கு சோலர் மூலம் மின்சாரம் விநியோகித்தோம். வேறு சிலவற்றையும் நாம் செய்ய இருக்கிறோம். அவற்றை முடித்துவிட்டுத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன்.

கடைசியாக 70 களின் முற்பகுதியில் நண்பர்கள் சிலருடன் நான் இங்கு வந்திருந்தேன். யாழ்ப்பாணத்துக்கு சும்மா வந்திருந்தோம். 5 நாள்கள் இங்கே தங்கியிருந்தோம். இங்கு கடல் மிக அழகானது. நாங்கள் மக்களுடன் பேசினோம். பின்னர் 80 களில் போர் ஆரம்பமானது. அதன் பின்னர் என்னால் வரமுடியவில்லை. பல தடவைகள் இங்கு வரவேண்டும் என்று நான் விரும்பியிருக்கிறேன். ஆனால் முடியவில்லை.

இந்தப் பயணத்தில் என்னால் இங்குள்ள பெண்களுடன் பேச முடிந்தது. அவர்களின் பிரச்சினைகளை அறிய முடிந்தது. பல பெண்கள் போரில் தங்களது கணவன்மார்களை இழந்துள்ளார்கள். எந்த வித வருமானமும் இன்றிப் பலர் தங்களது வாழ்க்கையைக் கடத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பல இடங்களில் தற்காலிகமான கூலித் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களை நம்பியே பல குடும்பங்கள் வாழ்வதைக் காணக்கூடியதாக இருந்தது. எனவே இங்கு செய்ய வேண்டியவைகள் நிறையவே இருக்கின்றன - என்றார் சந்திரிகா குமாரதுங்க.

## கடலில் மிதந்த போத்தலில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வாந்தி எடுத்தனர். அதில் ஒருவரின் நிலை மிக மோசமான கட்டத்தை அடைந்தது. உடனடியாக அவர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியர்கள் இளைஞர்கள் அருந்திய பானத்தைச் சோதனை செய்தபோது அது சடலங்களைப் பழுதடையாமல் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தும் திரவம் என்று தெரியவந்தது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த (வயது-28) இளைஞன் அதி தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டபோதும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் 1 மணியளவில் உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-12)

## இந்தியத்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கும் வகையில், அசோக் கே காந்தாவின் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு இந்தியா நீடித்துள்ளது. அசோக் கே காந்தாவுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் கடந்த சில மாதங்களாகச் சுமுகமான உறவை விடவும் குறைந்த மட்டத்திலான உறவுகளே காணப்படுகின்றன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா, கடைசியாகக் கொழும்பு வந்த போது, அதிகாரபூர்வமற்ற வகையில், அசோக் கே காந்தா குறித்து இலங்கை செய்த முறைப்பாடு அவருடனான உறவுகளைச் சீரழித்து விட்டது.

இலங்கை தொடர்பாக அசோக் கே காந்தா விரும்பத்தகாத அறிக்கைகளை இந்தியாவுக்கு அனுப்பி வருகிறார் என்று இலங்கை நம்புவதே, இந்த முறிவுக்குக் காரணமாகும்.

அசோக் கே காந்தாவுக்குச் சேவை நீடிப்பு அளிக்கப்பட்டதால், புதிய தூதுவர் மூலம் உறவுகளைக் கட்டியெழுப்பலாம் என்ற இலங்கையின் எதிர்பார்ப்பு நொருங்கிப் போய் விட்டது.

இது நன்றாகக் கணித்து இலங்கையின் முகத்தில் கொடுக்கப்பட்ட இராஜதந்திர அறை என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. (த)

## கிழக்கு மாகாண சபைத் தேர்தல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வையின் கீழ் தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினைகளைக் கையாளவேண்டிய நிலைமைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத் தேர்தலை நடத்துவதன் நோக்கம் குறித்து அரச அமைச்சர்களே பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார்கள். ''சர்வதேச சமூகத்தின் முயற்சிகளைத் தோற்கடிக்க வேண்டும். கிழக்கு மாகாணத் தேர்தலில் அரசு வெற்றி பெற்றால், தமிழ் - முஸ்லிம் மக்கள் அரசை ஆதரிக்கின்றார்கள். எனவே, சர்வதேச சமூகம் எந்தவிதமான அழுத்தங்களையும் அரசு மீது பிரயோகிக்கத் தேவையில்லை என்பதை வலியுறுத்த முடியும்''.

அதற்கு இந்தத் தேர்தலில் அரசு வெற்றிபெறவேண்டும் என்று அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இதுதான் இந்தத் தேர்தலுடைய பின்னணியாகும்.

இந்தத் தேர்தலில் அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து போட்டியிடும் என்றே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நம்பினார். அவ்வாறு இணைந்து போட்டியிட்டால் வெற்றி இலகுவானதாகிவிடும். ஆனால் தற்போது மு.காங்கிரஸ் தனித்துக் களமிறங்கியுள்ளது. இதனால் நிலைமை முழுமையாக மாறியிருக்கின்றது. அரசு எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியாததொரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழ் பேசும் மக்கள் குறிப்பாக, தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் எவ்வாறு வாக்களிக்கவுள்ளனர் என்பதை சர்வதேசம் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்குப் போதியதொரு சுயாட்சி தமக்கு வேண்டும் என்கின்ற இலக்கின் அடிப்படையில் வாக்களிக்கப் போகின்றார்களா?

இதன்மூலமாக சர்வதேசத்தின் பங்களிப்பு தமக்குத் தேவை என்றும், அது தொடரவேண்டும் என்கிற கருத்தை முன்வைக்கப் போகிறார்களா? அல்லது மஹிந்த ராஜபக்ஷ கூறுவதுபோல் என்னை நம்புங்கள், உங்களில் நான் ஒருவன் என்பதை நம்பி வாக்களிக்கப் போகின்றார்களா? என்பதை சர்வதேச சமூகம் அவதானித்துக்கொண்டிருக்கிறது. இதற்குப் பதிலளிக்க வேண்டியது நமது மக்களின் கடமையாகும்.

அதற்கானதொரு சந்தர்ப்பமாகவே இந்தத் தேர்தல் அமைந்துள்ளது. சர்வதேச சமூகத்துக்கு இதன் மூலம் நாம் தெளிவானதொரு செய்தியை வழங்கமுடியும்.

இன்னும் சில மாதங்களில் வடக்கு மாகாணசபைத் தேர்தலும் இடம்பெறவுள்ளது. அந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயமாக வெற்றிபெறும். அதன்போது, வடமாகாணமும், கிழக்கு மாகாணமும் இணைந்து பல விடயங்கள் தொடர்பில் ஒருமித்துச் செயற்படக் கூடியதொரு நிலைமை உருவாகவேண்டும்.

ஆனால், எமது தமிழ் மக்கள் கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும் வாழவேண்டும். பாதுகாப்புடன் வாழ வேண்டும். எமது மக்கள் போதிய சுயாட்சியின் மூலமாகத் தங்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றி, சரித்திர ரீதியாக வாழ்ந்துவந்த மண்ணில் தொடர்ந்தும் அவர்கள் வாழவேண்டும். அதற்கு அவர்களுக்கு உரித்துண்டு. அதை எவரும் மறுக்க முடியாது - என்றார்.

## பல்கலைக்கழகங்களுக்கு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பழைய பாடத் திட்டம் மற்றும் புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையை தனித் தனிப் பட்டியல்களாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் உயர் நீதிமன்றம் நேற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்கியிருந்தது.

மாணவர்களின் தேசிய மற்றும் மாவட்ட நிலை தொடர்பான புதிய பட்டியல்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் தாமதங்கள் ஏதுமின்றி வெளியிடுமாறு பரீட்சைகள் ஆணையாளருக்கு அறிவுறுத்தும்படியும் பிரதம நீதியரசர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குத் தெரிவித்தார்.

முன்னதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சார்பில் நீதிமன்றத்தில் முற்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, இசற் புள்ளிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நான்கு வழிமுறைகளைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அந்த வழிமுறைகளின் கீழ், முதலாவது முறைப்படி கணக்கிட்டால் 3,675 பேரை மேலதிகமாக பல்கலைக்கழகங்களுக்குச் சேர்த்துக்கொள்ள முடியும். இரண்டாவது வழிமுறையின் கீழ் கிட்டத்தட்ட 3,048 மாணவர்களை மேலதிகமாகச் சேர்த்துக்கொள்ள முடியும். மூன்றாவது வழிமுறையின் கீழ் 4,928 மாணவர்களையும் நான்காது வழிமுறையின் கீழ் 4,457 மாணவர்களை மேலதிகமாக இணைத்துக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மூன்றாவது வழிமுறையில் மற்றைய மூன்றையும்விட மேலதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியும் என்பதால் பிரதம நீதியரசர் அதனைப் பரிந்துரைத்தார்.

இந்தக் கல்வி ஆண்டில், அனைத்துப் பீடங்களுக்கும் எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை 25 வீதத்தினால் அதிகரிக்கும்படியும் பிரதம நீதியரசர் தனது பரிந்துரையில் தெரிவித்தார். இந்த ஆண்டுக்கான மாணவர் எண்ணிக்கை 21 ஆயிரம் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் 12ஆம் திகதி வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (உ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காத்திரமான வியூகம் எதனையும் இனிமேலேனும் எதிர்பார்க்கலாமா?

பாரதூரமான மனித உரிமை மீறல்கள் குறித்து, இலங்கையில் விசாரணை எதுவும் நடத்தப்படுவதில்லை; அதனால் அவை சம்பந்தமாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதும் இல்லை. அதுமட்டுமன்றி, மனித உரிமைகள் தொடர்புள்ள குற்றச்செயல்களுக்குத் தண்டனை விதிக்கப்படுவதும் இல்லை -

மனித உரிமைக் குற்றங்களுக்குத் தண்டனை விதிக்கப்படாமையால், அந்நாட்டில் அவ்வகைக் குற்றங்கள் பல்கிப்பெருகி வருகின்றன -

அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்படுவது தொடர்பாகப் பக்கச் சார்பற்ற, விரிவான விசாரணைகள் நடத்தி சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே, மனித உரிமை மீறல்களைத் தடுக்க முடியும். ஆனால் இலங்கை அரசு இது விடயத்தில் மெத்தனப் போக்குடனேயே நடந்து கொள்கிறது-

இவ்வாறு தொட்டுக் காட்டியிருக்கிறது, அனைத்துலக மன்னிப்புச் சபை.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபைக்கு, அண்மையில் அனுப்பி வைத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே, மனித உரிமைகள் இலங்கையில் உதாசீனம் செய்யப்படுவது குறித்து மன்னிப்புச் சபை விஸ்தாரமாக எடுத்துரைத்துள்ளது.

மிகப்பெரிய, மனித சமுதாயத்துக்கு ஒவ்வாத மனித உரிமை மீறல்கள் இந்த நாட்டில் தண்டிப்பார் இன்றி, மேன்மேலும் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் கட்டிக்காட்டியுள்ளதுடன், அதற்கான உதாரணங்களையும், விவரங்களையும் மன்னிப்புச் சபை விலாவாரியாகப் பட்டியல் இட்டிருக்கிறது.

ஆள்களை பலவந்தமாகக் கடத்துதல், கடத்திக் கொலை செய்தல், கைது செய்பவர்களைச் சித்திரவதை செய்தல், காணாமற்போகச் செய்தல் மற்றும் -

குற்றம் ஏதும் சுமத்தப்படாமலும், நீதிமன்ற விசாரணை எதுவும் இன்றியும் பல நூற்றுக் கணக்கானோரை, அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்துடன் நிர்வாக ரீதியாகக் கைது செய்யவும் தடுத்து வைக்கவும் அரசாங்கம் தொடர்ந்தும், பயங்கரவாதத் தடைச் சட்டத்திலேயே தங்கியுள்ளது, நம்பியுள்ளது - என்றும் அனைத்துலக மன்னிப்புச் சபை தனது பிந்திய (ஓகஸ்ட் மாத) அறிக்கையில் விவரமாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் -

தனது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கென, இலங்கை அரசு கடந்த ஜூலை மாதத்தில் வெளியிட்ட தேசிய செயல் திட்டம் (National Plan of Action), திருப்திகரமாக அமையவில்லை என்றும் மன்னிப்புச் சபை, பல காரணங்களை தனது அறிக்கையில் விவரமாகச் சுட்டிக்காட்டி உள்ளது.

இலங்கை அரசின் பிந்திய தேசிய செயல் திட்டம், பெரும் எண்ணிக்கையான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதில் இருந்து நழுவிக் கொண்டுள்ளது என்றும் மன்னிப்புச் சபை கவலை வெளியிட்டுள்ளது.

மேலும், நல்லிணக்க ஆணைக்குழுவின் 285 சிபார்சுகளில் 92 ஐ மட்டுமே நடைமுறைப்படுத்த இலங்கை அரசு முன்வந்துள்ளதாகவும் மன்னிப்புச் சபை மிகுந்த கவலை தெரிவித்திருக்கிறது.

மிகக் குறிப்பாக, மனித உரிமைகளை, மனித உரிமைச் சட்டங்களை மீறியமை தொடர்பில், சுயாதீனமான விசாரணைகள், வழக்குத் தொடரும் ஏற்பாடுகள் எதனையும் செயல்திட்ட அறிக்கை உள்ளடக்கவில்லை. வெறுமனே, இலங்கையின் தற்போதைய நடைமுறைகளை அல்லது ஏற்பாடுகளை மட்டுமே தொட்டுக் காட்டி உள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை பெரும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய முகவர்களையும் பொலிஸாரையும் விசாரணை செய்வதற்கு வகை செய்யும் அரசின் செயல்திட்டம் திருப்திகரமானதாக அமையவில்லை என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை, நெற்றியில் அறைந்தது போன்று கருத்து வெளியிட்டிருக்கிறது.

அது மட்டுமன்றி -

இலங்கை அரசு வழங்கும் உறுதி மொழிகளையும் மற்றும் வாக்குறுதிகளையும் அனைத்துலகம் ஏற்றுத் திருப்திப்படக்கூடாது. அனைத்துலக சமூகம் நீதியான, நியாயமான நல்லிணக்கத்துக்கான தீர்வை செயற்படுத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும்; அழுத்தம் கொடுக்க வேண்டும்-

மிகக் குறிப்பாக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்; அழுத்தம் கொடுக்க வேண்டும். அதனூடாகவே பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உரிய பரிகாரம் கிடைப்பதனை உறுதி செய்ய இயலும் - என்றும் அனைத்துலக மன்னிப்புச் சபை தனது நீண்ட அறிக்கையில் வலியுறுத்தி உள்ளது.

இதற்கிடையில், எதிர்வரும் நவம்பரில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பூகோள கால மீளாய்வுக் கூட்டத்தொடரில் இலங்கை அரசு சார்பாக கலந்துகொள்ள வழக்கம் போல இலங்கையிலிருந்து அமைச்சர்களோ, அல்லது மூத்த அதிகாரிகளோ அனுப்பப்பட மாட்டார்கள். ஜெனிவாவில் உள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவே அது குறித்த விடயங்களைக் கையாள்வார் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. அதாவது, மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடுகள், தன்னைப் பொறுத்தளவில் பெரும் விவகாரமே அல்ல என்பதை வெளிப்படுத்தும் செயற்பாடு இதுவாகும்.

அந்த வகையில், கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற விடாது தடுக்கும் முயற்சியில், இலங்கை அரசின் அமைச்சர்கள் பட்டாளமே ஈடுபட்ட போதிலும் அதில் வெற்றியீட்ட முடியாது போனதால் இம்முறை இது நமக்குப் பிரச்சினைக்குரிய ஒன்றல்ல என்று வெளிப்படுத்துவதற்கான ஓர் உத்தியாகவும் இருக்கலாம் அல்லவா?

மேலும், எதிர்வரும் நவம்பரில் ஐ.நா. மனித உரிமைப் பேரவை உறுப்புரிமை தொடர்பான தேர்தலில் இலங்கை போட்டியிடப் போவதில்லை என்றும் முன்னேற்பாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 47 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றில் 18 ஆசனங்களுக்கான வாக்கெடுப்பே எதிர்வரும் நவம்பரில் நடத்தப்படவுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் ஆசனத்துக்காக 2008 ஆம் ஆண்டில் இலங்கை போட்டியிட்ட போதிலும் வெற்றிபெற முடியவில்லை என்பதால், இப்போது தானாகக் காலை ஏன் சேற்றில் புதைக்க வேண்டும் என்று புத்திசாலித்தனமாக சிந்தித்திருப்பதாகவும் கொள்ளலாம்.

எதுவாயினும், எப்படியாயினும், தன் மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள்என்ற குழியிலிருந்து மேல் எழுவதற்கு எமது அரசு காத்திரமான, நியாயமான ஒரு வியூகத்தை வகுக்கும் என்று எதிர்பார்க்கலாமா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

# அரச நியமனம் வழங்க வேண்டும் அமைச்சு செயலருக்கு 63 மனுக்கள்

## 2010, 2011 பட்டதாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.4

2010, 2011 பட்டதாரிகளுக்கும், டிப்ளோமாதாரிகளுக்கும் நியமனம் வழங்குமாறு கோரி வடக்கு - கிழக்கில் இருந்து 63 இற்கும் மேற்பட்ட மகஜர்களும், கடிதங்களும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்குக் கிடைத்துள்ளன.

பட்டாரி நியமனத் திட்டத்தின் கீழ் ஆண்டு மூப்பின் பிரகாரம் பட்டதாரிகளை உள்வாங்கியும், டிப்ளோமா பட்டாரிகளைப் புறக்கணித்தும் அரசு நியமனகளை வழங்கியுள்ளது.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட 2010-2011 பட்டதாரிகளை உள்வாங்கக் கோரி 63இக்கும் மேற்பட்ட மகஜர்கள், கடிதங்கள் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் இருந்து உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அந்தக் கடிதங்கள் முறையான பரிசீலனை இன்றி உள்ளதாகவும், ஏற்கனவே பயிலுநர் தரத்தில் உள்ள பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட பின்னரே அடுத்த கட்டம் குறித்து தேசிய வரவு-செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம் அறிக்கை சமர்ப்பிப்பார் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை-

எதிர்காலத்தில் பட்டதாரிகளுக்கு மட்டும் நியமனம் வழங்குவது குறித்து ஆராயப்படவுள்ளதாகவும், நான்கு வருட டிப்ளோமாதாரிகளுக்கு நிய மன நடைமுறையில் இடமில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-50)

# நாகர் கோவில் நாகதம்பிரான் ஆலயத்தில் இரவுத் திருவிழா

வடமராட்சி, செப்.4

சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் கோவிலின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் கப்பல் திருவிழா தொடக்கம் சமுத்திர தீர்த்தத் திருவிழா வரையான இறுதி நான்கு தினங்களும் இரவுத் திருவிழாக்களை நடத்துவ தெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பூர்வீக நாகதம்பிரான் சுவாமி கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மருதங்கேணி உதவி அரச அதிபர் ந.திருலிங்கநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த கால போருக்குப் பின்னர் சுமார் 12 வருடகால இடைவெளிக்குப் பின் நடைபெறவுள்ள இந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகி பகல் திருவிழா நடைபெறும். 30 ஆம் திகதி இடம்பெறும் 7ஆம் திருவிழாவான கப்பல் திருவிழா அதனை அடுத்து வரும் வேட்டை, சம்பரம், சமுத்திரத் தீர்த்தத்திரு விழாக்களை இரவிலும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இவற்றில் கப்பல், சமுத்திர தீர்த்தத்திருவிழாக்கள் இரவு தொடக்கம் அதிகாலைவரைக்கும், ஏனைய வேட்டை, சப்பரத்திரு விழாக்கள் இரவு 11 மணி வரைக்கும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரவுத் திருவிழாக்களை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளின் அனுமதியையும், ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வதெனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தர்மகர்த்தா சபை உறுப்பி னர்கள், திருவிழா உபயகாரர்கள் உட்பட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (த-8)

## வாய்க்கால்கள் மூடப்படுவதால் வீதிகளில் தேங்கும் வெள்ளம்

நவாலி, செப்.4

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட வெள்ள்ம் செல்லும் வாய்க்கால்கள் குடியிருப்பாளர்கள் காணிகளால் மூடப்பட்டு வருவதால் மாரிகாலத்தில் வெள்ளம் ஓட முடியாத நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதி, நவாலி பிரதான வீதி, ஆனைக்கோட்டை போன்ற இடங்களில் பிரதேச சபையின் அனுமதியின்றி வாய்க் கால்கள் மூடப்பட்டுள்ளன.

இவ்வாறு வெள்ளம் தேங்குவதால் நுளம்புகள் உற்பத்தியாகி டெங்கு மற்றும் ஏனைய நோய்கள் பரவும் அபாயம் ஏற்படும் எனவும் சுூட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவற்றை நேரில் பார்வையிட்டு வெள் ளம் வடிந்து செல்வதற்கேற்ற ஒழுங் குகளைச் செய்ய வேண்டும் என்று மக்கள் கோரியுள்ளனர். (த-100)

## கைப்பேசியில் ஆபாசம் ஒரு லட்சம் அபராதம் செலுத்தினார்

வடமராட்சி, செப்.4

கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப் படங்களைப் பதிவு செய்து வைத்திருந்த மற்றொரு நபருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸார் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை இச் சந்தேக நபரின் கைத்தொலைபேசியை வாங்கி சோதனையிட்ட போது ஆபாசப் படங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதனையடுத்து இச்சந்தேக நபரை பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தியபோது, சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சில மாதங்களுக்கு முன்னர் கைத்தொலைபேசியில் ஆபாசப்படம் பதிவு செய்து வைத்திருந்த ஒரு சில நபர்களுக்கு இதே போல அபராதம் விதிக்கப்பட்டிருந்தது. (16-8)

# விவசாயிகளுக்கு மானிய உரம்

வரணி வடக்குப் பகுதி காலபோக நெற்செய்கைக்கான மானிய உரம் வரணி வடக்கு விவசாய சம்மேளனத்தினால் வழங்கப்பட உள்ளது.

எனவே மானிய உரத்தைப் பெற விரும்பும் விவசாயிகள் வரணி வடக்கு விவசாய சம்மேளனச் செயலாளர் ச.தியாகராசாவிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். வரணி வடக்கு விவசாயிகளின் நன்மை கருதி இந்த மானிய உரம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (16-8)

# கடும் வறட்சி காரணமாக வீதிகளில் புழுதிப் படலம்

## நோய்த் தாக்கத்துக்கு இலக்காகும் மக்கள்

யாழ்ப்பாணம், செப்.4

கடும் வறட்சி காரண மாக வீதிகளில் கிளம்பும் தூசி மற்றும் புழுதித் தாக்கத்தால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதிப் புனரமைப்புக்காக வீதிகளில் கொட்டப்பட்டுச் சீர்செய்யப்படும் கிரவல், மண் மற்றும் வறட்சியால் ஏற்பட்டுள்ள புழுதி ஆகியவற்றால் வீதிகளில் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வீதிகளில் எழும் புழுதிப் படலம் சுவாத்துடன் உட்செல்வதால் மக்கள் இருமல், தும்மல், சளி, தொண்டைநோய் போன்ற நோய்த் தாக்கங்களுக்கு இலக்காவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நோய்த் தாக்கங்களுக்கு இலக்காவோர் தொகை அதிகரிப்பதால் வைத்தியசாலைகளிலும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-17)

# பளையில் பல பகுதிகளுக்கு இவ்வாண்டுக்குள் மின்சாரம்

யாழ்ப்பாணம், செப்,4

பளைப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட இடங்களுக்கு வருட இறுதியில் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பச்சிளைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர் எஸ். சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீள்குடியமர்வு நடவடிக்கைகளின் பின்னர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பளை, தம்பகாமம், புலோப்பளை ஆகிய இடங்களுக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் மீள்குடியமர்வுச் செயற்பாடுகள் இடம்பெற்றதன் காரணமாக மின்சார இணைப்புப் பணிகள் தாமதமடைந்தன .

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வருட இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்படவேண்டும் என்பதற்கு அமைவாக தற்போது கிளாலி, கோவில் வயல் , சங்கத்தார் வயல், மாசார், ஊரனைப்பற்று உள்ளிட்ட மீள்குடியமர்வு செய்யப்பட்ட இடங்களுக்கு மின்சார இணைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வருட இறுதிக்குள் மீள்குடியமர்வு செய்யப்பட்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பல இடங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக ஏற்பாடுகள் இடம் பெற்ற வருகின்றன என்றார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலட்டை, சங்கு பிடிப்பதற்கான தடையை நீக்குமாறு கோரிக்கை

## மன்னார் மீனவர் சங்கங்கள் விடுத்துள்ளன

மன்னார்,செப்.4

மன்னார் மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடலட்டை மற்றும் சங்கு ஆகிய வற்றைப் பிடிப்பதற்கான தடையை உடனடியாக நீக்குமாறு மீனவர் சங்கப் பிரதிநிதிகள் உரிய தரப்பினரிடம் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னாரிலுள்ள பள்ளிமுனை, உப்புக்குளம், பெரிய கடை, தாழ்வுபாடு, எருக்கலம்பிட்டி, சிறுதோப்பு, வங்காலைப்பாடு, பேசாலை, தலைமன்னார் ஆகிய பிரதேசங்களிலுள்ள மீனவர்களுக்கென தனியான மீனவ சங்கங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

இந்தச் சங்கங்கள் யாவும் ஒன்றிணைந்தே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.



மன்னாரிலுள்ள பெரும்பாலான மக்கள் கடல் தொழிலையே தமது வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

மேலும் வடகீழ்ப் பருவக் காற்றுக் காலமான ஒக்ரோபர் தொடக்கம் மார்ச் வரையிலான ஆறு மாதங்கள் கடலட்டை மற்றும் சங்கு ஆகிய வற்றைப் பிடிப்பதற்கு உகந்த காலமாகும்.

ஆனால் இதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் உள்ளூர் மீனவர்கள் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மன்னார் உதவிக் கடற்றொழில் பணிப்பாளரான எஸ்.மிராண்டாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தலைமைக் காரியாலயத்தின் உத்தரவின் பேரிலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆனால் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு இந்தத் தொழிலை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக உள்ளூர் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தாம் உளவியல் தாக்கத்துக்கு உள்ளாவதாகவும் இவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்தத் தொழிலுக்கு நியாயமற்ற முறையில் விதிக்கப்பட்ட தடையை நீக்கி தமது வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவுமாறு மன்னாரிலுள்ள மீனவர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

(க-12)

# பல்கலைக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு நிதியுதவிகள்

வவுனியா, செப். 4

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டக் கல்வி மற்றும் அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் இந்த நிதியுதவியை வழங்கவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இந்த நிதியுதவியைப் பெறும் பொருட்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த மாணவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் தெரிவு செய்யப்படும் தகுதியான மாணவர்களின் பெயர், விவரங்கள் அந்தந்தப் பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தப்படும் எனவும் தெரிய வருகின்றது.

இன்று இடம்பெறும் நேர்முகத் தேர்வுக்குப் பங்குபற்றவிருக்கும் மாணவர்கள் உரிய ஆவணங்களுடன் குறித்த நேரத்துக்குச் சமுகமளிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரும், கல்வி மற்றும் அபிவிருத்தி நிதியத் தலைவருமான நா.வேதநாயகன் கேட்டுக் கொண்டுள்ளார். (க-400)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில் கற்கை நெறிகள்

முல்லைத்தீவு, செப். 4

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு தொழிற்பயிற்சிக்கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் முள்ளியவளையில் டீசல் இயந்திரப் பொறிவலர், பெற்றோல் இயந்திரப் பொறிவலர், தன்னியக்க வாகன நிறந்தீட்டுநர், வாகனத் தகர வேலையாள், உருக்கிணைப்பாளர், வீட்டு மின் இணைப்பாளர் ஆகிய தொழிற்பயிற்சி நெறிகளும், துணுக்காயில் வீட்டு மின் இணைப்பாளர் பயிற்சி நெறியும் இடம்பெறவுள்ளன.

மேலதிக தகவல்களைப் பெறவிரும்பினால் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் மாங்குளம் வீதி முள்ளியவளையில் அமைந்துள்ள அலுவலகம் அல்லது மாங்குளம் வீதி துணுக்காயில் அமைந்துள்ள மேற்படி அலுவலகத்துடன் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# முத்துஐயன்கட்டுக் குளத்தின் நீர் மட்டம் மோசமான நிலையில்



நெடுங்கேணி, செப். 4

மழை பொய்த்தமை மற்றும் கடும் வறட்சி காரணமாக முத்துஐயன் கட்டுக் குளத்தின் நீர்மட்டம் என்றுமில்லாத அளவு மோசமான நிலைக்குக் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிக ஆழமானதும் 24 அடி நீர்க் கொள்ளளவைக் கொண்டதுமான இந்தக் குளம் முல்லைத்தீவு மாவட்டத்திலே அமைந்துள்ள மிகப் பெரிய குளமாகும். ஆனால் இந்த ஆண்டு மழை பொய்த்துள்ளமை மற்றும் கடும் வறட்சி காரணமாகக் குளத்தின் நீர் மட்டம் மூன்று அடியாகக் குறைந்து காணப்படுகின்றது.

மேலும் இந்த நிலை தொடருமேயானால் குளம் முற்றாகவே வற்றி விடக்கூடிய அபாயநிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் மேட்டு நிலப் பயிர்களுக்கு இந்தக் குளத்திலிருந்து நீரை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் குளத்திலிருக்கும் மீன்களும் இறக்க வேண்டிய பரிதாப நிலைதோன்றிவிடும். மேலும் இந்தப் பகுதியில் பெரும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடும் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-435)

# திறக்கப்படாது மூடிக் கிடக்கும் கடற்றொழில் பரிசோதகர் காரியாலயம்

பூநகரி, செப். 4

என்றிப் நிதியுதவியுடன் பல லட்சம் ரூபா செலவில் பூநகரியில் கட்டப்பட்ட கடற்றொழில் பரிசோதகர் காரியாலயம் பல மாதங்களாகியும் திறக்கப்படாமல் மூடி இருப்பதால் கடற்றொழிலாளர்கள் தங்கள் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே தொழிலாளர்களின் வசதி கருதி இக் காரியாலயத்தைத் திறந்து வைப்பதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டுமென்றும் தொழிலாளர்கள் கோரியுள்ளனர்.


கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரிப் பிரதேசத்தில் 35 இக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்ட சம்மேளனத்தில் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் அங்கம் வகிக்கின்றனர். நிர்வாகத்தைப் பரவலாக்கும் நோக்குடனும் தொழிலாளர்களின் வசதி கருதியும் பூநகரிப் பிரதேச சபைக் கட்டடத்துக்கு அருகில் என்றிப் நிதியுதவியுடன் பல லட்சம் ரூபா செலவில் கடற்றொழில் பரிசோதகர் காரியாலயம் அமைக்கப்பட்டது.

**கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து ஆறு மாதங்களுக்கு மேலாகியும் இன்று வரை திறக்கப்படவில்லை.**

மீனவரின் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ள இக் காரியாலயத்துக்கான கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து ஆறு மாதங்களுக்கு மேலாகியும் இன்று வரை திறக்கப்படவில்லை. பணியாளர்களின் பற்றாக்குறையே இந்த நிலைக்குக் காரணமென்று அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் காரியாலயம் இயங்காததனால் தொழிலாளர்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கிளிநொச்சியை நாடவேண்டியுள்ளது.

எனவே தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைத் தவிர்க்கும் வகையில் காரியாலயத்தை விரைவாக திறந்து வைக்குமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-115)



அக்கராயன் குளத்தின் வாய்க்காலில் பாயும் நீருக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் கழுவப்படும் வாகனங்கள். (க-18)

# பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வராவில் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பம்

## வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நிகழ்வு

பூநகரி, செப். 4

போர்க்காலச் சூழலினால் பாதிக்கப்பட்டு மூடப்பட்டிருந்த பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் கற்றல் நடவடிக்கைகளுக்கென நேற்றைய தினம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் பூநகரிப் பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார், பூநகரிப் பொலிஸ் பொறுப்பதிகாரி, வலயக் கல்விப் பணிமனையின் கணக்காளர் க.சந்திரகுமார், பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

தரம் - 1 தொடக்கம் 10 வரையான வகுப்புக்களைச் சேர்ந்த சுமார் 200 மாணவர்களும், பெற்றோர்களும் இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர். நேற்றைய தினம் பாடசாலை அதிபர் க.சந்திரகுமார் தலைமையில் ஏழு ஆசிரியர்கள் தமது கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டனர்.

**400 மாணவர்கள் சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள பூநகரி மகாவித்தியாலயத்தில் கற்றனர்.**

இந்த ஆரம்ப நிகழ்வில் தலைமையுரையாற்றிய கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், இனிமேல் இந்தப் பாடசாலையின் முன்னேற்றம், பெற்றோர்களின் கைகளிலேயே தங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

பூநகரிப் பிரதேச செயலர் தமது உரையின் போது; மூன்று ஆண்டுகளாக இடம்பெற்ற பேச்சுக்களின் பயனாகவே இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

போருக்குப் பின்னர் இந்தப் பாடசாலைகளில் இராணுவத்தினர் முகாமிட்டிருந்ததால் இங்கு கல்வி கற்ற சுமார் 400 மாணவர்கள் சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள பூநகரி மகாவித்தியாலயத்தில் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தனர்.

இதேவேளை சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்திலே முதன் முதலாக மீள்குடியமர்வு இடம்பெற்றது பூநகரியில் தான் என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

# அழகுக் கலைப் பயிற்சி

மன்னார்,செப்.4

மன்னார் மாவட்ட சிகை அலங்காரத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரால் அண்மையில் ஆண், பெண் இருபாலாருக்குமான அழகுக்கலைப் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தந்த செறீன் குழுவினரே இந்தப் பயிற்சியை நடத்தியுள்ளனர். முடி திருத்துதல், பேசியல், மணப்பெண் அலங்காரமெனப் புதிய நவீன பயிற்சிகளும் இங்கு வழங்கப்பட்டுள்ளன. குறித்த பயிற்சியில் நானாட்டான் மற்றும் அடம்பன் கிளைகளைச் சேர்ந்த பணியாளர்களும் கலந்துகொண்டனர். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு ஊழியர் தாக்கப்பட்டார்

தென்மராட்சி, செப்.4

எழுதுமட்டுவாழ் ஆசைப்பிள்ளை ஏற்றத்தில் உள்ள சிமெந்து கலவை உற்பத்தி நிலையப் பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர்கள் மீது இனந்தெரியாதோர் மிளகாய்த்தூள் வீசித் தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

நேற்று முன்தினம் இரவு கடமையிலிருந்த பாதுகாப்பு சேவை உத்தியோகத்தரின் கண்ணுக்குள் மிளகாய்த்தூள் வீசிவிட்டு அவர் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எழுதுமட்டுவாழ் கரம்பகத்தைச் சேர்ந்த உதயகுமார் பகீரதன் (வயது-22) என்பவரே தாக்குதலுக்கு இலக்கானவராவார்.

தாக்குதலால் காயமடைந்த இவரை சக உத்தியோகத்தர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னரும் இவ்வாறு கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# சகல பட்டதாரிப் பயிலுநருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும்

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.4

சகல பட்டதாரிப் பயிலுநர்களும் நிரந்தர நியமனத்துக்குள் உள்வாங்கப்படுவார்கள் என யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குமான பட்டதாரிப் பயிலுநர்கள் உள்வாங்கப்பட்ட பின்னரே உள்வாங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்படும் எனவும் அரச அதிபர் மேலும் கூறினார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு ஆள் சேர்க்கும் பொருட்டு, பட்டதாரிப் பயிலுநருக்கு இந்த மாதம் ஆரம்பத்தில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இருப்பினும் இதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர், விவரங்கள் இது வரையில் வெளியிடப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் அரச அதிபரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு :-

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர், விவரங்களை வெளியிடும் பட்சத்தில் ஏனைய பட்டதாரிகள் அவர்களுக்கு மட்டும் நிரந்தர நியமனம் கிடைத்து விட்டது, எமக்கு கிடைக்கவில்லை என்று நினைப்பார்கள்.

எனவே சகல அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கும் பட்டதாரிப் பயிலுநர்கள் உள்வாங்கப்பட்ட பின்னரே தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர், விவரங்களை வெளியிடுவோம்.

மேலும் பட்டதாரிப் பயிலுநர்கள் அனைவரும் நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்கப்படுவர் - என்றார். (த-5)

## கொடுப்பனவுகள் அனுப்பி வைப்பு

தென்மராட்சி, செப்.4

தென்மராட்சி பிரதேச பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவுகள் பெறுவோருக்கான செப்ரெம்பர் மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கொடுப்பனவுகளை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்ட 70 வயதுக்கு மேற்பட்டோருக்கான கொடுப்பனவுகள் நிலுவையுடன் விரைவில் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## ஊர்காவற்றுறையிலும் கடுமையான வறட்சி

ஊர்காவற்றுறையில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட சில பிரதேசங்களில் கிணறுகளில் தண்ணீர் இல்லாத நிலையில் மக்கள் பயன்படுத்தி வந்த குளங்களும் வற்றிப் போய்விட்டன.

இதனால் இந்தப் பிரதேசங்களில் உள்ள மக்கள் தண்ணீர் உள்ள இடங்களுக்கு நீண்ட தூரம் சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

இந்தப் பகுதிகளில் உள்ள தாரவங்களும் வாடிப் போன நிலையில் காணப்படுகின்றன. ஊர்காவற்றுறைப் பிரதேச சபை நிர்வாகம் தண்ணீர் பற்றாக்குறையை நீக்குவதற்குக் கடும் முயற்சிகளை எடுத்து வருகின்றது. அத்துடன் பொதுக்கிணறுகளை அமைப்பதன் மூலம் எதிர்காலத்தில் தண்ணீர்ப் பிரச்சினை நீங்கும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த)

## கட்டடப் பணிக்கு நல்ல தண்ணீர் மக்கள் பயன்பாட்டுக்கு உவர் நீர்

### நெடுந்தீவு மக்கள் கடும் விசனம்

**கோட்டைக் காட்டில் உள்ள குடிதண்ணீர் கிணற்றில் இருந்து தினசரி 2 ஆயிரம் லீற்றர் நீர் கட்டடப் பணிக்காக**

யாழ்ப்பாணம், செப்.4

நெடுந்தீவில் தற்சமயம் புதிதாக இடம்பெற்று வரும் கட்டடப் பணிகளுக்கென நெடுந்தீவு மேற்கு கோட்டைக் காட்டில் உள்ள குடிதண்ணீர் கிணற்றில் இருந்து தினசரி 2 ஆயிரம் லீற்றர் நீர் எடுத்துச் செல்லப்படுவதாகவும் இதேவேளை இங்குள்ள மக்கள் தமது குடிதண்ணீருக்காகச் சாராப் பிட்டியில் இருந்து வழங்கப்படும் தண்ணீரையே பயன்படுத்தவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகன்றது.

சாராப்பிட்டியிலிருந்து கிடைக்கும் நீர் உவர்த்தன்மையடைந்து குடிப்பதற்குப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும் எனவே கோட்டைக்காடு பகுதியில் உள்ள நல்ல தண்ணீரை மக்களுக்கு விநியோக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் குடிப்பதற்கு கோட்டைக் காட்டில் இருந்து நல்ல தண்ணீரை வழங்காமல் கட்டட வேலைகளுக்கு அதனைப் பயன்படுத்துவது குறித்து மக்கள் பெரிதும் அதிருப்தி அடைந்துந்துள்ளனர்.

குறிப்பிட்ட பகுதியில் உள்ள மக்களும் இதனால் தாங்கள் கூட நல்ல தண்ணீரை எடுக்க முடியாத நிலை உள்ளதாகவும் கடும் வறட்சி காரணமாக மக்கள் குடிதண்ணீருக்குக் கஷ்டப்படும் போது கட்டடத் தேவைகளுக்கு அதனைப் பயன்படுத்துவது நியாயமானதல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு கோட்டைக் காட்டுப் பகுதியில் உள்ள கிணற்று நீரைப் பாதுகாத்து மக்களின் தேவைக்குப் பயன்படுத்த முன்வர வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக நெடுந்தீவு பிரதேச செயலருடன் தொடர்பு கொண்ட போது,

கட்டடத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்தார். திணைக்கள அதிகாரியிடம் கேட்ட போது, இதற்குத் தாங்கள் பொறுப்பல்ல எனத் தெரிவித்தனர். (த-7)

## அமரர் தர்மலிங்கத்தின் நினைவஞ்சலி நிகழ்வு



வலி.வடக்கு,செப்.4

படுகொலை செய்யப்பட்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் மூத்த உறுப்பினருமான அமரர் வி.தர்மலிங்கத்தின் 27 ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் அமரர் தர்மலிங்கம் நினைவுக்குழுத் தலைவர் எஸ். கௌரிகாந்தன் தலைமையில் உடுவில் பிரதேச சபையின் பொது நூலக மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்றது.

அன்னாரின் திருவுருவப் படத்துக்கு திருமதி தர்மலிங்கம், மகன் சித்தார்த்தன், வன்னிமாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலச்சந்திரன், உடுவில் பிரதேசசபைத் தலைவர் தி.பிரகாஷ் உட்பட மற்றும் பலர் நினைவுச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலச்சந்திரன், பிதேசசபைத் தலைவர் தி.பிரகாஷ், புளொட் அமைப்பின் தலைவரும் அமரர் தர்மலிங்கத்தின் மகனுமான சித்தார்த்தன் உட்பட பலர் உரையாற்றினர். (த-86)

## கோப்பாயில் மீன் சந்தை அமைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.4

வலி.கிழக்குப் பிரதேச சபை கோப்பாய்ப் பகுதியில் மீன் சந்தை ஒன்றை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த மீன் சந்தையைக் கோப்பாய் சந்திக்கு அருகில் அமைப்பதற்கும் சபை தீர்மானித்துள்ளது. இதுவரை காலமும் கோப்பாய் கிருஷ்ணன் கோயில் சந்திக்கு அருகில் உள்ள தனியார் காணியில் வைத்து மீன் விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது அந்த இடத்தில் வைத்து மீன் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.இதன் காரணமாக இந்தப் பிரதேச மக்கள் மீன்களைக் கொள்வனவு செய்வதற்குத் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து கோப்பாய் சந்திக்கு அண்மையில் மீன் சந்தை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை வலி.கிழக்குப் பிரதேச சபை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## மின் இணைப்பு பெறுவதில் நயினாதீவு மக்கள் ஆர்வம்

நயினாதீவில் இதுவரை மின்சார இணைப்புக்களைப் பெறாத மக்கள் அவற்றைப் பெறுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது நயினாதீவுக்கு 24 மணிநேர மின்விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த 24 மணிநேர மின் விநியோகத்தை அடுத்து இந்தப் பிரதேசத்தில் இதுவரை மின்சாரம் பெறாதவர்கள் அதனைப் பெறுவதற்கு விண்ணப்பித்து வருகின்றனர்.

ஏற்கனவே மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பித்த மக்களுக்கான மின் விநியோகம் வழங்கும் பணியும் தற்போது இடம்பெற்று வருவதாக மின்சார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-17)

# 41 மில்லியன் ரூபா செலவில் 2013 இல் வேலைத் திட்டங்கள்

### நல்லூர் பிரதேச சபை முன்னெடுக்கிறது

யாழ்ப்பாணம், செப்.4

அடுத்த ஆண்டு நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 41 மில்லியன் ரூபா செலவில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளைச் சபை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பான ஏற்பாடுகளைப் பிரதேச சபை தற்போதே ஆரம்பித்துள்ளது. அதற்கான ஆரம்பப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

வீதிப் புனரமைப்பு, சுகாதாரம், சனசமூக நிலையங்களுக்கான சேவைகள் மற்றும் சபையினால் முன்னெடுக்கப்படும் சகல அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றுக்கு இந்த 41 மில்லியன் ரூபா நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

பிரதேச சபையினால் அடுத்த ஆண்டுக்கென மொத்தமாக 65 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 41 மில்லியன் ரூபா நிதியை வேலைத்திட்டங்களுக்குப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மிகுதியாகவுள்ள 24 மில்லியன் ரூபா நிதி சபையின் நானாவித செலவுகள் போன்ற ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வேலைத்திட்டங்களைச் சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கும் சபையின் கூட்டத்தில் தீர்மானிக் [illegible] கென நிதிக்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# யாழ். முனீஸ்வரன் வீதி ஊடாக வாகனங்கள் பயணிக்க ஏற்பாடு

### கே.கே.எஸ். வீதி புனரமைப்பால் நகரில் போக்குவரத்து நெரிசல்

யாழ்ப்பாணம், செப்.4

யாழ்.முனீஸ்வரன் வீதியூடாகவும் வாகனங்கள் பயணிக்கக் கூடியவாறு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. யாழ். கே.கே.எஸ். வீதியின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதை அடுத்து முனீஸ்வரன் வீதி ஊடாகவும் வாகனங்கள் பயணிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த வீதியில் உள்ள நடைபாதைக் கடைகளுக்கு முன்பாகக் கட்டப்பட்டிருந்த தறப்பாள்கள், நிழற்குடைகள் என்பன அகற்றப்பட்டுள்ளன.

வாகனங்கள் இந்த வீதியூடாகப் பயணிப்பதற்கு வசதியாக யாழ்.மாநகர சபைப் பணியாளர்களினால் இவை அகற்றப்பட்டதாகவும் வீதிப் புனரமைப்புப் பணிகள் காரணமாக நகருக்குள் ஏற்பட்டுள்ள வாகன நெரிசலைக் குறைப்பதற்காகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் யாழ்.மாநகர நபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கே.கே.எஸ். வீதியின் புனரமைப்புப் பணி காரணமாக நகருக்கு உள்ளே நுழையும், வெளியே செல்லும் வாகனங்கள் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்துவதில் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளன.

இதனை அடுத்து யாழ். நகரப் பகுதியின் போக்குவரத்தை ஓரளவு சீர்செய்யும் வகையில் யாழ். முனீஸ்வரன் வீதியும் வாகனப் போக்குவரத்துக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு மஹிந்தவை அழைப்பதா?

## சுஷ்மாவுக்கு வைகோ கடும் எச்சரிக்கை

நெல்லை, செப். 4

மத்திய பிரதேசத்தில் நடக்கும் விழாவுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அழைத்து வருவதாகக் கூறிய பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எச்சரித்துள்ளார்.

நெல்லை மாவட்டம் வாசுதேவ நல்லூர் தொகுதி முன்னாள் சட்டசபை உறுப்பினர் சதன் திருமலைக் குமார் இல்ல திருமண விழா புளியங்கு டியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அவர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-





**காங்கிரஸ் செய்த தவறை பா.ஜ.கவும் செய்தால் அந்தக் கட்சியின் மீதும் எங்களது வெறுப்பைக் காட்ட வேண்டிய சூழல் உருவாகும்.**

ம.தி.மு.க. இனிவரும் காலங்களில் கவனமாக அடி எடுத்து வைப்பதுடன் ஒவ்வொரு முடிவும் வெற்றிகரமாக அமைந்திடும் வகையில் செயற்படும். இனி ம.தி.மு.கவுக்கு நல்ல எதிர்காலம் உள்ளதால் நிர்வாகிகள் முதல் தொண்டர்கள் வரை அனைவரும் இப்பொழுதே நாடாளுமன்ற தேர்தலுக்குத் தயாராகுங் கள்.

பா.ஜ.கவைச் சேர்ந்த சுஷ்மா ஸ்வராஜ் மத்திய பிரதேசத்தில் நடைபெற உள்ள புத்தா 2060 ஆவது விழாவுக்கு இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை அழைத்து வருவதாகத் தெரிவித்துள்ளார். இது கண்டனத்துக்குரியது. காங்கிரஸ் செய்த தவறை பா.ஜ.கவும் செய்தால் அக்கட்சியின் மீதும் எங்களது வெறுப்பைக் காட்ட வேண்டிய சூழல் உருவாகும். இலங்கைத் தமிழர்களுக்காக சென்னையில் போராட்டம் நடத்தினால் என்னையும் அழையுங்கள் வருகிறேன் என்று கூறிய ஜஸ்வந்த சிங் உள்ளிட்ட பல நல்ல தலைவர்கள் உள்ள நிலையில் ராஜபக்ஷவை இந்தியாவுக்கு அழைத்து வருவதாகக் கூறிய சுஷ்மாவை எச்சரிக்கிறேன் - என்றார். (வ)

## மேற்கு வங்கத்தில் டெங்கால் 3 பேர் சாவு

### 600ற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

பர்த்வான், செப் 4

மேற்கு வங்க மாநிலத்தில் டெங்குக் காய்ச்சல் தாக்குதலுக்கு ஆளாகி 3 பேர் உயிரிழந்துள்ளனர். 600 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிகாரபூர்வமற்ற செய்திகளின்படி, மேற்கு வங்கத்தில் டெங்குவுக்கு 20 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், அனைத்து மருத்துவமனைகளையும் நகராட்சிகளையும் விழிப்புடன் இருக்குமாறும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் சுகாதாரத்துறை அமைச்சர் சந்திரிமா பட்டாசார்யா கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

## தமிழர் பிரச்சினையில் சுமூக தீர்வுகாண காங்கிரஸ் ஆர்வம்

### ஞானதேசிகன் தெரிவிப்பு

இலங்கை பிரச்சினையில் சுமூக தீர்வு காண, காங்கிரஸ் கட்சி முனைப் போடு செயற்படுகிறது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் தெரி வித்தார்.

இலங்கையில் பிரச்சினை தீர வேண்டும் என்று காங்கிரஸ் முயற்சிக்கிறது. ஆனால், பிரச்சினை நீடிக்க வேண்டும் என்று தமிழ கத்தில் உள்ள பல அரசியல் கட்சிகள் விரும்புகின்றன.

கடலூரில் இடம்பெற்ற மூப்பனார் சிலை திறப்பு விழாவில் அவர் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழர் பிரச்சினையை, முன் வைத்தே தமிழகத்தில் பல கட்சிகள் அரசியல் நடத்துகின்றன. அங்கு பிரச்சினை இல்லை என்றால், இங்குள்ள பல கட்சிகள் நடையைக் கட்ட வேண்டியதுதான். இலங்கைப் போரால் பாதித்த தமிழர்களின் மறுவாழ்வுக்காக, 50 ஆயிரம் வீடுகள் கட்டித் தந்துள்ளது; ரயில் பாதை அமைத்துள்ளது; 1,300 தமிழர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாடசாலைகள், மருத்துவமனைகளை சீரமைத்து தமிழர்களின் மறுவாழ்வுக்கு வழிவகுத்து வருகிறது. இவ்வளவு செய்தும், விளம்பரம் இல்லாத காரணத்தால், காங். கட்சி ஒன்றுமே செய்யாதது போல் தமிழ கத்தில் உள்ள அரசியல் கட்சிகள் சித்திரிக்கின்றன. இலங்கைத் தமிழர்களுக்காக காங்கிரஸ், தலைமையிலான மத்திய அரசு செய்துள்ள திட்டங்களை பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்த வேண்டும்- என்றார். (வ)

## உல்லாச விடுதியில் போதை விருந்து

### 325 பேர் மாட்டிக் கொண்டனர்

புனே புறநகரில் உல்லாச விடுதியில் இடம்பெற்ற போதை விருந்தில் 114 இளம் பெண்கள் உட்பட 325 பேர் கைது செய்யப்பட்டனர்.

மகாராஷ்டிரா மாநிலம் புனே புறநகர் பகுதியில் உள்ள உல்லாச விடுதியில் போதை விருந்து நடப்பதாக பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து புனே குற்றப்பிரிவுப் பொலிஸார் விரைந்து சென்று அதிரடியாகச் சோதனை நடத்தினர்.

அந்த விடுதியில் அதிகமான இளம் பெண்களும், இளைஞர்களும் போதையில் களியாட்டம்போட்டு கொண்டிருந்தனர்.

இதைத் தொடர்ந்து போதை விருந்தில் கலந்து கொண்ட 20, 25 வயதுடைய 325 பேரை பொலிஸார் கைது செய்தனர். இவர்களில் 114 இளம் பெண்கள் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களில் பெரும்பாலானோர் மாணவ- மாணவிகள் என்றும் சிலர் ஹிஞ்சேவாடி பகுதியைச் சேர்ந்த தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களில் பணி செய்து வருபவர்கள் என்றும் தெரிய வந்தது.

கைதான 325 பேரையும் சாசூன் அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக பொலிஸார் அனுப்பி வைத்தனர்.

அவர்கள் மீது இந்திய தண்டனை சட்டத்தின் பல்வேறு பிரிவுகளிலும், மும்பை பொலிஸ் சட்டத்தின் கீழ் பொது இடத்தில் அமைதிக்கு பங்கத்தை ஏற்படுத்துதல் பிரிவிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளன. (வ)

## டில்லியில் சீனத் தூதரகம் முன் திபெத்தியர்கள் ஆர்ப்பாட்டம்

சீன பாதுகாப்புத் துறை அமைச்சர் டில்லி வருவதற்குக் கண்டனம் தெரிவித்து, திபெத்தியர்கள் டில்லி சீன தூதரகத்துக்கு முன் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சீன பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்க்லீ இந்தியா வந்துள்ளார். அவர் டில்லியில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே அந்தோ ணியைச் சந்தித்து, இரு நாட்டு இராணுவத்தினர் போர்ப்பயிற்சி குறித்து பேசவுள்ளார்.



இந்நிலையில் சீன அமைச்சர் டில்லிக்கு வர அனுமதிக்கக் கூடாது என்று கண்டனம் தெரிவித்து திபெத்தியர்கள் டில்லியில் உள்ள சீன தூதரகம் முன் போராட்டத்தில் ஈடுபட்டனர். சிரியாவில் சீனர்களின் ஆதிக்கத்தைத் தடுக்க உலக நாடுகள் உதவ வேண்டும் என்றும் திபெத்தியர்கள் கோரிக்கை வைத்தனர்.

போராட்டக்காரர்கள் சீனாவின் தேசியக் கொடியை தீவைத்து கொளுத்த முயன்ற போது கைது செய்யப்பட்டனர். கடந்த ஆண்டும் இதே போல சீனாவைக் கண்டித்து திபெத் தியர்கள் நடத்திய போராட் டத்தின்போது ஒரு சிலர் தீக்குளித்தனர். இதற்கு சீனா, தலாய்லாமா தூண்டுதலின் பேரில் இவர்கள் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்று கூறியதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## தனித் தெலுங்கானா: வலியுறுத்தி பா.ஜ.க. உண்ணாவிரதம்

தனித்தெலுங்கானா கோரிக்கையை வலியுறுத்தி பாரதீய ஜனதாக்கட்சி டில்லியில் நேற்றுமுதல் மூன்றுநாள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

ஆந்திராவில் தனி தெலுங்கானா மாநிலத்தை அமைக்க வலியுறுத்தி அந்த மாநில பாரதீய ஜனதாக் கட்சி யினர் புதுடெல்லியில் உள்ள ஜந்தர்மந்தர் பகுதியில் நேற்று முதல் மூன்று தினங்களுக்கு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்து இருந்தனர். அதன்படி நேற்று காலை ஆந்திர மாநில பாரதீய ஜனதா கட்சித் தலைவர்ஜி. கிஷன்ரெட்டிதலைமையில் பா.ஜ.க.உண்ணா விரதத்தை ஆரம்பித்தனர்.(வ)

## டில்லியில் பொலிஸார் - மக்கள் மோதல்

### ஒருவர் சாவு; பலர் காயம்

புதுடில்லி கிழக்குப் பகுதியில் பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நடந்த கலவரத்தில் ஒருவர் உயிரிழந்தார். 10 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

மயூர் நகரில் தலைக் கவசம் அணியாமல் சென்ற ஒருவரைப் பொலிஸார் விரட்டிச் சென்றபோது அவர் அதிவேகமாகத் தப்பித்துச் செல்ல முயன்று காரில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதனால் கோபமடைந்த பொது மக்கள் பொலிஸார் சுங்க சாவடியை முற்றுகையிட்டு வாகனங்களுக்குத் தீ வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.



இதனால் பொலிஸாருக்கும், பொதுமக்களுக்கும் இடையே கலவரம் மூண்டது. கலவரத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் தடியடி, மற்றும் கண்ணீர் புகைக் குண்டுகள் வீசினர். இதில் ஒருவர் உயிரிழந்தார். 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து லால்பகதூர் சாஸ்திரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கலவரத்தில் இறந்தவரின் மார்பில் துப்பாக்கி சூடு இருப்பதாகவும், மார்பில் ஏன் சுட வேண்டும், காலில் சுட்டிருக்கலாமே என்று பொது மக்கள் பொலிஸாருக்குக் கண்டனம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## ஈழத் தமிழரைப் பற்றிப் பேச 'ஜெ' இற்கு என்ன உரிமை?

### கேட்கிறார் கேள்வி கருணாநிதி

சென்னை, செப்.4

தமிழர்களைப் பற்றி பேச ஜெயலலிதாவுக்கு என்ன உரிமை உள்ளது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

தி.மு.க. தலைமையகத்தில் நேற்று அவர் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார். அப்போது செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளித்தது குறித்து தி.மு.க. அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி கொடுப்பது பற்றியும் - விளையாட வந்த படையினரை திருப்பி அனுப்பியது பற்றியும் உங்கள் கருத்து? என்ன என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, இதே ஜெயலலிதா தமிழக சட்ட பேரவையில்; பிரபாகரனைக் கைது செய்ய வேண்டும் என்று தீர்மானம் போட்டவர்தானே? போர் என்றால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது சகஜம் தான் என்று இலங்கையில் போர் நடந்தபோது சொன்னவர்தானே? அவருக்கு இலங்கைத் தமிழர்களுக்காக பேச என்ன தார்மீக உரிமை உள்ளது என்று பதில் அளித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியாவுக்கு வருவது பற்றி எதிர்ப்பு தெரிவித்து பலர் கருத்து கூறியிருக்கிறார்ளே, அந்த கருத்து பற்றி? என்று செய்தியாளர் கேட்டதற்கு, அந்தக் கருத்து எனக்கு உடன்பாடான கருத்துத் தான் என்றும் கூறியுள்ளார்- என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### காவிரி நதிநீர் ஆணைய வழக்கு;

## பிரதமர் மன்மோகனுக்கு உச்சநீதிமன்று கண்டனம்

காவிரி நதிநீர் ஆணைய வழக்கில் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, உச்சநீதி மன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

நதிநீர் ஆணையத்தை கூட்டுவதில் பிரதமர் மன்மோகன் மெத்தனமாக செயல்படுவது ஏன் என்று உச்ச நீதிமன்ற விசாரணை நேற்று நடைபெற்றது. விசாரணையின் போது ஆணையத்தை கூட்டுவது குறித்து 4 மாநில முதல்வர்களுக்கும் கடிதம் எழுதியிருப்பதாகவும், முதல்வர்களின் கருத்தைக் கேட்டு ஆணையத்தைக் கூட்டுவதாகவும் மத்தியரசு பதில் அளித்தது.

பிரதமராக உள்ளவர் நதிநீர் ஆணையத்தைக் கூட்ட முதல்வர்கள் கருத்தை கேட்பது ஏன் என்று உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

நதிநீர் ஆணை யத் தைக் கூட்ட திகதியை இது வரை பிரதமர் அறிவிக்காத தற்கும் நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. காவிரி நதிநீர் ஆணை யத்தைக் கூட்டுவதில் பிரத மருக்கு அக்கறை இல்லை என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். பிரதமரை கடும் சொற்களால் விமர்சிக்கும் நிலைக்கு எங்களை ஆளாக்க வேண்டாம் என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரானில் நிலநடுக்கம் கட்டடங்கள் குலுங்கின

ஈரானின் கிழக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் சில இடங்களில் கட்டடங்கள் குலுங்கின.

இந்தநிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.2 ஆக பதிவானது. இந்த நிலநடுக்கத்தால் பெருமளவு சேதம் ஏற்படவில்லை என்றாலும், கட்டடங்கள் குலுங்கின.

கடந்த மாதம் ஈரானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 300 பேர் உயிரிழந்தனர்.

இதைத்தொடர்ந்து ஈரானில் அவ்வப்போது நிலநடுக்கங்கள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன.

இதேபோன்று கடந்த 2003 ஆம் ஆண்டு ஈரானின் தென்கிழக்கே பாம் மாகாணத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் 26 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புரட்சியாளர்கள் வசம் விமானத்தளம்

## சிரியாவில் பதற்றம் அதிகரிப்பு



சிரியாவில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், விமானப் படைத் தளத்தை போராட்டக்காரர்கள் கைப்பற்றி உள்ளதால் பதற்றம் அதிகரித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் மீது இராணுவத்தினர் அதிரடித் தாக்குதலை நடத்தி வருகின்றனர். இதில் அப்பாவிப் பொது மக்கள் அதிகமாக உயிரிழந்து வருகின்றனர். பல லட்சம் மக்கள் உயிருக்குப் பயந்து அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

இந்த நிலையில் சிரியாவின் விமானப்படை தளத்தின் மீது கடந்த மாதம் 31 ஆம் திகதி போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தி, கைப்பற்றியதோடு, அங்கிருந்த 16 விமானப் படையினரையும் கைது செய்தனர்.

அதன் பின் அங்கிருந்த ஏவுகணைகளையும் தங்கள் வசமாக்கிக் கொண்டனர். இதன் மூலம் சிரியா அரசின் விமானத் தாக்குதல் முடிவுக்கு வரும் என பிரிட்டனைச் சேர்ந்த போர்க் கண்காணிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த விமானப் படைத் தளத்திலிருந்து பறந்த போர் விமானங்கள் தான், கடந்த வாரம் 60 ஆயிரம் மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதியில் குண்டுகளை வீசித் தாக்கியது. இந்தத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். இப்போது இதற்கு பழி தீர்க்கும் வகையில் விமானப்படைத் தளத்தை போராட்டக்காரர்கள் கைப்பற்றி உள்ளனர். இது சிரியா அரசுக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. (வ)

## தைவானில் விமான விபத்து 3 பேர் சாவு

தைவானில் சிறிய ரக விமானமொன்று விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 3 பேர் உயிரிழந்தனர்.

தபெங் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான சிறிய இலகுரக விமானம், தைபெயிலிருந்து வியாழக்கிழமை புறப்பட்டது.

அந்தப்பகுதியில் உள்ள மலைப் பகுதியில் சென்று கொண்டிருந்த போது, திடீரென விபத்துக்குள்ளானது. இதில், 2 விமானிகள் உள்பட 3 பேர் உயிரிழந்தனர்.

மோசமான வானிலை காரணமாக மீட்புப் பணியில் தாமதம் ஏற்பட்டது.

இந்தநிலையில், உயிரிழந்தவர்களின் உடல்கள் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டன. (வ)

## பிரிட்டன் முன்னாள் பிரதமரின் உடைகள் ஏலத்தில்



இரும்புப் பெண்மணி என அழைக்கப்பட்ட பிரிட்டன் நாட்டின் முன்னாள் பிரதமர் மார்கிரெட் தட்சரின் ஏழு உடைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டனில் 1979-1990 ஆம் ஆண்டு வரை, பிரதமராக மார்கிரெட் தட்சர் பதவி வகித்தார். கடந்த 1975 ஆம் ஆண்டு, கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்தில் இருந்து, பிரதமராகப் பதவியேற்ற ஆரம்பகாலம் வரை, அவர் பயன்படுத்திய உடைகள்தான் தற்போது ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிற்கும், 83 ஆயிரம் ரூபா முதல், ஒரு லட்சத்து 32 ஆயிரம் ரூபா வரை ஏலம் விட, விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதன் முதலாக, மார்கரெட் தாட்சரின் உடைகள், தற்போது ஏலம் விடப்படுவதால், இவற்றுக்கு இப்போதே அதிகமான கேள்வி காணப்படுகிறது.(வ)



2018 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் நடைபெற உள்ள உலகக் கோப்பைக்கான கால்பந்து போட்டி மைதானத்தின் கட்டுமானபணியைப் பார்வையிட வந்தார் ரஷ்யப் பிரதமர் டிமிட்ரி மெட்வடேவ்.

## அயலவருக்கு தொல்லை கொடுத்த பெண் 4 தடவைகள் கைது

பிரிட்டனில் அயிலிலுள்ளவர்களுக்கு அடுத்தடுத்து தொல்லை கொடுத்த பெண்ணை பொலிஸார் கைது செய்தனர். 26 மணி நேரத்தில் 4 தடவைகள் பொலிஸார் கைது செய்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பிரிட்டனின் நியூ ஹாம்ப்ஷயர் நகரில் உள்ள எப்பிங் பகுதியில் வசிப்பவர் ஜாய்ஸ் காப்பி. இவர் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் வீட்டில் அதிக சத்தத்தில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார்.

இதுகுறித்து முறைப் பாடு வந்ததை அடுத்து பொலிஸார் எச்சரித்துவிட்டு சென்றனர். கோபம் அடைந்த ஜாய்ஸ், முன்பை விட அதிக சத்தம் வைத்து பாட்டுக் கேட்டார். மறுபடியும் அயலில் முறைப்பாடு செய்ய, பொலிஸார் விரைந்து வந்து அவரைக் கைது செய்தனர். பின்னர் விடுவித்தனர்.

வீட்டுக்கு வந்த ஜாய்ஸ், 5 மணி நேரம் கழித்து மீண்டும் ஊரே அலறும் வகையில் அதிக சத்தத்துடன் பாட்டுக் கேட்டார். மீண்டும் புகார் வந்ததால், கடுப்பான பொலிஸார் ஜாய்சை கடந்த புதன்கிழமை அதிகாலை 4 ஆவது முறையாகக் கைது செய்தனர். (வ)

## சர்ச்சைக்குரிய தீவை அளந்த ஜப்பானால் அதிர்ச்சியில் சீனா



சீனாவும், ஜப்பானும் உரிமை கொண்டாடும் பிரச்சினைக்குரிய தீவில் ஜப்பானிய நில ஆய்வாளர்கள் சென்று அளவிடும் பணியை ஆரம்பித்துள்ளதால் சீனா அதிர்ச்சியடைந்துள்ளது.

சீனாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே உள்ளது ஷென்காகு தீவு. இந்தத் தீவை சீனா டையாயூ என்று அழைக்கிறது.

பண்டைக் காலம் தொட்டு இந்த தீவு தங்கள் எல்லைக்குட்பட்டு இருப்பதாக சீனாவும், 1890ஆம் ஆண்டு முதல் இந்தத் தீவு தங்கள் வசம் இருப்பதாக ஜப்பானும், உரிமை கொண்டாடி வருகின்றன.

பிரச்சினைக்குரிய இந்த தீவில் மனித நடமாட்டம் கிடையாது. இந்த தீவைச் சுற்றிலும் எரிவாயு அதிகம் கிடைப்பதால் சீனா இந்த பகுதியைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையே கடந்த மாதம் 18 ஆம் திகதி ஜப்பானிய ஆதரவாளர்கள் 150 பேர் இந்த தீவுக்குச் சென்று ஜப்பானிய கொடிகளைப் பறக்க விட்டனர். இந்தத் தீவில் ஜப்பான் சார்பில் கலங்கரை விளக்கும் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்தது. இதற்கிடையே இந்தத் தீவை தனியாருக்கு விற்க திட்டமிட்டுள்ளதாக டோக்கியோ ஆளுநர் சூசகமாகத் தெரிவித்திருந்தார்.

இவரது அறிவிப்பைத் தொடர்ந்து ஜப்பானிய நில அளவையாளர்கள் இத்தீவுக்கு நேற்று முன்தினம் சென்று அங்குள்ள மரங்கள், நிலத்தின் அமைப்பு ஆகியவற்றை ஆய்வு செய்தனர். இதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

## பின்லேடனைக் காட்டிக்கொடுத்த மருத்துவரை ஒப்படைக்கமாட்டோம்

### பாகிஸ்தான் திட்டவட்டம்

சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடன் தங்கியிருந்த இடம் குறித்து அமெரிக்காவுக்குத் தகவல் தெரிவித்த மருத்துவர் அப்ரிடிக்கு 33 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஒசாமா பின்லேடன் அமெரிக்க சீல் படையினரால் கடந்தாண்டு மே மாதம் சுட்டுக்கொல்லப் பட்டார்.

இதற்கு உறுதுணையாக இருந்ததாகக் கூறி ஷகீல் அப்ரிடிக்கு 33 ஆண்டு சிறை தண்டனையை பாகிஸ்தான் நீதிமன்றம் விதித்தது. இதற்கு அமெரிக்கா கடும எதிர்ப்புத் தெரிவித்தது.

அதே சமயம் பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையதாக ஆஃபியா சித்திக் என்பவர் அமெரிக்காவில் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் பாகிஸ்தானில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடந்த பாதுகாப்பு தின நிகழ்ச்சியில் பேசிய இஸ்லாம், கைதியை பரிமாற்றும் திட்டம் பாகிஸ்தானிடம் இல்லை. அப்ரிடிக்கு அளிக்கப்பட்ட சிறைத் தண்டனையை எதிர்த்து அவர் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனு நிலுவையில் உள்ளது என்றார்.

## புஷ், பிளேயருக்கு எதிராக சட்ட நவடிக்கை எடுக்குக

### டெஸ்மன்ட் டுட்டு கருத்து




ஈராக் போர் தொடர்பாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மற்றும் பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டொனி பிளேயர் ஆகியோரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று தென்னாபிரிக்காவின் நோபல் பரிசு பெற்ற பேராயர் டெஸ்மன்ட் டுட்டு தெரிவித்தார்.

பிரிட்டனில் வெளிவரும் 'ஒப்சேர்வர்' பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பேரழிவு ஆயுதங்கள் தொடர்பாக மேற்படி இரு தலைவர்களும் பொய் கூறியுள்ளனர் என்று பேராயர் டெஸ்மன்ட் டுட்டு குற்றம் சுமத்தியுள்ளார்.

அந்தக் கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஈராக் போரானது வரலாற்றின் எந்தவொரு போரையும்விட உலகத்தை ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

2003 ஆம் ஆண்டு சதாம் ஹுசைனின் ஆட்சிக்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட போரானது சிரியாவில் சிவில் போருக்கான சூழலைத் தோற்றுவித்துள்ளது. ஈரான் சம்பந்தப்பட்ட மத்திய கிழக்கு மோதலுக்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக் போரால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் அடிப்படையில் புஷ் மீதும் பிளேயர் மீதும் நெதர்லாந்தின் ஹேக் நகரிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன் றத்தில் வழக்குத் தொடுக்கப்பட வேண்டும்-என்றுள்ளது.

இந்தக்கருத்துக்கு பிரிட்டன் முன்னாள் பிரதமர் டொனி பிளேயர் பதிலளிக்கையில்,

''இந்த வாதத்தை பல தடவைகள் நாம் கேட்டுள்ளோம். இதில் புதிதாகக் கூறுவதற்கு எதுவுமில்லை' என்று தெரிவித்துள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவைத் தாக்கினால் பதிலடி

## அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை

சிரியா மீது அமெரிக்கா தாக்குதல் தொடுத்தால், சிரியாவுடன் ஒன்றிணைந்து எதிர்த் தாக்குதல் நடத்துவோம் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரானின் இராணுவத் தகவல்களை மேற்கோள் காட்டி, உள்நாட்டு செய்தி ஊடகங்கள் இந்தத் தகவலை முதலில் வெளியிட்டிருந் தன. எனினும் பின்னர் அதைத் தமது தளத்திலிருந்து நீக்கி யுள்ளன. ஈரான் அரசு இந்த அறிவிப்புக் குறித்து கருத்து எதுவும் கூற மறுத்து விட்டதால் இதன் உண் மைத் தன்மையில் சந்தேகம் நிலவு கிறது.

எனினும் சிரிய ஜனாதி பதி அல் அசாத்துக்கு ஆதர வான போக்கை கொண் டிருக்கும் ஈரான், அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் மத்திய கிழக்கு நாடுகளில் கால் பதிப்பதைத் தொடர்ந்து எதிர்த்து வருகிறது.

**சிரிய கிளர்ச்சிப் படையினர் அரச இராணுவத்துக்கு எதிராகவும் கடுமையாகப் போராடி வருகின்றனர். இதில் 6 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொது மக்கள் கடந்த ஒரு வருடத்தில் மாத்திரம் கொல்லப்பட்டுள்ளனர்.**

இந்த நிலையில், அமெ ரிக்கா ஈரான் மீது முட் டாள்தனமான தாக்குதல்க ளைத் தொடுத்தால், சிரியா வின் இராணுவத்துடன் ஈரான் கூட்டுச் சேர்ந்து கொண்டு கடுமையான பதில் விளைவுகளைக் கொடுக்க வேண்டிவரும் என்று அந்த எச்சரிக்கை தகவல்கள் தெரி விக்கின்றன.

சிரிய ஜனாதிபதி அல் அசாத் பதவி விலக வேண் டும் என்று ஒரு வருடத்துக்கு மேலாக சிரிய மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். சிரிய கிளர்ச் சிப் படையினர் அரச இராணுவத்துக்கு எதிராகவும் கடுமையாகப் போராடி வரு கின்றனர். இதில் 6 ஆயிரத் துக்கு மேற்பட்ட பொது மக்கள் கடந்த ஒரு வருடத் தில் மாத்திரம் கொல்லப் பட்டுள்ளனர்.

இந்த நிலையில் உடன டியாக இந்த உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வர ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா உட்பட மேற் குலக நாடுகள் பிரேர ணைகள் கொண்டுவந்த போதும் இரு முறையும் சீனா மற்றும் ரஷ்யா ஆகியன தமது வீற்றோ அதிகாரத் தைப் பயன்படுத்தி அந்தப் பிரேரணைகளை நிராகரித் திருந்தன.

அமெரிக்காவுக்கு எதிரான போக்கை ஈரானும் தற்போது வெளிப்படையாகவே அறிவித்துள்ளமை பதற் றத்தை அதிகரித்துள்ளது. (வ)

# ஆப்கன் வீரர்களுக்கான அமெ. பயிற்சி நிறுத்தம்

வோஷிங்டன், செப் 4

ஆப்கானிஸ்தான் இராணு வத்தில் புதிதாகச் சேரும் படையினருக்குப் பயிற்சி அளிப்பதை அமெரிக்க சிறப்புப் படையின் தளபதி தாற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோப் படையினர் மீது ஆப்கன் இராணுவத் தினரே தாக்குதல் நடத்துவது சமீப காலமாக அதிகரித் துள்ளது. இந்த ஆண்டில் நடைபெற்ற இவ்வகைத் தாக்குதல்களில் 45 நேட் டோப் படையினர் உயிரிழந் தனர்.

இதில் அண்மைய தாக்கு தல் கடந்த புதன்கிழமை, தெற்கு உருஸ்கான் மாகா ணத்தில் உள்ள படைத்தளத் தில் மூன்று ஆஸ்திரேலிய வீரர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது நடை பெற்றது. அவர்களை நோக்கி ஆப்கன் இராணுவ உடை அணிந்திருந்த ஒரு நபர் மிக அருகில் இருந்து சுட்டதில் அவர்கள் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல் களைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தான் இராணுவத்தில் புதிதாகச் சேரும் படையின ருக்குப் பயிற்சி அளிப்பதை அமெரிக்க சிறப்புப் படை யின் தளபதி தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்.

இது குறித்து அமெரிக்க சிறப்புப் படையின் அதிகாரி ஒருவர் கூறுகையில் 'புதிய படையினருக்கும், தீவிர வாதிகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகி றோம். தீவிரவாதிகளுடன் தொடர்புடைய இராணு வத்தினர் நீக்கப்பட்ட பின் னரே பயிற்சி அளிக்கப் படும்'' -என்றார். (வ)

# பாகிஸ்தானில் அமெ. தூதரகம் முன்பாக தீவிரவாதிகள் தாக்குதல்

பாகிஸ்தானில் அமெரிக் கத் தூதரகம் முன்பாக வெடி குண்டுகள் நிரப்பப்பட்ட காரை கொண்டு தீவிவரார் திகள் தாக்குதல் நடத்தியதில் சம்பவ இடத்திலேயே 3 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் உள்ள அமெரிக்க தூத ரகத்துக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவல கத்துக்கும் இடையே இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

படுகாயமடைந்த 10 வெளி நாட்டவர்கள் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். வெளிநாட்டினரை குறி வைத்து இத்தாக்குதல் சம் பவம் நடைபெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

# சீனாவில் போதிய பாதுகாப்பில்லாத நிலக்கரிச் சுரங்கங்களுக்கு மூடுவிழா



பீஜிங், செப்.4

போதிய பாதுகாப்பு வச திகள் இல்லாத, நூற்றுக் கணக்கான சுரங்கங்களை இந்த ஆண்டு இறுதிக்குள் மூட, சீனா முடிவு செய்துள் ளது.

சீனாவில் மொத்தம் உள்ள, 12 ஆயிரம் நிலக்கரிச் சுரங் கங்களில், 85 சதவீதம் சிறிய ரக சுரங்கங்கள். இந்த சிறிய சுரங்கங்களில் போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லாத தால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. ஒவ் வொரு, 10 கோடி டன் நிலக்கரி உற் பத்தி செய்யும் போதும், 35 தொழிலாளர்கள் உயிரிழக்கின்றனர். கடந்த ஆண்டு மட் டும் நிலக்கரி சுரங் கங்களில் நடந்த விபத்து களில், ஆயிரத்து 973 தொழி லாளர்கள் இறந்தனர்.

நாட்டின் தென்மேற்கு பகுதியில் உள்ள சிச்சுவான், யுனான், குய்ஷு மாகாணங் களில் உள்ள சிறிய சுரங்கங் களில் தான் அடிக்கடி விபத் துகள் நடக்கின்றன. சிச்சுவான் மாகாணத்தில் உள்ள சுரங் கத்தில், கடந்த சில தினங்க ளுக்கு முன் நடந்த வெடி விபத் தில், 43 பேர் கொல்லப்பட்டனர்; 54 பேர் காயமடைந் தனர். இதில், 17 பேரின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளது.

பாதுகாப்பு நட வடிக்கைகளை மேம் படுத்த வேண் டும் என்ற அரசின் உத்த ரவை, சிறிய சுரங் கங்கள் பின் பற்று வதில்லை. எனவே, போதிய பாதுகாப்பு வசதிகள் இல் லாத, நூற்றுக்கும் மேற்பட்ட சுரங்கங்களை இந்த ஆண்டு இறுதிக்குள் மூட, அரசு முடிவு செய்துள்ளது. (வ)

# இஸ்ரேலுக்கு புதிய தூதரை நியமித்தது எகிப்து

ஜெருசேலம்செப்.4

இஸ்ரேல் நாட்டுக்கு எகிப்து அரசு புதிய தூதரை நியமித்தது. இதுகுறித்து, இஸ்ரோ வெளியுறவு அமைச்சகம் தெரிவிக்கையில்,

புதிய தூதர் நியமிக்கப்பட்டிருப்பதால் இரு நாடுகளுக்கும் எதிர்காலத்தில் உறவு பலப் படும் என்று தெரிவித்துள்ளது. புதிதாக நேற்று முன்தினம் நியமிக்கப்பட்ட அடீப் சலீம் அல்-அஹா, ஏற்கனவே இஸ்ரேலில் பணி புரிந்த அனுபவம் இருப்பதால் இரு நாடுகளுக்கும் நன்கு அறிமுகமானவராவார்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15.09.1924

மறைவு 08.09.2009

திருமதி **செல்லத்துரை கனகம்மா**

**திதி : 04.09.2012**

எம் குடும்பத்தின் மூத்த குலவிளக்காய்
எமக்கெல்லாம் ஒளி தந்து நல்வழி காட்டிய
எம் தீபம் அணைந்து மூன்றாண்டுகள் கடந்தாலும்
எம் நினைவினிலே என்றும் எம்மோடு வாழ்ந்து
எமை வழிநடத்திச் செல்வீரம்மா
மாறாது உம் நினைவு ஆறாது எம் நெஞ்சம்

'தாய் அகம்'
பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(22468)(5.6)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 04 . 1932



மறைவு 16 . 09 . 2011

கடந்த 16.09.2011 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர் **சுந்தரம் தங்கப்பிள்ளை**

(பாக்கியம்)

அவர்களின் ஆண்டுத்திதி கிரியைகள் இன்று (04.09.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரியடி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(22463)(6.8)

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## தவறிவிட்டது

இரத்தினம் சரஸ்வதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (466062294V) சனிக்கிழமை யாழ். பேருந்து நிலையம் அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 0712193

(22482)(6-8)

யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்!!!
Diploma in Mobile Phone Repairing
(Hardware and Software Repairing)
சகலவகையான கைத்தொலை பேசிகளையும் மிகக்குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி!!!
குறிப்பு:- இக் கற்கை நெறியை நீங்கள் கற்பதன் மூலம் ஒரு போன்சொப் ஒன்றை சுயமாக ஆரம்பிக்க முடியும்.
By :- Selvathashan, M.Sc in ICT
மேலதிக விபரங்களுக்கு :- (22480)
UNI - ICT CAMPUS (PVT) LTD
No:83,Palaly Road, Kantharmadam,Jaffna
T.P :- 021 321 6433 / 0777 110 862

மானிப்பாயில் பிரிவுகள் ஆரம்பம் !!!
A/L 2012 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான அனைத்து கணினிக் கற்கைநெறிகளும் மானிப்பாயில் ஆரம்பமாக உள்ளதால் இன்று முதல் எமது நிறுவனத்தில் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்.
முதல் பிரிவு ஆரம்பம் :- 12/09/2012
மேலதிக விபரங்களுக்கு :- (22479)
UNI - ICT Campus
Jaffna Road, Manipay.
T.P - 021 321 6433 / 0777 110862
(மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)

## 27 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 16 ★ 12 ★ 1921



மறைவு 03 ★ 09 ★ 1985

அமரர் **முருகப்பர் கந்தையா**

திதி : அபரபக்க சதுர்த்தி

உங்களுடன் வாழ்ந்த நாங்கள் - இன்று
உங்கள் நினைவுகளுடன் வாழ்ந்து வருகின்றோம்

16, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(22435)(6.,8)

என்றும் உங்கள் நிழலில் வாழும்
குடும்பத்தினர்.

## நிஜம் ஒன்று நிழலாகி ஆண்டு இரண்டானதுவோ

தோற்றம் 12 ★ 12 ★ 1979



மறைவு 28 ★ 08 ★ 2010

திருமதி **பிருந்தா நவநீதன்**

(முகாமைத்துவ உதவியாளர், வலிகாமம் கல்விவலயம்)

திதி : 04.09.2012

பிரிவின் காலம் இரண்டா நம்ப முடியவில்லை
நேற்றுவரை எம்முடன் வாழ்ந்ததாகவே
உள்ளத்து உணர்வலைகள் ஆசையுடன்
அசை போடுகின்றன என்றாலும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை இறைஞ்சி அஞ்சலிக்கின்றோம்

37, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(சி/3040)(6..8)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(03)

வரலாற்று ரீதியில்பார்த்தால் இதில் உண்மையிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இன்றைக்கும் கூட நாடுகளுக் கிடையே உள்ள சந்தேகங்களும் அச்சங்களுமே அவ்வப்போது போர்ச் சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறன.

அச்சத்தின்காரணமாக நாடுகளுக்கிடையே இத்தகைய மோதல்கள் உருவாகும் மனோபாவம் ஏற்படுகிறது என்றால் அது தனிமனிதன் வாழ்க்கையில்ஏற்படுத்துகின்ற பாதிப்புக் களும் சாமான்யமானவையல்ல. நவீன மனோதத்துவ ஆய்வுகள் மனிதனின் பல விபரீத நடவடிக்கைகளுக்கு சிறு பிராயத்தில் அவனிடம் தோற்றுவிக்கப்படும் பய உணர்ச் சியே காரணம் என்று சொல்கின்றன.

நம்முடைய குடும்பங்களிலுள்ள நடைமுறைப்பழக்கங் களை எடுத்துக்கொள்வோம். நமது வீடுகளில் சிறு குழந்தை



உணவு சாப்பிட மறுத் தால் 'பூச்சாண்டி வந்து பிடித்துக்கொள்வான், ஆகவே, சாப்பிடு' என்று குழந்தைக ளுக்கு அச்சமூட்டி அதைச் சாப்பிடச் செய் கிறோம்.

குழந்தை வெளி யில் தூக்கிச் செல்ல வேண்டுமென்று பிடி வாதம் பிடிக்கிறது. என்ன சொன்னாலும் கேட்க மறுக்கிறது. என்ன செய்கிறோம்? "வெளியே போனால் பேய் பிடித்துக் கொள் ளும், பூதம் தூக்கிப் போய்விடும் அவன் வருவான், இவன் வரு வான், உன்னைக் கடத்திக் கொண்டு போய்விடுவான்" என்று பயமுறுத்துகிறோம். பயத்தால் மிர ளும் குழந்தை தன்னுடைய பிடிவாதத்தை விட்டு நம்முடைய யோசனையை ஏற்றுக்கொள்கிறது.

குழந்தையைத் தம்வழிக்குக் கொண்டு வர, பெற்றோர்கள் பயமுறுத்தலை ஒரு சுலபமான முறையாகக்கையாளுகிறார்கள். பெற்றோர்களின் நோக்கம் என்னவோ நிறைவேறி விடுகிறது. ஆனால் இதன் விளைவாக குழந்தையின் மனநிலை எந்த அளவு பாதிப்பிற்கு உள்ளாகிறது என்று எத்தனை பெற் றோர்கள் எண்ணிப்பார்க்கிறார்கள்?

பல வயதானவர்கள் கூட சுலபத்தில் பயஉணர்ச்சிக்கு ஆட்பட்டு செயற்பட முடியாமற் போவதற்கு குழந்தைப் பரா யத்தில் அவர்களிடம் தோற்றுவிக்கப்படும் பயஉணர்ச்சி தான் காரணம் என்று மருத்துவ ரீதியாக இப்பொழுது நிரூபிக் கப்பட்டிருக்கிறது. சிறு வயதில் குழந்தைகளின் ஆழ் மனதில் படியும் பய உணர்ச்சிகள், அவர்கள் பெரியவர்களான பிறகு பல்வேறு நரம்பியல் சம்பந்தப்பட்ட நோய்களாக மாற்றம் அடைவதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பலவிதமான மன நோய்களுக்கு சிறுபராயத்தில் ஏற்படும் அதிர்ச்சி அல்லது பயம் காரணமாக அமைந்து விடுகிறது.

மேல் நாடுகளில் மூளையை அறுவைச் சிகிச்சை செய்யும் போது எலக்ட்ரோடுகளைப் பொருத்தி, மென்மையான அதிர்ச் சியை ஏற்படுத்தி, சிறு வயதில் பயஉணர்ச்சி உண்டானதால் அவர்களுக்கு மூளையில் என்ன பாதிப்பு ஏற்பட்டது என்கிற விஷயத்தை அவர்கள் வாயிலாகவே சொல்லக் கேட்டு அறிந்திருக்கிறார்கள்.

குழந்தை வளர்ப்பு என்பது மேல் நாடுகளில் ஒரு கலை யாக வளர்ந்திருக்கிறது. அங்கெல்லாம் பெற்றோர்களின் நேர டிப்பராமரிப்பு குழந்தைகளுக்குக் குறைவு என்றாலும், தாதி கள் மூலமாகவும், பள்ளிகள் மூலமாகவும் பயிற்சி பெற்ற வர்கள் மூலமாகவும் முறையான குழந்தை வளர்ப்புக்கு அவர் கள் ஏற்பாடு செய்கிறார்கள். அதனால் சிறுபராயத்தில் குழந் தைகளிடம் அர்த்தமற்ற அச்சத்தை ஏற்படுத்தும் பழக்கம் அவர்களிடம் இல்லை. பயிற்சி பெற்றவர்கள் குழந்தை வளர்ப்பில் ஈடுபடுவதால் எவ்வாறு முறையாக வளர்க்க வேண்டுமோ அவ்வாறு முறையாக வளர்க்கிறார்கள்.

நம்முடையநாட்டைப் பொறுத்தவரையில் நேரடியான தாய் அன்பு குழந்தைகளுக்கு நிறைந்தளவில் கிடைக்கிறது என்பது என்னவோ உண்மை! அது ஓர்ஆரோக்கியமான விஷயமும் கூட. ஆனால் அதே சமயம் குழந்தை வளர்ப்பு, மேல் நாட்டைப்போல் விஞ்ஞான அடிப்படையில் நடைபெறு வதாகச் சொல்ல முடியாது.

குறிப்பாக மத்தியதர அல்லது அதற்கும் கீழே வாழ்க்கை வசதிகளைக் கொண்டவர்கள் தங்களுக்கு வாழ்க்கையில் கஷ்டங்கள் ஏற்படுகின்ற பொழுது அதைத் தாங்க முடியாத வர்களாக கோபத்தையும், ஆத்திரத்தையும் குழந்தைகள் மீது காட்டுவார்கள். விவரம் புரியாத குழந்தையின் ஆழ் மனதில் ஒருவகையான பய உணர்ச்சி படிந்து போய், வாழ்க்கையில் அன்புக்கு ஏங்குகின்றவர்களாகவும், அதே சமயம் அது கிடைக்கவில்லையே என்று ஏமாற்றத்துக்கு ஆளானவர் களாகவும் ஆகி, பிற்காலத்தில் விரக்தியாளர்களாக மாறி, வாழ்க் கையைச் சுமை என்று கருதுகின்ற மனநிலையை அடைந்து விடுகிறார்கள். பல குற்றவாளிகளின் இளம் பருவ வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் பெற்றோர்களின் அன்புக்கு இளமைப் பருவத்தில் ஏங்கியவர்கள் என்பது புரியும்.

-பி.சி.கணேசன்-

(தொடரும்)

# கடந்த கால முரண்பாட்டுச் சம்பவங்களால் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பாதிப்பு

## கனடா குளோபல் சிறீலங்கன் போரம் நிறுவுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.4

கடந்தகால முரண்பாட்டுச் சம் பவங்களால் பெண்களும், குழந் தைகளும் அதிகமாகப் பாதிப் படைந்துள்ளனர். அவர்களுக்கு உள மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கான கருத்தூட்டல் நட வடிக்கைகளைச் செயற்படுத்த வேண்டியதே தற்கால சூழலின் தேவையாகவுள்ளது.

- இவ்வாறு கனடா குளோபல் சிறீலங்கன் போரம் நிறுவுநர் ஐயம் பிள்ளை யசோதரன் தெரிவித்தார்.

'துளிர்கள்' நிறுவனத்தின் எட்டா வது ஆண்டு நிறைவு விழாவும் குறுந்திரைப்பட வெளியீட்டு விழா வும் தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்தும் போதே யசோதரன் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தற்காலச் சூழலில் எமது பிரதே சத்தில் சமூகச்சீர்கேடுகள், குடும் பச்சிதைவுகள் என்பன அதிகரித்துக் கொண்டே போகின்றன. இவற்றைச் சீர்ப்படுத்த வேண்டியது கட்டாய் தேவையாக உள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற முரண்பாடுகள் அழிவுச் சம்பவங்கள் என்பன சமூகத்தின் தற்காலப் பிரச் சினைகளுக்கு முக்கிய காரணமாகக் கொள்ளப்பட்டாலும் அதனைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசி யமாகும். முக்கியமாக சிறுவர்கள், பெண்கள் பாதிப்பை எதிர்கொள் ளாத வகையில் உளமேம்பாட்டுச் செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

நாம் இழந்த சிலவற்றையே எம் மால் மீளப்பெற்றுக் கொள்ளமுடி யும். கடந்தகாலச் சம்பவங்களையே நினைவுபடுத்தல் செய்வதால் எந் தப் பயனும் கிடையாது. இழந்த வற்றை மீளப் பெற்றுக் கொள்வதற் கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சமூகத்தில் இவற்றுக்கான விழிப் புணர்வுச் செயற்பாடுகளையும், மாற்று நடவடிக்கைகளையும் துறைசார்ந்த அமைப்புகள் மேற் கொள்ளவேண்டும். இதனை விடுத்து சமூகத்துக்கு ஒவ்வாத செயற்திட் டங்களை நடைமுறைப்படுத்துவ தால் மக்கள் நன்மை அடையப் போவதில்லை.

எனவே தற்கால சமூகத்தின் தேவை எதுவோ அதனைக் கருத் தில் கொண்டு சமூகப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் - என் றார். (எ-14)

# நீர்வேலிச் சங்கத்துக்கு புதிய இயக்குநர் சபை

யாழ்ப்பாணம்,செப்.4

நீர்வேலி பலநோக்குக் கூட்டுற வுச் சங்கத்துக்குப் புதிய இயக்குநர் சபை பெரும் போட்டியின் மத்தியில் தெரிவு செய்யப்பட்டது.

சங்கத்தின் 34 கிளைகளில் 33 கிளைகளுக்கும் கிளைக்குழு தேர் தல் நடத்தப்பட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்து பொதுச் சபை கூட்டப்பட்டு 99 உறுப்பினர்களில் 95 பேர் கூட்டத் துக்குச் சமுகம் கொடுத்தனர்.

பொதுச் சபை கூடியதும் அங்கு பெரும் அமளிதுமளி ஏற்பட்டது டன் காரசாரமான விவாதங்களும் இடம்பெற்றன.

தொடர்ந்து புதிய இயக்குநர் சபை தெரிவு இடம்பெறும்போது பெரும்போட்டி ஏற்பட்டது. இதனை அடுத்து உறுப்பினர் தெரிவு இரக சிய வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதில் சங்கத்தின் முன்னாள் தலைவர் நா.சுந்தரலிங்கம் 69 கூடிய வாக்குகளைப் பெற்று மீண்டும் தலைவராக தெரிவானார்.

இயக்குநர்களாக யோ.மருச லின் 55 வாக்குகளையும், செ.தெய் வேந்திரன் 54 வாக்குகளையும், சு.சுப்பிரமணியம் 54 வாக்குகளை யும், ப.இராசேந்திரம் (உபதலை வர்) 53 வாக்குகளையும் பெற்றனர். த.கௌதமன், இ.புஸ்பாகரன் ஆகிய இருவரும் இரகசிய வாக்கெடுப் பின்றித் தெரிவானார்கள். (த-17)

## தமிழ் இலக்கியத் திறன் பரீட்சையில் வெற்றிபெற்றோர்

கிளிநொச்சி மாவட்டத் தமிழ் சங்கத்தால் நடத்தப்பட்ட திருக் குறள் தமிழ் இலக்கியத் திறன் பரீட்சையில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**திருவையாறு உ.நி.ப.**

சாம்பசிவம் மதுமினா, இலட் சுமணன் கயல்விழி, மகேந்திரன் டோசிகா, பாண்டியராச் தனுசிகா, சிறிதரன் துசாசிகா.

**கிளி.இந்துக் கல்லூரி**

உமாசங்கர் சஞ்திகா, சண்மு கம் மிசைவாணி.

**பரந்தன் இந்து உ.நி.ப.**

பாசுகரன் துச்டிகன்

**சிவநகர் அ.த.க.பள்ளி**

செல்வராசா புவன்யா

(தொடரும்) (எ-6)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 36 ஆவது நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வுகள் அண்மையில் யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் இடம்பெற்றன. நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் இக்னேசியஸ் கமிலஸ் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் மாவட்ட பிரதிச் செயலாளர் லயன் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம், மாவட்ட ஊடகப் பிரிவுத் தலைவர் லயன் எஸ்.கே.நவரத்தினம், கழகத் தலைவர் லயன் கே.பிரதீபன், லயன் சிமாட்டி றோஸ்னி கமிலஸ் உட்பட கழக உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். (எ-9)

# இலக்கியப் பேரவையின் விருது, சான்றிதழ்

இலங்கை இலக்கியப் பேரவையின் 2011 ஆம் ஆண்டுக்கான விருதுபெறும் நூல்களும், சான்றிதழ் பெறும் நூல்களும்

1.ஆய்வு: "தென்னிலங்கையின் புராதன கோயில்கள்" என்.கே.எஸ்.திருச்செல்வம்., சான்றிதழ்: "எகிப்து முதல் இலங்கை வரை இஸ்லாமியர்களின் இசை ஞானம்" 'கலாஜோதி' மௌலவி காத்தான்குடி பௌஸ்.

2.காவியம்: "வாத்தியார் மாப்பிள்ளை" காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன், கொழும்பு. சான்றிதழ்: "தோட் டுப்பாய் மூத்தம்மா" பாலமுனை பாறூக்.

3.கவிதை: "துயரக் கடல்" கி.பி.நிதுன், முல்லைத்தீவு., சான்றிதழ்: "கறுப்பு மழை" பெரிய ஐங்கரன், திருமலை.

4.நாவல்: "சொடுதா" எஸ்.ஏ.உதயன் பேசாலை, மன்னார்., சான்றிதழ்: "[illegible]" [illegible], வவுனியா.

5.சிறுகதை: "[illegible] பொம்மை" சந்திர காந்தா முருகானந்தன், கொழும்பு.,சான்றிதழ்: "அங்கயற் கண்ணியும் அவள் அழகிய உலகமும்" தாட்சாயணி, சாவகச்சேரி.

6.சிறுவர் இலக்கியம்: "சந்திரன்கதை" கலாபூசணம் கேணிப் பித்தன், திருமலை., சான்றிதழ்: "படைப்புகள் மூலம் அல் லாஹ்வை அறிவோம்" எம்.எஸ்.எம்.நுஸைர், காத்தான்குடி.

7.சமயம்: "முன்னோர் சொன்ன கதைகள்" யோகேஸ் வரி சிவப்பிரகாசம், கோப்பாய்.,சான்றிதழ்: "ஸ்ரீ மத் பகவத்கீதை சுலோகம், உரை, விளக்கம், கதைகள்" தமிழறிஞர் கே.வி.குணசேகரன், கோப்பாய்.

8.மொழிபெயர்ப்பு: "முல்லைத்தீவு தாத்தா" திக்குவல்லை கமால்.,சான்றிதழ்: "இந்த நிலம் எனது" கெகிறாவ ஸுலைஹா.

9.அறிவியல்: "எண்ணங்களும் வண்ணங்களும்" கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு, நல்லூர்.

10.பல்துறை: "நேற்றுப்போல இருக்கிறது" தெகிவளை கே.எஸ்.பாலச்சந்திரன்.

11.நாடகம்: "குறுங் கூத்துக்கள் (ஐந்து தென்மோடிக் கூத்துக் கள்)" கலையார்வான் (கு.இராயப்பு), யாழ்ப்பாணம்.

விருதுகள், சான்றிதழ்கள் வழங்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## கிழக்கின் வெற்றி

கிழக்குத் தேர்தல் இறுதிநேரப் பரபரப்புக்குள் நுழைந்து விட்டது. நாளை நள்ளிரவுடன் அங்கு பிரசாரப் பணிகள் அனைத்தும் ஓய்வுக்கு வந்துவிடவேண்டும் என்பதால் கட்சிகளும் அரசியல்வாதிகளும் மிகப் பரபரப்பாகக் கடைசிநேரப் பணிகளில் மூழ்கியிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி உறுதிசெய்யப்பட்டுள்ளது என்பதை அனைத்துத் தரப்புக்களும் ஏற்றுக்கொள்கின்றன. கிழக்கு இன விகிதாசார ரீதியாகப் பிரிந்து கிடப்பது போலவே தேர்தல் முடிவுகளும் வரும் என்பதை எல்லோருமே கணித்துச் சொல்கிறார்கள்.

தமிழ் மக்களிடம் யாருக்கு வாக்களிப்பது என்பதில் தடுமாற்றம் ஏதுமில்லை. பிள்ளையான் மற்றும் கருணா அணிகள் களத்தில் பம்பரமாகச் சுற்றுகின்றபோதும், கூட்டமைப்பின் வெற்றியில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தும் வல்லமை அவர்களிடம் காணப்படவில்லை. அரசு பக்கம் நிற்பதும் மக்களைச் சென்றடையாத அபிவிருத்தி பற்றியே அவர்கள் பேசித் திரிவதும் இதற்கான காரணங்கள்.

இருந்தாலும் வாக்களிப்பதில் தமிழ் மக்கள் கொண்டிருக்கக்கூடிய சந்தேகங்கள் இன்னமும் தெளிவாகத் தீர்ந்தபாடாயில்லை. வாக்களிப்பு நிலையங்களை நோக்கித் தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் திரளாவிடின் நிலைமைகளில் – கூட்டமைப்பின் வெற்றியில் – அது கணிசமான பாதிப்பை ஏற்படுத்தும். இதனை மக்களுக்குப் புரிய வைக்க எடுக்கப்பட்ட பணிகள் போதுமானவை என்று சொல்லிவிட முடியாது.

2008ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வாக்களிப்பதற்கு 9 லட்சத்து 80 ஆயிரம் பேர் தகுதி பெற்றிருந்தனர். அதில் 6 லட்சத்து 46 ஆயிரத்து 456 பேர் மட்டுமே வாக்களித்தனர். இவர்கள் மொத்த வாக்காளரில் 65.78 சதவீதத்தினர். 8 சதவீதமான வாக்குகள் வீணாகி இருந்தன.

மொத்த வாக்களிப்பு வீதம் 65 என்ற உயர் நிலையில் இருந்தாலும் அதில் தமிழர்களின் வாக்களிப்பு வீதம் கணிசமானதாக இருக்கவில்லை. கிழக்கில் போர் முடிந்த கையோடும் வடக்கில் தீவிரமாகப் போர் நடந்து கொண்டிருந்த நிலையிலும் தேர்தல் இடம்பெற்றதால் தமிழ் மக்கள் வாக்களிப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருக்கவில்லை. தேர்தலை அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புறக்கணித்திருந்தமையும் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் குறைந்தமைக்கு மற்றொரு காரணம்.

தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி [அரசு] 20 ஆசனங்களையும் ஐக்கிய தேசிய கட்சி 15 ஆசனங்களையும் ஜே.வி.பி. மற்றும் தமிழ் ஜனநாயக தேசிய முன்னணி ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றி இருந்தன.

இந்த முறை கள நிலைவரங்களும் மக்கள் மனநிலையும் முற்றிலும் மாறி உள்ளன. தேர்தல் களத்தில் தற்போது கூட்டமைப்புக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில்தான் அதிக ஆசனங்களுக்கான போட்டி. அரச கூட்டணி மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு விட்டது. அதேசமயம் அரசின் வாக்குகளில் பாதிப்பை ஏற்படுத்தும் வல்லமை ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பியிடம் இருக்கின்றது. இதனால் இம்முறை அரசின் நிலைமை மேலும் பலவீனமடைந்துள்ளது.

ஆகவே தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் வாக்களிக்க வைத்து எவ்வளவு இடைவெளியில் மற்றக் கட்சிகளை விட முன்னணியைப் பெற்று வெல்வது என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னுள்ள சவால். அதை அவர்கள் சரிவரச் செய்திருக்கிறார்களா என்பது தேர்தல் முடிவில் தெரிந்துவிடும்.

# இலங்கையை மையப்படுத்தி பனிப் போர் மோகம் சூழ்கிறது

■ வி.எஸ்.ரீ

**விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் போன்று இது வெளிப்படையாக உணரப்படாதபோதிலும் ஒழுங்குமுறையில் இந்தியாவும் சீனாவும் பயங்கரமான விதத்தில் இலங்கையில் பலப்பரீட்சையில் ஈடுபடும் நிலை உருவாகியுள்ளது.**

எங்களில் எவருக்கும் வெளிப்படையாகத் தெரியாதபோதிலும் நாங்கள் எவரும் அறியாத விதத்தில் இலங்கையை மையப்படுத்தித் தற்போது பனிப்போரொன்று உருவாகி வருகிறது. இந்தப் பனிப்போரில் சீனாவும் இந்தியாவும் நேருக்கு நேர் மோதிக் கொள்ள ஆரம்பித்துள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் போன்று இது வெளிப்படையாக உணரப்படாதபோதிலும் ஒழுங்குமுறையில் இந்தியாவும் சீனாவும் பயங்கரமான விதத்தில் இலங்கையில் பலப்பரீட்சையில் ஈடுபடும் நிலை உருவாகியுள்ளது. வேறொரு விதத்தில் கூறுவதானால் இலங்கையை மையப்படுத்தி இவ்விரு நாடுகளும் அரசியற்போர் ஒன்றில் இறங்கியுள்ளன என்பதே மிகப் பொருத்தமானதாகும்.

ஆசிய வட்டகையின் இரு பலமிக்க தரப்புகளின் பலப்பரீட்சையின் மத்தியில் இலங்கை சிக்கிக் கொண்டிருப்பது பயங்கரமானது.

இன்றைய இலங்கை அரசின் கொள்கை நிலைப்பாடே இத்தகைய பயங்கர நிலைக்கு நாட்டைத் தள்ளிவிட்டுள்ளது. இந்தியாவைத் தனது மூத்த சகோதரன் எனக் குறிப்பிட்டு எத்தனை தூரம்தான் இலங்கை உயர்த்திப் பேசுகின்றபோதிலும் இலங்கை அரசு சீனாவுடன் தான் மிக நெருக்கமான உறவைப் பேணிவருகிறது.

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணியைச் சீனா பொறுப்பேற்றதையடுத்தே இலங்கை அரசு சீனாவுடன் நெருக்கமான உறவைப் பேண முயல்வதாக இந்தியா உணரத் தலைப்பட்டது. இலங்கை அரசு இரு கை நீட்டி மேற்கொண்ட வலிந்த அழைப்பின் பேரிலேயே சீனா, அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணிகளில் கைபோட்டது.

ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணியில் சீனா ஈடுபடாது புறமொதுங்க வைக்க பல தரப்பட்ட வழிகளில் இந்தியா முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அந்த முயற்சிகளில் இந்தியாவால் வெற்றியீட்ட இயலவில்லை. அந்தக் கௌரவப் போரில் வெற்றியீட்டிய சீனா இன்று அம்பாந்தோட்டை துறைமுகத்தை முற்றுமுழுதாகச் செயற்பட வைக்கும் நிலையை ஏற்படுத்தி வைத்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணியை சீனா கையேற்று எதிர்பார்த்த பலன் அதன் மூலம் கிட்டாது. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான நெருங்கிய நட்பு விரிசலடையக் கூடுமென்ற இந்தியாவின் கணக்கு தப்புக் கணக்காக ஆன நிலையே தற்போதைய களநிலையாகக் கொள்ளத்தக்கது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை முழு அளவில் செயற்படச் செய்ய சீன அரசு ஏற்பாடுகளை மேற்கொண்டு வரும் நிலையில் திரைக்குப் பின்னால் அரசியல் ரீதியில் ராஜதந்திர காய் நகர்த்தல் ஒரு புறம் பயங்கர நிலையொன்றை உருவாக்கி வருகிறது.

சீன இராணுவத்தினரின் உதவியுடன் இலங்கை அரசு, வடபகுதியில் இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கான குடியிருப்புத் தொகுதியொன்றைக் கட்டியெழுப்ப திட்டமிட்டு வருகிறது. இதனை இந்தியா நன்கு கண்காணிக்கிறது.

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணி சீனாவிடம் வழங்கப்படுவதைத் தவிர்த்து விட இந்தியா முடிந்த அளவுக்கு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அது இயலாமற்போய் கடைசியில் தான் ஒதுங்கிக் கொள்ள நேர்ந்ததுபோல ஆகிவிடாமல், இந்த விடயத்தில் தான் தோல்வியுறக் கூடாதென இந்தியா தீர்க்கமாக முடிவு செய்து கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது.

வட பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கென குடியிருப்புத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் பணி சீனாவுக்கு வழங்கப்படுவதற்கு இந்தியா காட்டும் தீவிர எதிர்ப்பு நிலையினின்றும் இது தெளிவாகப் புலப்படுகிறது. ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணியை சீனாவிடம் ஒப்படைப்பது குறித்து இந்தியா காட்டிய எதிர்ப்பை விட, தற்போதைய ராணுவ குடியிருப்பு நிர்மாணப் பணி குறித்து இந்தியா காட்டும் எதிர்ப்பு மூன்று நான்கு மடங்கு அதிகமானது.

இந்தியா வெறுமனே இவ்விடயத்தில் எதிர்ப்பை வெளிப்படுத்துவதோடு நிறுத்திக் கொள்ளத் தயாராயில்லை என்பது அண்மைய நாள்களில் இந்தியா முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் மூலம் உறுதியாகிறது. இந்தியாவுக்கு அண்மையில் அமைந்துள்ள அந்தமான் தீவில் தனது இராணுவ நடவடிக்கைகளைப் பல மடங்கால் அதிகரித்திருப்பதன் மூலம் இந்தியா, இலங்கையின் பக்கம் சிவப்பு விளக்கு சமிக்ஞையைக் காட்ட முயல்வதாகக் கருத முடிகிறது.

அந்தமான் தீவைப் பயன்படுத்தி காட்டப்படும் சிவப்பு விளக்கு சமிக்ஞையை இலங்கைக்கான அபாய அறிவிப்பு மட்டுமல்ல. இராணுவப் பிரசன்னத்தை அதிகரித்தும், புதிதாக விமானப்படை முகாமொன்றை நிறுவியும், மேன்மேலும் உளவுப் பிரிவுகளைப் பயன்படுத்தியும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பயணிக்கும் சீன நாட்டுக் கப்பல்களை வேவு பார்க்கும் நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொண்டு வருகிறது. சீனாவிலிருந்து இலங்கைக்கு வரும் கப்பல்களை வேவு பார்ப்பதற்கு இந்தியாவுக்குக் கிட்டியுள்ள சிறந்ததொரு வாய்ப்பு அந்தமான் தீவே.

அந்தமான்தீவு இத்தகைய உளவு பார்க்கும் வேலைகளுக்கெனவே அமைந்ததுபோன்ற பொருத்தமானதொரு இடமாகும். அதனை இன்று இந்தியா நன்கு பயன்படுத்திக்கொள்வது புதுமையானதொன்றல்ல.

இந்தியா, இலங்கைப் பிரச்சினை விடயத்தில் அமெரிக்காவுடன் இணைங்கிச் செயற்பட விழைவது அண்மைக் காலமாக இந்தியாவின் நிலைப்பாட்டில் அவதானிக்கக் கூடியதாகவுள்ள மற்றொரு தெளிவான மாற்றமாகும். அமெரிக்காவும் கூட சீன விரோதப் போக்கைக் கொண்டுள்ளமையே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உருவாகியுள்ள இப் புதிய நெருக்கம் மற்றொரு விடயத்தைச் சொல்லாமல் சொல்லிப் புரிய வைப்பதாகக் கொள்ளத்தக்கது. அது அந்தமான் தீவில் இந்தியப் படைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு, அமெரிக்கப் படைகள் தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருவதாகும்.

மற்றொருபுறம் அமெரிக்கா அண்மைக்காலமாக முன்வைத்து வரும் கருத்தையும் புறம் தள்ளிவிட இயலாது. அல்கெய்தா அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் தென்னாசிய நாடுகளில் ஊடுருவி அந்த நாடுகளில் மறைந்திருந்தவாறே புகலிடம் பெற்று வருவதாக அமெரிக்கா தெரிவித்து வருகிறது. இலங்கையிலும்கூட அவ்விதம் அல்கெய்தா தீவிரவாதிகள் மறைந்து வாழ்ந்து வருகின்றனர் என்று அமெரிக்கா நம்புகிறது.

அமெரிக்கா இவ்விதம் அல்கெய்தா தீவிரவாதிகள் குறித்து கருத்து வெளியிட்டு வருகையில், இந்தியாவோ, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேச தீவிரவாதிகள் இலங்கைக்குள் ஊடுருவி, இங்கிருந்தவாறே தமது திட்டங்களைத் தீட்டி வருகின்றனர் எனத் தெரிவித்துவருகிறது.

இந்தியாவும் அமெரிக்காவும் வெளியிட்டு வரும் இத்தகைய கருத்துக்கள் மூலமும், மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலமும் இவ்விரு நாடுகளும் சூட்சுமமான விதத்தில் ஏதோ காரணங்களை முன்வைத்து இலங்கையில் கால் பதிக்கத் திட்டமிட்டு வருவதை உணர முடிகிறது.

இவ்விரு நாடுகளுக்கும் இலங்கையில் கால்பதிக்க வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பது இன்றைய அரசே. சீனா தொடர்பாக எமது அரசு கடைக்கொள்ளும் கொள்கை நிலைப்பாடே அதற்கு வழி சமைத்துக் கொடுத்துள்ளது.

சீனாவின் உதவியுடன் இலங்கை அரசு வடபகுதியில் நிர்மாணிக்கவுள்ள பாதுகாப்புப் படையினருக்கான தொடர் குடியிருப்புத் திட்ட வேலைகளை ஆரம்பித்து வைக்கவே சீன நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு வந்திருக்கிறார். இதுவும் அமெரிக்காவையும் இந்தியாவையும் மேலும் விழிப்பு நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

சீன நாட்டுப் பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயம் தொடர்பாக இந்தியா வெளிப்படுத்தவுள்ள பதில் நடவடிக்கை எதுவென கணிப்பதற்கு காலம் இன்னமும் கனியவில்லை. அதேவேளை இவ்விடயத்தில் இந்தியாவுக்கு அமெரிக்கா வழங்கவுள்ள ஆதரவு குறித்தும் குறைத்து மதிப்பிட இயலாது.

இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து தற்போது போரொன்றுக்கு முகம் கொடுக்கத் தயாராகின்றனவா என்பது குறித்து எதுவும் தற்போது கூற இயலாதுள்ளது. ஆனால் மற்றொன்று குறித்து உறுதிப்படுத்த இயலும்.

இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து இலங்கையை மையப்படுத்தி சீனாவுடன் மோதத் தயாராகும் இந்நிலை, மேன்மேலும் தீவிரமடையுமா அல்லது அடங்கிவிடுமா என்பதை, இலங்கை அரசு இவ்விடயத்தில் மேற்கொள்ளவுள்ள முடிவு மற்றும் கடைக்கொள்ளவுள்ள கொள்கை நிலைப்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது.

இலங்கையை மையப்படுத்தி உருவாகிவரும் இப்பனிப் போர் இலங்கையின் வாசற்கதவைத் தட்ட நேர்ந்துள்ள இன்றைய நிலையில், இலங்கை அரசு ஒன்றை மட்டும் மனதில் இருத்திச் செயற்பட வேண்டியுள்ளது. அது இந்தியா, அந்தமான் தீவில் இராணுவ முகாம் நிறுவுவதும், அதற்கு அமெரிக்காவின் உதவி ஒத்தாசை கிட்டுவதும், வெறுமனே இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பயணிக்கும் சீன நாட்டுக் கப்பல்களை வேவுபார்ப்பதற்காக மட்டுமல்ல என்பதாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்துவரும் தொல்காப்பியம்

தொல்காப்பியத்திற் குப் பாயிரம் ஒன்று இருக்கிறது. அதில்தான் தமிழகத்தின் எல்லை ''வடவேங்கடம் தென் குமரி ஆஇடைத் தமிழ் கூறும் நல்லுலகம்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'பாயிரம்' என்னும் முன்னுரை எழுதியவர் தொல்காப்பியருடன் கல்வி பயின்ற பனம்பாரனார்.

■ சா.கந்தசாமி

மனிதர்கள் ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து பேசக் கற்றுக்கொண்டு விட்டார்கள் என்று மனித சரித்திரத்தை ஆராய்ந்தவர்கள் சொல்கிறார்கள்.

பேச்சு என்பது ஒலி. அதாவது சப்தம். வாய் மொழியாக எழுப்பும் சப்தத்தையே பேச்சு என்றும் சொல் என்றும் குறிப்பிடுகிறார்கள். அது சீராக ஒழுங்குபடுத்தப்பட்டது.

''எல்லாச் சொல்லும் பொருள் உடையது'' என்று தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் குறிப்படுகிறது. பொருள் இல்லாத சொல் கிடையாது. சொற்களை ஒவ்வொன்றாகச் சேர்த்துத்தான் மொழியாக்கினார்கள்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு எண்ணங்களையும் கருத்துகளையும் மனிதர்கள் சித்திரங்களாக வரைந்து வந்தார்கள். சித்திரங்களில் இருந்து மொழிக்கான எழுத்துகளை உருவாக்கிக் கொண்டார்கள்.

உலகத்தில் 'ஆறாயிரத்துக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டு வருகின்றன என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். எல்லா மொழிகளும் ஒரே மொழியில் இருந்து பிரிந்தவை என்றும், மனிதர்கள் புலம்பெயர்ந்ததால் வாழுமிடம், வாழ்க்கை முறை, பயன்படுத்தப்படும் கருவிகள் ஆகியவற்றின் அடிப்படையில் மொழிகள் தனியாகின என்பதும் மொழிகள் பற்றி ஆராய்ந்தவர்களின் கூற்றாக இருக்கிறது.

ரோமன், கிரேக்கம், பாரசீகம், ஹீப்ரு, சமஸ்கிருதம், தமிழ், சீனம் ஆகியவை உலகத்தின் பழைய மொழிகள். இந்த ஒவ்வொரு மொழியும் தனியாக இலக்கண நூல்களையும், இலக்கிய நூல்களையும் கொண்டுள்ளது.

தமிழ்மொழியின் இலக்கண நூல் தொல்காப்பியம். அது கி.மு. ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பது சிலரின் கருத்து. இன்னும் சிலர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு நூல் என்றும் மற்றும் சிலர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு நூல் என்றும் கூறுகிறார்கள்.

தொல்காப்பியம் எழுதியவர் தொல்காப்பியர். அவர் சேரநாட்டில் பிறந்து வளர்ந்தவர். அகத்தியரின் மாணவர்களில் ஒருவர் என்று சொல்லப்படுகிறது. ஆனால், தொல்காப்பியர் பற்றி உண்மையான வரலாறு எழுதப்படாமல் இருக்கிறது என்பதுதான் உண்மையாகும். தொல்காப்பயத்திற்கு முன்னால் தமிழில் பல இலக்கண நூல்களும், இலக்கிய நூல்களும் இருந்தன என்பதற்கு தொல்காப்பியமே சான்றாக இருக்கிறது.

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் - என்று மூன்று அதிகாரங்கள் கொண்டது தொல்காப்பியம். ஒவ்வோர் அதிகாரத்துக்கும் ஒன்பது இயல்கள். ஆக இருபத்தேழு இயல்கள் கொண்டது. பாடல்களாகவே கருத்துக்கள் சொல்லப்பட்டு இருக்கிறது. அதை சூத்திரம் அல்லது நூற்பா என்று குறிப்பிடுகிறார்கள். தொல்காப்பியம் 1,610 நூற்பாக்கள் கொண்டது என்று சிலரும், 614 நூற்பாக்கள் கொண்டது என்று சிலரும் பிரித்திருக்கிறார்கள். இந்தப் பிரிவு தொல்காப்பியர் செய்ததில்லை. தொல்காப்பியத்தின் உரையாசிரியர்கள் செய்தது.

தமிழ் நூல்கள் பெரும்பாலும் கடவுள் வாழ்த்தோடு தொடங்குவது வழக்கம். ஆனால், தொல்காப்பியம் கடவுள் வாழ்த்தோடு தொடங்கவில்லை. அதற்குப் பின்னால் யாரும் கடவுள் வாழ்த்துப் பாடி சேர்க்கவும் இல்லை.

தமிழின் பண்டைய நூல்களில் தொல்காப்பியம் கடவுள் வாழ்த்து இல்லாமலேயே இருக்கிறது. ஆயினும் தொல்காப்பியம் கடவுள் வாழ்த்துப் பற்றிக் குறிப்பிடுகிறது. ''கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'' என்பது தொல்காப்பிய நூற்பா.

தொல்காப்பியத்திற்குப் பாயிரம் ஒன்று இருக்கிறது. அதில்தான் தமிழகத்தின் எல்லை ''வடவேங்கடம் தென் குமரி ஆஇடைத் தமிழ் கூறும் நல்லுலகம்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'பாயிரம்' என்னும் முன்னுரை எழுதியவர் தொல்காப்பியருடன் கல்வி பயின்ற பனம்பாரனார்.

தொல்காப்பியத்தின் முதல் அதிகாரம் எழுத்ததிகாரம். அது, தமிழ் முதல் எழுத்துகள் முப்பது என்று சொல்கிறது. அதாவது ''எழுத்து எனப்படுவது அகரம் முதல் னகரம் இறுவாய் முப்பது என்ப'' என்கிறது.

தமிழ் எழுத்துகள் பற்றிச் சொல்லும் தொல்காப்பியம் எழுத்தின் வடிவம்பற்றிச் சொல்வது இல்லை. அதுபோலவே தமிழ் மொழி எழுத்துக்கு என்ன பெயர் என்பதையும் குறிப்பிடவே இல்லை. மெய்யெழுத்துகள் புள்ளிபெறும் என்கிறது. ஆனால், புள்ளி எங்கே இருக்கும் என்று சொல்லவில்லை.


எழுத்ததிகாரம் எழுத்துகள் பிறப்பதைச் சொல்கிறது. ஒலிதான் சொல்லாகி எழுதப்படுகிறது. ஒலியைத் தமிழில் அரவம், இசை, ஓசை என்கிறார்கள். அது ஒலியை நன்கு அறிந்ததன் விளைவாகும். சீன மொழியைத் தவிர, மற்றெல்லா மொழிகளும் ஒலி எழுத்துகளால்தான் எழுதப்படுகின்றன.

முதன்முதலாக ஒலி எழுத்துகள் முறை என்பது எங்கிருந்து - எந்த மொழியில் இருந்து தொடங்கியது என்பது தெரியவில்லை. ஆனால், தமிழ் எழுத்துகள் ஒலி எழுத்துகள் முறையிலேயே எழுதப்படுகிறது.

சொல்லதிகாரம், தொல்காப்பியத்தின் இரண்டாவது அதிகாரம் அது 463 நூற்பாக்கள் கொண்டது. எழுத்துகள் சொல்லுக்கு முதல் ஆதாரம் கிடையாது. சொல்லப்படுவது சொல். சொல், பின்னால் எழுத்தால் எழுதப்படுகிறது.

ஒரு மொழிக்கு முதலில் சொல்தான் வந்தது. எழுத்து, ஒரு மொழிக்குப் பின்னால்தான் வந்தது. ஐரோப்பாவில் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னால்மொழியை எழுத எழுத்துகளைக் கண்டுபிடித்தார்கள் என்கிறார்கள்.





சொல்லதிகாரம், தமிழ் மொழியை எவ்வாறு பேசுவது, எவ்வாறு எழுதுவது, பேசவும் எழுதவும் எவ்வாறு சொற்களை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் சொல்லும். ''எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி'' என்று விளக்கம் தருகிறது பாயிரம்.

தொல்காப்பியத்தின் இறுதியதிகாரம் பொருளதிகாரம். பொருள் என்றால் தொல்காப்பியத்திற்கு வாழ்க்கை. மனிதர்கள் தங்கள் அறிவாலும் ஆற்றலாலும் கண்டறிந்த எழுத்தையும் சொல்லையும் கொண்டு புனையப்படும் வாழ்க்கைக்கு - இலக்கியத்திற்கு இலக்கணம் கூறுகிறது பொருளதிகாரம். அது அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவம இயல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது இயல்களைக் கொண்டது.

தமிழ் இலக்கியம் என்பது திணைக் கோட்பாட்டைச் சேர்ந்தது. அது ஏழு திணைகள் என்று தொல்காப்பியம் கூறுகிறது. ஏழு திணைகளில் ஐந்து அதாவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பவை நிலங்கள் கொண்டவை. அதில் நிலம் இல்லாத பாலையும் சேர்ந்து விடுகிறது. அதுவே அகத்திணை.

அகத்திணை முதல், கரு, உரிப்பொருள்களால் இலக்கியமாகச் சொல்லப்படுகிறது. அகத்திணைப் பாடல்களில் தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலித்தாய் பெயர் குறிப்பிடப்படுவது இல்லை. மேலும் நடந்தது கூற்றுகளாகவே சொல்லப்பட்டுகின்றன

''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்'' என்பது தொல்காப்பியக் கூற்று. வாழ்க்கை என்பது புனைவு வகையாலும், உலகியல் வழக்காலும் பாடல் சான்ற மரபு வழியாகச் சொல்லப்படும் என்கிறது.

தொல்காப்பியம், பொருளதிகாரம் 667 நூற்பாக்கள் கொண்டது. இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தொல்காப்பியத்திற்குள் இடைச்செருகல் - அதாவது புலவர்கள் எழுதிச் சேர்த்த சில பகுதிகள் இருக்கின்றன என்றும் மொழியையும் சொல்லப்படும் முறையையும் வைத்துக்கொண்டு சொல்கிறார்கள். தொல்காப்பியம் தமிழகத்தில் எந்தக் கல்வெட்டிலும் பொறிக்கப்படவில்லை. எனவே காலம்தோறும் பனைவோலையில் எழுதிப் படித்து வந்தார்கள். அதனால், எழுத்து மாறுதல் ஏற்பட்டது போல இடைச்செருகல்கள் ஏற்பட்டுவிட்டன.

தமிழில் தொல்காப்பியத்திற்குப் பிறகு சிறந்த இலக்கண நூல் எழுதப்படவில்லை. இலக்கணத்தைப் புதிதாக எழுத எந்த முயற்சியும் செய்யப்படவில்லை. பத்தாம் நூற்றாண்டில், அதாவது தொல்காப்பியம் எழுதப்பட்ட ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகு அதற்கு உரை எழுத ஆரம்பித்தார்கள். தங்கள் காலத்து இலக்கண, இலக்கிய அறிவின் அடிப்படையில் மொழிப் புலமையின் வழியாக உரை எழுதினார்கள்.

இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், கல்லாடர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் உரைகள் சிறப்பான உரைகள் என்று ஏற்கப்பட்டிருக்கின்றன. பன்னிரண்டாம் நூற்றாண்டில் பவநந்தி புலவர், ''நன்னூல்'' என்ற இலக்கண நூல் எழுதினார்.

எளிய முறையில் தமிழ் பேசவும், எழுதவும் நன்னூல் ஆதாரமாக அமைகிறது. எனவே தமிழ் படிக்க ஆரம்பித்தவர்கள் அதையே இலக்கண நூலாக வைத்துக் கொண்டார்கள். தொல்காப்பியப் படிப்பு குறைந்தது. ஆனால், பதினெட்டாவது நூற்றாண்டில் கிறிஸ்துவ ஊழியம் செய்ய தமிழகம் வந்து தரங்கம்பாடியில் பணியாற்றிய பார்த்தோலோமியோ சீகன்பாகு, தான் படித்த தமிழ் நூல்களில் முதல் நூலாக தொல்காப்பியத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

1847ஆம் ஆண்டில் முதன்முதலாக தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரையுடன் அச்சிடப்பட்டது. பின்னர் தமிழறிஞர்கள் தொல்காப்பியத்தின் மூலம், உரைகள் ஆகியவற்றை அச்சிட்டார்கள்.

தொல்காப்பியம் மனித அறிவால் பல்லாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது. ஆனால், அது குழப்பமான நூல் கிடையாது. அதன் மொழி எளிமையானது. படிப்பது என்பதில் சிக்கலற்றது. ஆனால், பழைய நூல் என்பதால் பல சொற்களுக்கு அர்த்தமும், சொல்லப்பட்ட முறையால் என்ன சொல்கிறது என்பதை அறிந்துகொள்வதில் இடர்பாடும் ஏற்படுகிறது. தமிழின் முதல் நூல் என்றும், அறிவின் உச்சமான படைப்பென்றும் ஏற்கப்பட்டுள்ள தொல்காப்பியம் கற்க வேண்டிய நூல் இல்லையென்றும் - அதனைக் கற்பதால் நவீன காலத்துக்குப் பயன் ஏதுமில்லை என்றும் கருதிய கல்வியாளர்கள், பேராசிரியர்கள் தமிழ் முதுகலை படிக்கும் மாணவ - மாணவிகள் மட்டும் படித்தால் போதுமென தமிழர் வாழும் பல இடங்களில் அரண் எழுப்பிவிட்டார்கள். இது மிக வேதனைக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமும் குரங்கும்

ஒரு சமயம் பெர்னாட்ஷாவைப் பார்த்து, ''உலகம் ஏன் உங்களைச் சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது?'' என்று கேட்டார்களாம்.

அதற்கு அவர் ''ஒரு வருடத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைக்கு மேல் யாருமே சிந்திப்பது கிடையாது... நான் வாரத்தில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை சிந்திக்கின்றேன். அதனால்தான் உலகம் என்னைச் சிந்தனையாளர் என்று பாராட்டுகின்றது'' என்றாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

மனிதர்கள் யாருமே அதிகம் சிந்திப்பதில்லை.

மனம் சுத்தமாக இருக்கவேண்டும். அப்போது தான் சிந்தனையும் தெளிவாக இருக்கும். மனம் எந்த அளவுக்கு சுத்தமாக இருக்கவேண்டும் என்று தெரியுமா?

அதற்கு மார்க்ஸ் அரேலியஸ் என்ற அறிஞர் ஒரு அளவுகோல் கொடுத்திருக்கிறார்.

திடீரென்று உங்கள் முன்னால் ஒருவர் வந்து நின்று, ''நீங்கள் இப்போது என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்... அப்படியே சொல்லுங்கள்!'' என்று கேட்டால், உடனே தயங்காமல் உள்ளது உள்ளபடியே... இதைத்தான் இப்போது நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன் என்று சுலபமாகச் சொல்லக் கூடிய அளவுக்கு மனம் இருக்க வேண்டும். அது தான் சுத்தமான மனம்'' என்கிறார் அவர்.

அப்படிச் சொல்லக்கூடிய நிலையிலா நாம் இருக்கிறோம்? ''வெளிப்படையாகப் பேசுங்க!'' என்றுகேட்டால்... ''அது எப்படி'' மனதில் நினைப்பதையெல்லாம் வெளியில் காட்டிக் கொள்ள முடிகிறதா?'' என்றுதானே கேட்கிறோம்.

பிறகு எப்படி மனம் சுத்தமாயிருக்கும்? சுத்தமாக ஆகும்?

நம்மில் பலர் மனதை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறோம். ஆனால் அது முடிவதில்லை... மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

சும்மாவா சொன்னார்கள் ...? 'மனம் ஒரு குரங்கு மாதிரி' என்று? அது சரி... மனதிற்கும் குரங்கிற்கும் அப்படி என்ன சம்பந்தம்?

இரண்டும் அடிக்கடித் தாவிக் கொண்டிருக்கிறது. இது தான் நமக்குத் தெரிந்த ஒற்றுமை.

என்னுடைய நண்பர் ஒருவர்... இதற்கு இன்னொரு விளக்கம் கொடுத்தார்:

''மனம்- குரங்கு இந்த இரண்டையுமே எப்போதும் கட்டுப்படுத்தியே வைத்திருக்க வேண்டும்... இல்லாவிட்டால் நமக்குத்தான் கஷ்டம்'' என்றார். ''எப்படி?'' என்றேன். அதற்கு அவர் சொன்ன கதைதான் இது.

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் தன்னுடைய அரண்மனையில் ஒரு குரங்குக் குட்டியை வளர்த்து வந்தார். அந்தக் குரங்கு ஒரு சுவற்று ஓரமாக மிகவும் சாதுவாக உட்கார்ந்திருக்கும். அப்படியிருந்தாலும்கூட அந்த ராஜா தினமும் ஒரு குச்சியால் அதற்கு இரண்டு அடி கொடுப்பான். அந்த அடியை வாங்கிக்கொண்டு... குரங்குக் குட்டி அங்கே கிடைக்கும் ஆகாரத்தையும் சாப்பிட்டுக் கொண்டு மிகவும் சாதுவாகக் காலம் தள்ளிக் கொண்டிருந்தது .

அந்த ராஜாவுக்கு புதிதாக ஒரு மந்திரி வந்து சேர்ந்தார். அவர் தினமும் ராஜா கூடவே இருப்பார். ராஜா அந்த குரங்குக் குட்டியை அடிப்பதை மந்திரி பார்த்தார். அவர் மனசுக்கு சங்கடமாக இருந்தது.

ஆதலால் அவர், ''அரசே! என்ன இது அநியாயம்? வாயில்லா ஜீவன்... அதுவுமில்லாமல் அது மிகவும் சாதுவாக ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறது...அதைப் போய் தினமும் அடிக்கிறீர்களே! '' என்று கேட்டார்.

அதற்கு ராஜா, ''சரி அமைச்சரே! உங்கள் வார்த்தைக்கு நான் மரியாதை கொடுக்கிறேன். இன்றிலிருந்து இந்தக் குச்சியை கீழே போட்டுவிடுகிறேன் '' என்றார். குச்சியைக் கீழே போட்டும் விட்டார். அதன் பிறகு தினமும் மாலையில் ராஜாவும் அமைச்சரும் அந்தப் பக்கமாக வருவார்கள்... போவார்கள்.

ராஜா அடிக்கவில்லை என்று தெரிந்ததும் குரங்கு கொஞ்சம் அசைய ஆரம்பித்தது. அடுத்த நாள் ஓடி விளையாட ஆரம்பித்தது. அதன்பிறகு ராஜாவிடம் ஓடி வந்து கொஞ்ச ஆரம்பித்தது! அதற்கு அடுத்த நாள் என்ன செய்தது தெரியுமா? ராஜா தோளில் ஏறி உட்கார்ந்து... அந்தக் குச்சியால் ராஜாவின் காதில் குத்த ஆரம்பித்தது. பார்த்தார் அமைச்சர்...

என்ன இது? ராஜா என்ற மரியாதை இல்லாமல் '' என்று சொல்லி அந்தக்குச்சியைப் பிடுங்கிக் குரங்கை அடிக்க ஆரம்பித்து விட்டார்.




இப்போது ராஜா அமைச்சரைப் பார்த்து, ''இதே வேலையைத்தானே நான் ஆரம்பத்திலேயே செய்து கொண்டிருந்தேன்!'' என்று கேட்டார்.

இப்போதுதான் அமைச்சருக்கு 'குரங்கையும் - மனத்தையும் அடக்கி வைத்திருக்கும் வரையில் தான் அடங்கியிருக்கும்' என்ற உண்மை புரிந்தது.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# யாத்திரைத் தலமாக விளங்கும் குருநகர் புனித ஆரோக்கியநாதர்



**எஸ்.யேசுதாஸ்**

(கடந்த வாரத் தொடர்ச்சி)

ஓலைக் கொட்டிலாக ஆரம்பித்து வழிபட்டுவந்த ஆரம்ப ஆலயம் அமைந்திருந்த காணி உரிமையாளர், வேறொருவருக்கு அக்காணியை விற்றமையினால் புதிய இடத்தை தேடவேண்டிய நிலை உருவானது. தற்போது சென்றோக் வித்தியாலயம் அமைந்திருக்கும் பகுதியில் திருச்சொரூபம் வைக்கப்பட்டு அ.செல்லையாவினால் ஆதரிக்கப்பட்டு வந்தது.

1943 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 5 குருக்கள் ஒன்றிணைந்து இவ் ஆலயத்தின் திருப்பணியை நிறைவேற்றி விழாக் கொண்டாடினார். தொடர்ந்து கோவிலுக்குரிய வழிபாட்டு முறைகள் ஆரம்பிக்கப்பட்டு யாத்திரைத் தலமாகவும் பிரபல்யம் அடைந்தது.

புனிதரின் சிறப்பும் அருளும் நாடளாவிப் பரவியபோது நவநாள்களாக விழா ஒழுங்கமைக்கப்பட்டு மிக நேர்த்தியான முறையில் திருவிழா கொண்டாடப்பட்டது. யாழ் குடாநாட்டிலிருந்து மட்டுமல்லாது சிலாபம், நீர்கொழும்பு, தீவகப் பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் யாத்திரையாக இங்கு வந்து புனிதரூடாகப் பெற்ற சகாயங்களுக்காக நன்றிப் பெருவிழா எடுத்தனர்.

அப்போது இப்பகுதியில் நாட்டுக்கூத்தில் பிரபல்யம் பெற்று விளங்கிய மச்சுவாய்யோசேப்பு, ஊசன் அந்தோனிப்பிள்ளைபோன்ற அண்ணாவிமார் அப்பகுதிக் கலைஞர்களை ஒன்றிணைத்து ஆரோக்கியநாதர் மற்றும் கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்களை மேடையேற்றி வந்தனர். பலபகுதிகளிலும் இருந்து வந்து கூடிய மக்கள் 'வேஸ்பர்' இரவில் இங்கு தங்கி, நாட்டுக் கூத்தைக் கண்டு களித்து மறுநாள் திருவிழாவைக் கொண்டாடிச் செல்வது வழமையாக இருந்து வந் ததாக முதிய கலைஞர் ஒருவர் தெரிவித்தார்.

அந்த நேரத்தில் திருநாள் கொண்டாட்ட தினங்களை பல சமூகத்தினரிடையே பகிரும் முறையில் மக்களிடையே சர்ச்சைகள் இடம்பெற்றன. அதனால் கத்தோலிக்க திருச்சபை ஆரோக்கியநாதர் வழிபாட்டிற்கு தடைவிதித்து ஆலயத்தைப் பூட்டிவிட்டது. அங்கிருந்த 3 சொரூபங்களில் ஒன்று வட்டக்கச்சிக்கும், மற்றையது திரேசம்மா கோவிலுக்கும் வழங்கப்பட்டது.

புதிய ஆலயத்தின் அர்ச்சிப்புத் திறப்புவிழா பங்குத்தந்தை அருட்திரு எஸ்.எச்.கில்லரி ஜெபநேசன் தலைமையில் 24.08.1984 இல் சிறப்பாக நடைபெற்றது. 80 ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதியில் வீற்றிருந்து இயேசுவிடம் பரிந்துரைத்து பக்தர்களின் இன்னல்களைப் போக்கி வரும் ஆரோக்கியநாதரின் திருவிழா வருடாந்தம் ஆவணி மாதம் 27ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

இந்த இடைநிறுத்தத்தை ஆட்சேபித்த சென்றோக் சனசமூக நிர்வாகிகள், பெரியோர் பிரதான சொரூபத்தை பொறுப்பேற்று சனசமூகநிலைய மண்டபத்தில் ஸ்தாபித்து ஆராதனை செய்து வருடாந்தம் திருவிழாவை பலி பூசையின்றி கொண்டாடி வந்தனர். இங்கும் பக்தர்கள் பெருமளவில் பங்கேற்றதையடுத்தும் நிலையத் தலைவர் ஜெராட் மற்றும் நிர்வாகிகள் எடுத்த முயற்சியின் பயனாக திருப்பலி பூசையுடன் திருவிழாக் கொண்டாட அனுமதி கிடைத்தது.

இவ்வேளையில் பழைய ஆலயத்தில் திரு இரு தயநாதர்சொரூபம் ஸ்தாபிக்கப்பட்டு திரு இருதயநாதர் ஆலயம் எனப்பெயர் பெற்றது. சிலகாலங்களின் பின்னர் புனித ஆரோக்கியநாதர் சொரூபத்தையும் ஆலயத்தில் வைத்து வழிபட்டு திருவிழாக் கொண்டாட சமயநிர்வாகிகள் ஆலோசனை அளித்ததன் பேரில் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக சனசமூக நிலையத்திலிருந்து சொரூபத்தை பக்திப்பவனியாக எடுத்துவந்து ஆலயத்தில் வைத்தார்கள். வருடாந்தம் திரு இருதயநாதர், ஆரோக்கியநாதர் திருவிழாக்கள் நடைபெற்றுவந்தன.

1930 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆரோக்கியநாதரின் ஆலயம், பல்வேறு இடங்களில் தற்காலிகமாக இயங்கி வந்த நிலையில் தற்போதைய இடத்தில் நிரந்தர ஆலயம்அமைக்கும்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆலயப்பகுதிக்கு அண்மையில் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதிவரை யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான கழிவகற்றல் பகுதியின் வண்டில்கள் தரிப்பிடமாக பயன்படுத்தப்பட்டு வந்தது.

அக்காலப்பகுதியில்வாளி மலசலகூடங்களையே மக்கள் பெரிதும் பயன்படுத்தி வந்தனர். இவற்றின் மலக்கழிவுகள் தினமும் மாநகரசபையால் வண்டில்கள்மூலம்அகற்றப்பட்டு மணியந்தோட்டத்தில் மக்கள் நடமாட்டம் அற்ற பகுதியில் புதைக்கப்பட்டு வந்தன. இப்பணிக்கு பயன்படுத்தும் வண்டில்களை நிறுத்திவைக்கும் இடமாக இப் பகுதி இயங்கிவந்தது. பின்னர் மாநகர சபையின் வழிகாட்டலுக்கு அமைய நீரடைப்பு குழி மலசல கூடங்கள் பாவனைக்கு வந்ததையடுத்தும், சுகாதார சீர்கேட்டை சுட்டிக்காட்டி இப்பகுதி மக்கள் கழிவகற்றல் வண்டில்கள் தரிப் பிடத்தை அகற்றக்கோரி போராட்டங்கள் நடத்தியதைத் தொடர்ந்தும் வாளி மலசலகூட பாவனை நிறுத்தப்பட்டதோடு தரிப்பிடமும் அகற்றப்பட்டது.

அதேநேரம் புதிய ஆலயம் அமைப்பதற்கு இடவசதிப் பற்றாக்குறை காரணமாக இவ்விடத் தின் ஒரு பகுதியையும் இணைத்து நிரந்தர ஆலயம் அமைக்க தீர்மா னிக்கப்பட்டது. 28.07.1982 இல் யாழ். ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையால் ஆலயத்திற்கான அடிக்கல் நடப்பட்டது.

பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு செல்வராஜா அடிகளின் வழிகாட்டலில் அள்ளிக் கொடுக்கும் வள்ளல்கள் பலரின் உதவியினாலும், சனசமூக நிலைய இளைஞர்கள் பொதுமக்களின் பிரயாசையாலும் ஆலயப்பணிகள் நிறைவடைந்தன.

புதிய ஆலயத்தின் அர்ச்சிப்புத் திறப்புவிழா பங்குத்தந்தை அருட்திரு எஸ். எச் கில்லரி ஜெபநேசன் தலைமையில் 24.08.1984 இல் சிறப்பாக நடைபெற்றது. 80 ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதியில் வீற்றிருந்து இயேசுவிடம் பரிந்துரைத்து பக்தர்களின் இன்னல்களைப் போக்கி வரும் ஆரோக்கியநாதரின் திருவிழா வருடாந்தம் ஆவணிமாதம் 27ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

கொட்டில் கோவிலாக ஆரம்பிக்கப்பட்ட போது வைத்து வணங்கப்பட்ட புனிதரின் திருவுருவப்படம் இன்று வரை ஆலயத்தில் பாதுகாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. எவ்வித கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டோரும் உடலில் சாணத்தைப் பூசி பயபக்தியுடன் ஆலயக்கிணற்றில் நீராடி நலமடைந்ததாக மூத்தோர் வாயிலாக அறியமுடிகிறது. தற்போது பேராலய பங்குத்தந்தை அருட்திரு ஆர். எச். சகாயநாதன் அடிகள் ஆன்மிக கடமைகளைக் கவனித்து வருகிறார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியப் பரீட்சை 8 இல்

## சித்தியடைந்தால் தமிழருக்குச் சிறந்த பெறுபேறு என்கிறார் அரியம் எம்.பி.

எருவில்,செப்.4

எதிர்வரும் 8ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் நடைபெறவிருக்கும் தமிழ்த் தேசியப் பரீட்சையில் சித்தியடைவோமாக இருந் தால் எதிர்காலத்தில் நல்லதொரு பெறுபேற்றினை சர்வ தேசத்திடம் இருந்து எதிர் பார்க்க முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார். வளத்தாப்பிட்டியில் கூட்டமைப்பின் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நடைபெற்று முடிந்தவை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் உயர் தரப்பரீட்சை. எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவிருப்பது தமிழ் மக்களுக்கான தமிழ்த் தேசியப் பரீட்சை. இந்தப் பரீட்சையில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் கலந்து கொண்டு பரீட்சைக்கு விடை எழுதமுடியும். இதற்கு எடுக்கும் நேரம் ஒருநிமிடம் மட்டுமே. இந்த ஒரு நிமிடத்திலேதான் தமிழினத் தின் தலைவிதி தங்கியிருக் கின்றது என்பதை மானமுள்ள ஒவ்வொரு தமிழனும் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

கடந்த 60 வருடகால போராட்டத்தில் எமது மக்கள் பட்ட இன்னல்களுக்கும் துன்ப, துயரங்களுக்கும் சர்வதேசம் நல்தொரு முடிவைக்கொடுக்கும் தறுவாயில் உள்ளது. இந்த நேரத்தில் அரசுக்கு நல்லதொருபாடத்தைப்புகட்டி அதற்கு தண்டனை பெற்றுக்கொடுக்கப் போகின்றீர்களா?



பரீட்சையில் 18 வயதுக்கு மேற் பட்ட ஆண், பெண் இருபாலரும் கலந்து கொண்டு பரீட்சைக்கு விடை எழுத முடியும். இதற்கு எடுக்கும் நேரம் ஒருநிமிடம் போதுமானது.

அல்லது மாற்றுக்கட்சிக்கு வாக்களித்து தமிழ்மக்கள் பட்ட அனைத்து வேதனைகளையும் சோதனைகளையும் மறந்து மஹிந்த அரசைக் காப்பாற்றப் போகின்றீர்களா?

இதற்கான சரியான முடிவை எதிர்வரும் 8ஆம் திகதி நீங்களே தேடிக்கொள்ளுங் கள். இந்தப் பரீட்சைக்கு உரிய முறையில் விடையெழுதத் தவறின் அது தமிழ்த் தேசியத்துக்குத் துரோகம் இழைத்தவர்கள் பட்டியலில் நீங்களும் உள்வாங்கப்பட வழி சமைக்கும்

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொடங்கி அனைத்து நாட்டு அரச தலைவர்களும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலை உன்னிப்பாக எதிர்பார்த்துக் கொண் டிருக்கின்றார்கள். இந்தத் தருணத்திலாவது தமிழ் மக்கள் சிந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைவெற்றி பெறச் செய்ய வேண்டும் - என்றார். (ச-31)

## மு.காங்கிரஸ் உறுப்பினருக்கு கத்திக் குத்து

மட்டக்களப்பு,செப்.4

அக்கரைப்பற்றிலுள்ள, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாவட்ட அலுவலகப் பொறுப்பாளர் ஏ.எல்.மர்ஜுன் மாற்றுக் கட்சியினரால் தாக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது.

அக்கரைப்பற்று மத்திய குழுவின் உப தலைவருமான இவர், கத்திக் குத்துக்கு இலக்காகி, காயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

## திருட்டுடன் தொடர்புடைய ஐவர் கைது

கண்டி,செப்.4

ஹற்றன் பொலிஸ் பிரிவில் நடைபெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று பேரை ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹற்றன் பிரதேசத்தில் நடைபெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பொழுது இவருக்கு உதவிய இரண்டு பாடசாலை மாணவர்கள் தொடர்பான தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

தற்போது இந்த இரண்டு மாணவர்களும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்கள் ஹற்றன் பகுதியில் பிரபல பாடசாலையொன்றில் தரம் 8 இல் கல்வி கற்பவர்கள்என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் வீட்டுப் பாவனைக் பொருள்கள், பணம் மற்றும் கடைகளில் இலத்திரனியல் பொருள்கள் திருடியது மட்டுமல்லாமல் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களையும் திருடி அவற்றை பகுதியாகப் பிரித்து விற்று வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இவர்கள் திருடிய தொலைக் காட்சிப் பெட்டி மற்றும் பகுதியளவில் அகற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் இரண்டு என்பவற்றையும் ஹற்றன் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ச)

### மயானத்தில் வெடிப்பு:

## பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட 6 பேர் காயம்

கண்டி,செப்.4

கண்டி, வத்தேகம் பகுதியிலுள்ள மயானமொன்றில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் வத்தேகம நகரசபைத் தலைவர் உள்ளிட்ட ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

சடலமொன்றை எரிப்பதற்கு முற்பட்ட வேளையில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். எரிகாயங்களுடன் வத்தேகம நகர சபைத் தலைவர் உள்ளிட்ட மூவர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய மூவர் வத்தேகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மயானத்திலுள்ள எரிவாயு குழாயொன்றில் ஏற்பட்ட கசிவு காரணமாக இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## கிழக்குப் பாதுகாப்புக்கு விசேட அதிரடிப்படை

மட்டக்களப்பு,செப்.3

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் விசேட அதிரப் படையினர் நிலைநிறுத்தப்பட உள்ளனர். கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களை முன்னிட்டு இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும், கூட்டமைப்பில் அங்கம் வகித்துக் கொண்டே தனித்துப் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் இடையில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக எம்.எல்.ஏ. எம்.அதாவுல்லா ஆதரவாளர்களுக்கும், ரவூப் ஹக்கீம் ஆதரவாளர்களுக்கும் இடையில் அடிக்கடி மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரப் பெருமான் ஆலய தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது, சுவாமி பக்தர்கள் புடைசூழ தேரில் ஆரோகணித்து வருகிறார்.

## ஜே.வி.பி. அலுவலகத்துக்குத் தீ வைப்பு

அம்பாறை,செப்.4

அம்பாறை, பதியத்தாளை பிரதேசத்தில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் அலுவலகங்கள் மூன்றுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய குழு ஒன்றால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த அலுவலகங்களுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது என்று பதியத்தாளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந்தக்கட்சி பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ச)

# விடுதலைத் தீ அணையாதென தேர்தலில் நிரூபிப்பர் தமிழர்கள்

## அடித்துக் கூறுகிறார் கூட்டமைப்பு வேட்பாளர்

திருகோணமலை,செப்.4

தமிழர்கள் தங்கள் சுயமரியாதை, கௌரவம் என்பவற்றை இழந்து அடிமைகளாக வாழத்தயாராக இல்லை என்பதை கிழக்குத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்து மீண்டும் ஒரு முறை சர்வதேசத்துக்கும், அரசுக்கும் தமிழ் மக்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும். வரலாறு காணாத பேரழிவுகள், பேரழிவுகளைச் சந்தித்த போதும் எங்களின் விடுதலைத் தீ அணையாது; சுதந்திர தாகம் தீராது என்று இந்தத் தேர்தல் மூலம் உலகுக்கு உரத்துச் சொல்ல வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் திருமலை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் கந்தவனம் கோணேஸ்வரம் தெரிவித்தார்.

மேலும், அரசின் அக்கிரமங்கள், அராஜகங்களுக்கு எதிராக தமிழ் மக்கள் குமுறியெழுந்து வீராவேசத்துடன் தேர்தல் களம் நோக்கி படையெடுக்க வேண்டும் என்றும் அவர் அறைகூவல் விடுத்துள்ளார்.

கிழக்குத் தேர்தல் தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு முழங்கியுள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர்கள் தம்பக்கமே இருக்கிறார்கள் என்று சர்வதேசத்துக்குக் காட்ட வேண்டும் என்ற நோக்கத்திலே மஹிந்த அரசு ஆணவத்தோடும், இறுமாப்போடும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு தீர்மானித்தது. ஆனால், அரசின் இந்தக் கனவு இன்று தலைகீழாக மாறியுள்ளது.

கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவில்லை என்ற காரணத்தினால், தமிழ்ப் பிரதேசங்களில் இலகுவாகத் தேர்தல் மோசடிகளைச் செய்ய முடிந்தது. ஆனால், இந்தமுறை அவ்வாறான தில்லுமுல்லுகளுக்கு இடமில்லை; இடமளிக்கவும் மாட்டோம்.

எனவே, இந்தத் தேர்தல் தமிழ் மக்களுக்கு ஒரு திருப்புமுனையாக அமையும் என்பது மட்டு உறுதி. இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான வெற்றி வாய்ப்பு மிகவும் பிரகாசமாக இருக்கிறது. மக்கள் அலை தமிழ்க் கூட்டமைப்பின் பக்கமே வீசுகிறது. அதனால் ஆளும் தரப்பும், அதனுடன் இணைந்து போட்டியிடும் தமிழ்க் கட்சிகளும் மிரண்டு போயுள்ளன.


கூட்டமைப்பு வேட்பாளர்கள் மீதும் ஆதரவாளர்கள் மீதும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. ஆனால், அச்சுறுத்தல்களுக்கும் மிரட்டல்களுக்கும் நாம் ஒருபோதும் அடிபணித்து போகமாட்டோம்.

தமிழர்கள் ஒருபோதும் அந்திக்கு அடங்க மாட்டார்கள். அவர்களின் சுதந்திர தாகத்தை அழிக்க முடியாது என்பதை நிச்சயம் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் நிரூபித்துக் காட்டுவார்கள்.

நாங்கள் தன்மானத் தமிழர்கள். சுகபோகங்களுக்காகவும் அமைச்சுப் பதவிகளுக்காகவும் சோரம்போகும் அரசியல் நடத்தமாட்டோம்.

எமது உறவுகளின் கனவுகள் - அவர்களின் தியாகங்கள் வீண்போகாதிருக்க அவர்கள் தியாக வழியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்.

வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத்தில் எமது அடுத்த சந்ததியேனும் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்ற லட்சியத்துடன் நாம் செயற்படுவோம்.



இவை நிறைவேற வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்கள் வெற்றிபெறச் செய்ய வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அனைவரிடமும் மனம் விட்டுப் பேசுவீர்கள். சில வேலைகளை நேரத்துக்குச் செய்து முடியாமல், காலதாமதமாகச் செய்வீர்கள். தந்தை வழியில், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் திடீர் பயணங்கள் செல்லும் வாய்ப்பு உருவாகும். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். ஒரு வேலையை முடிக்க, ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலைய நேரிடலாம். உடல் உபாதைகளால் நாள் முழுவதும் ஓய்வு எடுக்க நேரிடலாம். உங்களின் குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும்.

**மிதுனம்:** வழக்கத்துக்கு மாறாக நீண்ட நேரம் ஓய்வு எடுத்துக் கொள்வீர்கள். திட்டமிட்ட சில வேலைகளை நாளை செய்யலாம் என பிற்போட்டு வைப்பீர்கள். சிலருக்கு வாக்குக் கொடுத்து விட்டு, அதைக் காப்பாற்ற முடியாமல் தடுமாறலாம்.

**கடகம்:** நண்பர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்ல நேரிடலாம். வெளியுலகத் தொடர்புகள் விரிவடையும். உறவினர் ஒருவரைச் சந்தித்து பழங்கதைகள்பேசி மகிழ்வீர்கள். ஓய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம்.

**சிங்கம்:** புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். முடியுமோ முடியாதோ என்று நினைத்த வேலை ஒன்று சுமுகமாக முடிவடைவதால், மகிழ்ச்சி அடைவீர்கள். சிலர் கேட்ட உதவிகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். உடன்பிறப்புகள் விவகாரங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது.

**கன்னி:** வீண் செலவுகள் ஏற்படும். அரசியல் தொடர்புடையவர்கள் வீண் அலைச்சல்களுக்கு ஆட்படலாம். வியாபாரிகளுக்கு போட்டிகள் குறைந்து கணிசமான வருமானம் கூடும். குழந்தைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்களால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம்.

**நாளை**

ஆவணி - 20 புதன்கிழமை 05.09.2012
திதி:பஞ்சமி பி.இ. 12.41 வரை
நட்சத்திரம்: அச்சுவினி மரண பி.ப 01.11 வரை
சுபநேரம்: 04.34- 06.04 வரை
ராகு காலம்: 12.04- 01.34 வரை

**துலாம்:** சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரியளவில் கவலைப்படுவீர்கள். உறவினர்கள் சிலர், தாங்கள் செய்ய வேண்டிய வேலைகளை உங்களிடம் ஒப்படைக்கலாம். எதிலும் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாகச் செயற்பட வேண்டும். சிலரிடம் ஆரம்பத்தில் வாக்குக் கொடுத்துவிட்டு பின்னர் அதிலிருந்து பின்வாங்கலாம்.

**விருச்சிகம்:** அடுத்தடுத்து பணிகள் இருந்த போதும் உற்சாகமாகச் செய்து முடிப்பீர்கள். வெளியூர்களில் இருக்கும் சிலரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு முக்கிய விடயங்களைப் பேசுவீர்கள். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**தனுசு:** செய்ய வேண்டாம் என்று பிற்போட்டு வைத்த சில வேலைகளை மீண்டும் செய்வீர்கள். அயலில் வீண்பேச்சுகள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். உறவினர்கள் உங்களிடம் அன்பாக நடந்து கொள்வர். நீங்கள் எதிர்பாராத சில தரப்பிலிருந்து உங்களுக்கு உதவி கிடைக்க வாய்ப்புண்டு.

**மகரம்:** குடும்ப உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நீண்ட நாள்களாகச் சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். அடுத்த சில தினங்களுக்குப் பின்வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே வந்து சேரும். நண்பர்கள் சிலருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படும், கவனம் தேவை.

**கும்பம்:** சில விடயங்களில், முன்னெச்சரிக்கையுடன் செயற்படாததன் மூலம் இழப்புகளைச் சந்திக்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரை, தொலைபேசியில் தொடர்புகொண்டு பேச முற்பட்டு அவர்கள் இல்லாமல் போகலாம். மற்றவர்களை நம்பி எதையும் செய்ய வேண்டாம்.

**மீனம்:** மற்றவர்கள் மதிக்கும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்ய நினைப்பீர்கள். உங்களின் கடந்த கால செயற்பாடு ஒன்றை, மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். உங்களுக்கு வேண்டிய காரியம் ஒன்றைச் சாதிக்க மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 8 | | 3 | | | | 7 |
| 3 | | | 9 | 5 | 6 | 4 | 2 | 8 |
| | 9 | | | | | | 3 | |
| | 4 | | | | 1 | 8 | 5 | |
| 7 | | | | | | | | 2 |
| | 6 | 5 | 3 | | | | 9 | |
| | 8 | | | | | | 6 | |
| 5 | 7 | 4 | 2 | 6 | 3 | | | 9 |
| 1 | | | | 9 | | 3 | | 4 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 6 | 3 | 5 | 7 | 8 | 9 | 2 |
| 9 | 7 | 5 | 4 | 2 | 8 | 1 | 3 | 6 |
| 2 | 3 | 8 | 6 | 1 | 9 | 5 | 7 | 4 |
| 7 | 9 | 3 | 1 | 4 | 5 | 2 | 6 | 8 |
| 8 | 6 | 1 | 9 | 7 | 2 | 3 | 4 | 5 |
| 5 | 4 | 2 | 8 | 3 | 6 | 7 | 1 | 9 |
| 3 | 8 | 7 | 5 | 6 | 4 | 9 | 2 | 1 |
| 1 | 5 | 4 | 2 | 9 | 3 | 6 | 8 | 7 |
| 6 | 2 | 9 | 7 | 8 | 1 | 4 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி என்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 61 ஆவது வருடாந்த மாநாடு கேகாலை நகர பொது விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சிரேஷ்ட அமைச்சர்களான ஏ.எச்.எம்.பௌசி, அதாவுட செனவிரட்ன, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## பரீட்சைத் திணைக்கள கட்டமைப்பில் மாற்றம்

இலங்கையின் பரீட்சைத் திணைக்களக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக பரீட்சைகளில் ஏற்பட்ட குளறுபடிகள் உள்ளிட்ட பிரச்சினை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பரீட்சை திணைக்களத்தின் நம்பிக்கை தொடர்பில் எவ்வித சிக்கல்களும் ஏற்படுவதற்கு இடமளிக்கக் கூடாது என்று கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரட்ன தெரிவித்தார்.

பரீட்சைத் திணைக்களத்தின் நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்யவும் நடவடிக்கைகளை மீளாய்வு செய்யவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, தேசியப் பாடசாலைகளில் 20 ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## மசகு எண்ணெய் இறக்கும் பணி மூன்று நாள்களுக்குத் தாமதம்

கொழும்பு,செப்.4

கொழும்பு துறைமுகத்திலுள்ள எண்ணெய் இறக்கும் குழாயின் அவசர திருத்தப் பணிகள் காரணமாக மசகு எண்ணெய் இறக்குவது மூன்று நாள்களுக்குத் தாமதமடைந்துள்ளது என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன் திருத்தப் பணிகள் நிறைவடையும் வரை சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிப்பு பணிகள் இடைநிறுத்தப்படும் என்று அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை ஒரு லட்சத்து 35 ஆயிரம் தொன் மசகு எண்ணெயுடன் கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள தாகவும் அவசர திருத்தப் பணிகள் நிறைவடைந்தும் மசகு எண்ணெயை இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பாடசாலை மாணவரை அரசியலுக்கு இழுக்காதீர்

## ஜனாதிபதி வேண்டுகோள்

கொழும்பு,செப்.4

பாடசாலை மாணவர்களைஅரசியலுக்குள் இழுக்க வேண்டாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 61வது வருடாந்த மாநாடு கேகாலை நகர பொது விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் சகல துறைகளிலும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வீதிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அதிவேக நெடுஞ்சாலைகள் அமைக்கப்படுகின்றன. குளங்களையும் கால்வாய்களையும் அபிவிருத்தி செய்துள்ளோம். இவ்வாறு சகல துறைகளிலும் நாடு துரித கதியில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் சிறு சிறு குறைபாடுகள் உள்ளன. அவற்றை துரிதமாக நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நாம் வாக்குகளை இலக்கு வைத்து அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பவர்கள் அல்ல. நுரைச்சோலை அனல் மின்நிலைய வேலைத் திட்டம், மேல்கொத்மலை நீர்மின்திட்டம் என்பன பல எதிர்ப்புக்கள் காரணமாக பல காலங்களாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த போதிலும் நாம் அந்த வேலைத்திட்டங்களை நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு ஆரம்பித்தோம். எமக்கு வாக்குகளை விடவும் மக்களினதும், நாட்டினதும் சுபீட்சமே முக்கியம்.

நாம் செல்லுமிடமெல்லாம் யார் முதலமைச்சர் என்று வினவுகின்றார்கள். நாம் நாட்டுக்கு வேலை செய்யக் கூடியவர்களையே முதலமைச்சர் பதவியில் அமர்த்துவோம்.

புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் வெளியானது என்று தெரிவிக்கப்படுகின்ற புகார் குறித்து விசாரணை நடத்தி ஒருவாரத்துக்குள் அறிக்கை தருமாறு நான் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன். எந்தக் குழந்தைக்கும் அநீதி இழைக்க இடமளிக்கமாட்டேன்.

இருந்தும் இன்று பாடசாலை மாணவர்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளுகின்றன.

சிறு சிறு தவறுகளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பெரிதுபடுத்தாதீர்கள். எமது பிள்ளைகளை வீதிகளில் இறக்க முயற்சி செய்யாதீர்கள். இவ்வாறு செய்வது எமது எதிர்கால சந்ததியினரை பாதிப்புக்கு உள்ளாக்கும்- என்றார். (ச)

## தயாசிறி ஜயசேகரவின் தேர்தல் பிரசாரத்துக்குத் தடை

கொழும்பு,செப்.4



ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்று கட்சியின் தலைமை உத்தரவிட்டுள்ளது.

தயாசிறி ஜயசேகர ஏற்கனவே தேர்தல் பிரசாரங்களில் கலந்து கொண்டிருந்த நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒழுக்காற்று விசாரணைகளை எதிர்நோக்கி இருக்கும் கட்சியின் உறுப்பினர்கள் எவரையும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளச் செய்வதில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது. இதனடிப்படையிலேயே தயாசிறி ஜயசேகரவுக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தயாசிறி ஜயசேகர திருகோணமலையில் நடைபெற்ற சில கூட்டங்களில் கலந்து கொண்டிருந்த நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தயாசிறி கட்சி மற்றும் கட்சியின் தலைமையை விமர்சிப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டை அடுத்தே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ச)

## நுரைச்சோலை மின் நிலைய திருத்தப் பணிகள் பூர்த்தி

கொழும்பு,செப்.4

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையதிருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

திருத்தப் பணி அறிக்கை திருப்திகரமானதாக இருப்பதாகவும் மீண்டும் மின் நிலையப் பணிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் மின்சார சபையின் பிரதித் தலைவர் அனுர விஜயபால கூறினார். நுரைச்சோலை அனல் மின் நிலைய திருத்தப் பணிகள் சீனாவில் இருந்து வந்த தொழிநுட்பவியலாளர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டன.

அதிகரித்த பாவனையின் காரணமாகவே நுரைச்சோலை மின் நிலையம் பழுதடைந்ததாக அக்குழுவினர் தெரிவித்தனர். (ச)

## கனிய வளத்தைக் கண்டறிய வான் வழியாக ஆய்வு

கொழும்பு,செப்.4

இலங்கையின் கனியவளங்கள் பற்றி வான்வழி ஆய்வை மேற்கொள்ளவுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் தலைவர் எம்.ஜே.விஜயானந்த தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கான செலவு 17 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். இது ஒன்றரை வருடங்களில் பூர்த்தியாகும் என்று அவர் கூறினார்.

மண்ணில் ஆசனிக் நஞ்சு இருப்பதாகக் கூறப்படும் அநுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் முதலில் இந்த ஆய்வு நடைபெறும் என்று அவர் கூறினார். (ச)

## சிறுநீரக நோயால் மக்கள் பாதிப்பு

### ஜயலத் ஜெயவர்தன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,செப்.4

இலங்கையில் வட மத்திய மாகாணத்தில் 15 - 70 வயதுக்குட்பட்டவர்களில் 15 சத வீதமானோர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என ஐ.தே.க.வின் பிரதிப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜய லத் ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட் டிருப்பதாவது:-

நோயைக் குணப்படுத்த சரியான மருந்துகள் கண்டுபிடிக்கப்படாமையினால் தினமும் உயிரிழப்புகள் இடம் பெறுகின்றன.

> குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்டோரும், 10 வயதுக்கும் மேற்பட்டோரே தாக்கத்துக்கு உள்ளானோர்.

குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்டோரும், 10 வயதுக்கும் மேற்பட்டோருமே இந்த நோயின் தாக்கத்துக்கு அதிகளவில் உள்ளாகியுள்ளமை தெரியவருகின்றது.

நோய் தொற்றின் வேகத்தையும், நிலையையும் அறிந்து கொண்ட களனி, ரஜரட்ட, பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர்கள், முன்னணி மருத்துவ குழுக்களினால் இந்த நோயின் தாக்கம், தடுப்பதற்கான வழி முறைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

சிறுநீரக நோய் குறித்து சர்வதேச அமைப்புகளும் கவனம் செலுத்தி வருகின்றன. எனவே, ஆள்கொல்லி நோயாக தோன்றியுள்ள இந்த பிரச்சினை குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு

கொழும்பு,செப்.4

அஹுங்கல்ல, கட்டுவில பிரதேசத்தில் 24 வயதுடைய இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டின் போது இவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இவர் மீது வேறொரு மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## 16 இல் மிருக பலி

### முன்னேஸ்வரம் ஆலய பிரதம குரு தெரிவிப்பு

கொழும்பு,செப்.4

எதிர்வரும் 16 ஆம் திகதி திட்டமிட்டவாறு மிருக பலி பூசைகள் நடைபெறும் என்று முன்னேஸ்வரம் பத்ரகாளியம்மன் ஆலயத்தின் பிரதம குரு காளிமுத்து சிவபாதசுந்தர குருக்கள் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தந்ததாது காட்சிப்படுத்தும் காரணத்தினால், கடந்த முதலாம் திகதி நடைபெறவிருந்த மிருக பலிப் பூசை ஒத்தி வைக்கப்பட்டதாக அவர் கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு மிருக பலிப் பூசை ஒத்தி வைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மிருக பலிப் பூசைகளை நடத்த அனுமதிக்கப் போவதில்லை என சூளுரைத்துள்ள அமைச்சர் மேர்வின் சில்வா மீண்டும் மிருக பலிப் பூசைக்கு எதிராக கருத்துக்களை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தந்ததாது காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் 12 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

கோழிப்பண்ணையில் வேலை செய்வதற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

கூடு பராமரிப்பாளர் (ஆண்) - 01
சிட்டை எழுதுனர் (பில் போடுபவர்) - பெண் - 01
இரவு காவலாளி ஆண் - 01

ஆர்வமுள்ளோர் நேரில் வரவும்

**வீனஸ்பாம்**, கலாசாலை வீதி, (முத்து தம்பி மகாவித்தியாலய வடக்கு ஒழுங்கை), திருநெல்வேலி.

(22491) (2-6)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறொ யிலர் கோழி (இறைச்சிக் கோழி) மீள் கொள்வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(22489) (5.6.7)

THE HALO TRUST

## கண்ணிவெடி அகற்றுனருக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 10 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கிறது.

ஹெலோ ரஸ்ட் இன் எதிர்கால வேலைக்கான மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது கண்ணி வெடிய கற்றல் துப்புரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்கும் கடினமான வேலையாகும். எமது தரமான நடவடிக்கைகள் கண்ணி வெடி அகற்ற லிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக் கொள்வதுடன் முற்றாக நீக்கமுடியாது. எனவே கருத்தில் கொள்ளப்படும் விண்ணப்ப தாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப் படுகின்றது.

**ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள் மற்றும் அனுபவமுள்ளவர்கள் விபரங்களை கீழ் கண்ட முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.**

ஹெலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.

குறிப்பு : எதிர்வரும் 05 ஆம் திகதி புரட்டாதி மாதம் 2012 அன்று புதன்கிழமை தங்களுக்கான நேர்முகத்தேர்வு நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

(19316)(6-8)


## மரண அறிவித்தல்

### சண்முகராஜசர்மா பாலச்சந்திரசர்மா

(கணக்குப் பதிவாளர் - இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் புல்மோட்டை)



உடுவிலைப் பிறப்பிடமாகவும், சிவலிங்கப்புளியடி, கோப்பாய் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராஜ சர்மா - பாலச்சந்திரசர்மா அவர்கள் (02.09.2012) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ் சென்ற சண்முகராஜசர்மா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ் சென்ற பூர்ணானந்தக்குருக்கள் மற்றும் கெங்கா சறோஜினி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜனகலதாவின் பாசமிகு கணவரும், சித்திராதேவி, கங்கா ஆகியோரின் அன்புச்சகோதரனும், சந்திரானந்தக்குருக்கள், கீதச்சந்திரக்குருக்கள், சுதாகரக்குருக்கள், சுவர்ணலதா, ஹேமலதா, குமாரராஜசர்மா, சரஸ்வதிதேவி, பாலராணி, சுகந்தினி, சுப்பிரமணியசர்மா, பாலசுப்பிரமணிய சர்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2012) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசுவாமி கோயில்,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(22483)(6.8)

## வீதி அகலிப்புப்பணிகளை துரிதப்படுத்தக் கோரிக்கை

வடமராட்சி, செப்.4

நெல்லியடி நகர்பகுதியில் மந்தகதியில் நடைபெற்றுவரும் வீதி அகலிப்பு வேலைகளைத் துரிதமாகச்செய்து முடிக்க சம்பந்தப்பட்டோருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கரவெட்டிப் பிரதேசசபை ஆளும் தரப்பு உறுப்பினர் பொ.குகதாஸ் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

போக்குவரத்து நெருக்கடி மிகுந்த நெல்லியடி நகர்ப்பகுதியில் வீதி அகலிப்பு வேலைகள் மிக மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றன. இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்லிபுரக் கோயில் திருவிழாவும், 24 ஆம் திகதி நாகர் கோயில் பூர்வீக நாகதம்பிரான் சுவாமி கோயில் திருவிழாவும் ஆரம்பமாகவுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர், வலிகாமம் பிரதேசங்களில் இருந்து இந்தக் கோயில்களுக்கு வரும் அடியார்கள் நெல்லியடி நகர் ஊடாகவே பயணிக்கவேண்டிய நிலை இருக்கிறது.

எனவே இவற்றைக் கவனத்தில் கொண்டு நெல்லியடி நகர்ப்பகுதி வீதி அகலிப்பு வேலைகளைத் துரிதப்படுத்தி பொதுமக்களும், வாகனங்களும் சிரமமின்றிப் பயணிக்கக் கூடிய நிலையை விரைவாக ஏற்படுத்தி தருமாறு வேண்டு கிறேன் என அந்தக்கோரிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-

advt@uthayan.com
0215671111


## துயர் பகிர்கின்றோம்

எமது நிறுவனத்தில் பணிபுரியும் ஜீவன் அவர்களின் அருமைத் தந்தை

**அமரர் அருமைநாயகம்**

அவர்கள் 27.08.2012 இல் மறைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அமரரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரதும் உறவினர்களினதும் துயரில் பங்கு கொள்கின்றோம்.

**யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன சமூகம், மருதனார்மடம், சுன்னாகம்.**

(22490) (2-6)


**E L T C**

A/L பரீட்சையின் பின்னர்.......

**Spoken English** (05 மாதங்கள்)
**Dip in English** (**UK** Qualification)

சர்வதேச தரத்தில் ஆங்கிலம் கற்பித்திட UK Qualified ஆசிரியர்களைக்கொண்ட நிறுவனம் **ELTC**

**எமது ஆசிரியர்கள்:**
Miss.K.Viji TKT(UK)
Mr.K.Kethees TKT(UK) Dip in Eng (UK)

ஆரம்பம்: 05/09/2012

**கிளிநொச்சியில்:**
**ENGLISH MEDIUM PRE SCHOOL**

Operating Centre:
துர்க்கை அம்மன் கோவில் வீதி,
[illegible]
[illegible]
M.D 077 074 3131

Franchise Branch:
Mind Vision College
[illegible]
[illegible]
077 991 4401


## சேவை நலன் பாராட்டு



திரு.
**வே. துரைசிங்கம்**
(இலங்கை அதிபர் சேவை I)
(பயிற்சி விஞ்ஞானம்)

சேவை விவரங்கள்:
ஆசிரியராக : 21.06.1979 - 10.11.1996
அதிபராக : 11.11.1996 - 17.10.2001
(யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்)
18.10.2001 - இன்று வரை
(யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலை)

எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றி இன்று 04.09.2012 இல் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. வே. துரைசிங்கம் அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் தனது ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசார ஊழியர்கள், பொலிகண்டி இ.த.க. பாடசாலை.

(18737)(6..8)

## 100ஆவது பிறந்தநாள் நினைவு தினத்தை நினைவு கூருகிறோம்



வணக்கத்துக்குரிய நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தான குருமணி

'பிரதிஷ்டா பூஷணம்'

**சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக் குருக்களின்**

100ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

இந்நாளில் குருவின் ஆசியை வேண்டி நிற்கும்.

மக்கள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்

கல்வியங்காடு
021 223 0361

(22340)(5-6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
23.06.1917

மறைவு
16.09.2011

**அமரர் சிதம்பரப்பிள்ளை அன்னம்மா**

திதி:- (04.09.2012) சங்கட சதுர்த்தி

அன்பின் திருவுருவாய் அமைதியின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்
ஊர் புகழும் உத்தமியாய் பாசமும் பரிவுமுள்ள
வார்த்தைகளைப் பேசி எங்களை வாழ்வாங்கு வாழ வைத்து
இறைவனடி சென்று ஓராண்டு ஆனதுவோ அன்புத் தெய்வமே
உங்கள் பசுமை நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களை விட்டு அகலாது அம்மா

காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

**குடும்பத்தினர்.**

(22478)(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.**

# ஆஸியில் புகலிடம் கோரும் இலங்கையர்கள் அகதிகள் அல்லர்; பொருளாதார குடியேறிகள்

## எதிர்கட்சித் தலைவர் ஜூலி பிஷப்

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் இலங்கையர்கள், அகதிகள் அல்லர் அவர்கள் பொருளாதார குடியேற்றவாசிகள் எனப் பிரதி எதிர்க்கட்சித் தலைவர் ஜூலி பிஷப் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்துவிட்டது. எனவே இலங்கையர்கள் அகதிகள் அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆஸ்திரேலிய எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.



படகு மூலம் சட்ட விரோதமான முறையில் ஆஸ்திரேலியாவை வந்தடையும் இலங்கையர்களை மீளவும் சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்க மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை உடனடியாக நாடு கடத்தும் திட்டத்தை அமுல்படுத்த முடியாது என ஆஸ்திரேலிய குடி வரவு அமைச்சர் கிறிஸ் போவுன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினர் கோருவதனைப் போன்று புகலிடக் கோரிக்கையாளர்களை உடனடியாக நாடு கடத்தும் திட்டமானது சர்வதேச சட்ட விதிகளுக்கு முரணானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## சமய சந்நிதிகளில்

தெல்லிப்பழை- பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெரும் திருவிழா, இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தில் 11 ஆம் திகதி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 13 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பரத் திருவிழாவும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், 15 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (3)

* * *

மல்லாகம் பழம்பதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து இருபத்தொரு நாள்கள் நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தில் தினமும் காலை 9மணிக்கு காலைப் பூசையும், பிற்பகல் 5மணிக்கு மாலைப்பூசையும் இடம்பெறும். (3-86ண)

# மெய்வன்மைப்போட்டியில் போக்குவரத்துச் சபைக்கு முதலிடம்

மக்கள் மயப்படுத்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கிடையிலான 42 ஆவது மெய்வன்மைப்போட்டி கொழும்பு சுகததாஸா விளையாட்டரங்கில் இடம்பெற்றது. அகில இலங்கை ரீதியாக இடம்பெற்ற இந்தப் போட்டியில் இலங்கை போக்குவரத்துச் சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, குடிதண்ணீர் விநியோக சபை, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்பட 30 இற்கும் மேற்பட்ட அரச நிறுவனங்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றின. இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தாணந்த அளுத்கமகே கலந்து சிறப்பித்தார்.

ஒவ்வொரு அரச நிறுவனங்களிலிருந்தும் தேசிய ரீதியில் முதல் இரு இடங்களையும் பெற்ற வீர, வீராங்கனைகள் இந்த மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொண்டனர். விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்தப்போட்டியில் 287 புள்ளிகளைப் பெற்று இலங்கை போக்குவரத்துச் சபை முதலாம் இடத்தினையும் 142 புள்ளிகளைப் பெற்று மக்கள் வங்கி இரண்டாம் இடத்தினையும், 128 புள்ளிகளைப்பெற்று இலங்கை மின்சார சபை 3 ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டது. (3-325)

# செப். 11: யாழ்ப்பாணத்தில் 'பாரதி விழா'

யாழ்ப்பாணம், செப்.4

முதன்முறையாக 'பாரதிவிழா'வை நடத்த தீர்மானித்துள்ளதாக யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற பாரதிவிழா தொடர்பான செய்தியாளரின் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத்தினூடாக நடைபெறவுள்ள பாரதிவிழாவானது எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்த விழாவில் காலை நிகழ்வு திருமறைக்கலாமன்றத் தலைவர் மரியசேவியர் அடிகளார் தலைமையில் காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பாரதியின் கவிதை, சமூகம் பற்றியதான 'எங்கள் பார்வையில் பாரதி' எனும் தலைப்பில் உரையும், பாடசாலை மாணவர்களுக்கு பாரதி பற்றிய அடிப்படை விடயங்கள் தொடர்பான 'மகாபாரதி' எனும் தலைப்பிலான இறுவெட்டும் வெளியிடப்படவுள்ளது.

'பாரதியின் பன்முக ஆளுமையும் துணைத் திறனும்' எனும் தலைப்பில் தென்கிழக்கு பல்கலைக்கழக மொழி பண்பாட்டுத்துறைத் தலைவர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாவின் சிறப்புரையும் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இரண்டாம் அமர்வு பிற்பகல் 3.30மணிக்கு பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் சோ. பத்மநாதன் தலைமையில் 'கனவுமெய்பட வேண்டும்' எனும் தலைப்பில் கவியரங்கும், 'பாரதி கண்ட தெய்வீகம்' எனும் தலைப்பில் ஆறு.திருமுருகனின் சிறப்புரையும், 'பாரதியின் புலமைத்துவம்' எனும் தலைப்பில் நூல் வெளியீடும் நடைபெறவுள்ளன.

20 ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ச் சங்கம் பிற்காலத்தில் வலுவிழந்து போய்விட்டது. கொழும்பு, மன்னார், திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் தமிழ்ச் சங்கம் இயங்கி வந்த போதிலும் யாழ்ப்பாணத்தில் போர் உட்பட்ட பல காரணங்களினால் தமிழ்ச் சங்கம் செயலிழந்து போயிருந்தது.

தற்போது மீண்டும் இந்தச் தமிழ்ச் சங்கத்துக்கு புத்துயிர் கொடுத்து தற்காலிகமாக ஒருநிர்வாக சபையினை உருவாக்கி விழாவினை நடத்துகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (3-13-7)


## ஆறாம் ஆண்டு நினைவில்



அமரர்
**தம்பிராசா அந்தோனிப்பிள்ளை**
(செபரத்தினம்)

மண்ணில் 27.05.1931
விண்ணில் 04.09.2006

குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்திட்ட எம் தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்களுக்கு ஈடாகுமா
வாழ்க்கை என்னும் பாதையிலே
நீங்கள் காட்டிய பாச மெல்லாம்
எம்மை விட்டுப் பிரிந்து ஆறாண்டானதோ!
உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்.

உயரப்புலம், ஆனைக்கோட்டை.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
08.09.1954

மறைவு
01.09.2007

அமரர்
**சின்னத்துரை சிவபாதம்(A.I.B)**

முன்னாள் வாடிக்கையாளர் சேவை முகாமையாளர்,
இலங்கை வங்கி 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்.

திதி : சங்கடஹரசதுர்த்தி

நாலாயிரம் உறவுகளில் நல் உறவு நீங்கள்
நன்கு கற்றறிந்த சபைதனிலே நற்பண்பாளன் நீவிர்!
உங்கள் உன்னத உயிர் மூச்சு உறைந்து ஐந்தாண்டானதுவோ?
ஐந்து என்ன? ஆயிரம் ஆண்டானாலும்!
சிவன் சிந்தையினை சிவபாதம் ஐயாவின் ஆத்மா சார்ந்து
சரணடைய வேண்டுகின்றோம்! அவன் கழலை!

சிவபாதம் தேவகி
26(1/0) வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(22313)(5-6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
1946.04.15

மறைவு
2012.08.05

அமரர்
**நடராசா சரவணபவான்**
(காப்பாளர், தேசிய வீடமைப்பு திணைக்களம், கிளிநொச்சி)

கடந்த 05.08.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் நடராசா சரவணபவான் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிக்ழ்வு இன்று (04.09.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.
(22314)(5-6)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியில் 18+ கணக்கினை நடைமுறைப்படுத்திய வாடிக்கையாளர் திருமதி தக்ஷாயினி தனுஷனுக்கு கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற திருமண வைபவத்தில் வங்கி முகாமையாளர் சந்திரகுமார் மற்றும் ஊழியர்களால் வங்கி சார்பில் தங்க நாணயம் பரிசாக வழங்கப்பட்டது. (த)

# 'ஸ்கைப்' பாவனையாளர்களுக்குச் சலுகை

எயார்டெல் கையடக்கத் தொலை பேசிச் சேவையைப் பயன்படுத்தும் எவரும் உலகின் எவ்விடத்திலுமுள்ள 'ஸ்கைப்' பாவனையாளர்கள் எவருக்கும் அழைப்புகளை மேற்கொள்வதற்கு அவர்களது கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்த முடியும் என எயார்ரெல் அறிவித்துள்ளது.

எந்தவொரு கையடக்கத் தொலைபேசியிலும் கிடைக்கப்பெறும் இவ்வசதியைப் பெறுவதற்கு வாடிக்கையாளர்கள் தொடர்புபடுத்தப்பட வேண்டியவரின் 'ஸ்கைப் ஐடி' (ID) உடன் 689 எனும் இலக்கத்திற்கு (SMS) குறுஞ் செய்தி ஒன்றை மாத்திரம் அனுப்பி வைக்க வேண்டும்.

அதன் பின்னர் வாடிக்கையாளர்களுக்கு 10 இலக்கங்கள் கொண்ட 'ஸ்கைப்' அழைப்பு அடையாளக் (ID) குறியீடு ஒன்றைக் கொண்ட பதில் செய்தி ஒன்று திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

இக்குறியீட்டு இலக்கம் வழக்கமான தொடர்பு விபரங்களுடன் சேமித்து வைக்கப்படுவதுடன், அதன் பின்னர் அவர்கள் ஒன்லைனில் இருக்கும் போது அக்குறிப்பிட்ட நபருடன் தொடர்பு கொள்வதற்கும் பயன்படுத்தப்பட முடியும்.

இப்புதிய சேவை நிமிடமொன்றுக்கு ரூ. 1.50 + IDD வரி எனும் நிலையான கட்டண விகிதத்தில் இலங்கையிலுள்ள எயார்ரெல் வாடிக்கையாளர்கள், தமது கையடக்கத் தொலைபேசிகளில் இருந்து சர்வதேச அழைப்புகளை மேற்கொள்ளும் போது வசதி, சிக்கனம் என்பனவற்றுக்கான ஒரு நிறுத்தல் சேவைகளை வழங்கும் பகுதியாக விளங்குகின்றது. (த)

# கண்டி எசெல பெரஹெராவில் பனடோலின் முதலுதவி சேவை



கிளாசோ ஸ்மித்கிளைன் (GSK) நிறுவனத்தின் வலி நிவாரணியான பனடோல், தொடர்ச்சியாக இவ்வருடமும் கண்டி எசெல பெரஹேரவில் நடமாடும் முதலுதவிச் சேவைகளை வழங்கியது. இச் சேவைகள் பனடோல் மூலம் 10 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டது.

இத்திருவிழாவினைக் காணவந்த பக்தர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் பனடோல் மூலம் இந்த முதலுதவிச் சேவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்குழுவின் மூலம் வெயிலில் நீண்ட நேரம் அமர்ந்திருந்த பக்தர்களுக்குத் தேவையான இலவச அடிப்படை முதலுதவிச் சேவைகள் வழங்கப்பட்டன.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பிரதான சமய, கலாசார நிகழ்வுகளில் பனடோலால் வழங்கப்பட்ட இலவச நடமாடும் முதலுதவிச் சேவைகளை ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் பெற்றுக் கொண்டனர்.

அந்த நிகழ்வுகளில் சிவனொளிபாதமலை யாத்திரை, மடுமாதா ஆலயத் திருவிழா, நல்லூர் தேர்த்திருவிழா, அனுராதபுரம் பொசன் போயா, தந்திரிமலை, மிகிந்தலை போன்றவை அடங்கும். (த)

# பாராட்டு மழையில் நனையும் மொபிரெல் My astro சேவை

மொபிரெல் நிறுவனம் கையடக்கத் தொலைபேசித் துறையில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் அறிமுகப்படுத்திய My astro சேவை அனைவரதும் பாராட்டைப் பெற்றுள்ளது.

வெவ்வேறு பெயர்களில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் ஜோதிட சேவைகள் அனைத்தையும் தாண்டிச் சென்று, புகழ்பெற்ற ஜோதிடர் சுமன தாச அபேகுணவர்தனவுடன் இணைந்து மொபிரெல் நிறுவனம் அறிமுகப்படுத்திய My astro சேவையில் இணைந்து கொள்ளும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதற்குப் பிரதான காரணம் My astro சேவை ஊடாக வழங்கப்படும் தகவல்களில் உள்ள நம்பிக்கையும் தரமுமாகும். மேலும், ஒவ்வொருவரின் பிறந்த நேரம், திகதி, பிறந்த இடம் என்பனவற்றைப் பொறுத்து தயார் செய்யப்பட்ட எதிர்வு கூறல்களை இதன்மூலம் பெற்றுக்கொள்ள முடிந்தமை இதற்கு மற்றுமொரு முக்கிய காரணமாகும்.

அண்மையில் நடைபெற்ற ஈ-சுவாபி மானி விருது வழங்கல் வைபவத்தில் My astro சேவையைப் பாராட்டி விருது வழங்கப்பட்டது. அதற்கான சான்றிதழை மொபிரெல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் டீ சில்வா ஜோதிடர் சுமனதாச அபே குணவர்தனவிடம் கையளித்தார்.

# மடு தேவாலயத்துக்கு வர்ணம் தீட்டியுள்ள லங்கெம் ரொபியலக்

றொபியலக் பெயின்ட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் லங்கெம் பெயின்ட்ஸ் லிமிற்ரெட், பல நூற்றாண்டு பழமையான மடு தேவாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கன்னி மரியாளின் திருவிழா மற்றும் கன்னி மரியாளின் பரமேறுதல் திருவிழாவையும் முன்னிட்டு ஆலயத்துக்கு வர்ணம் தீட்டியுள்ளனர்.



இத்திட்டமானது மன்னார் ஆயர் அதி வண. ராயப்பு ஜோசப் ஆண்டகையின் வழி நடத்தலின் கீழ் பங்குத்தந்தை வண. எமிலியானுஸ் பிள்ளையின் கண்காணிப்பில் நடத்தப்பட்டது. லங்கெம் சிலோன் லிமிற்ரெட்டின் பணிப்பாளர் ருவன் ரீ. வீரசிங்க தெரிவிக்கையில், வருடாந்த திருவிழாவுக்காக மடு தேவாலயத்துக்கு வர்ணம் பூசுவது மிகப்பெரிய கௌரவமாக உள்ளது. இது போன்ற செயல் மூலம் இலங்கையின் உயர் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்துக்குப் பங்களிப்பு செய்யும் எமது அர்ப்பணிப்பின் ஒரு அங்கமாக இது உள்ளது. அண்மையில் கண்டி எசல பெரஹரவுக்காக தலதா மாளிகைக்கு நாம் வண்ணம் பூசினோம். லங்கெம் றொபியலக் இலங்கை நிறுவனம் என்ற வகையில் இலங்கை மக்களுக்கு நாம் கடமைப்பட்டவர்களாக உள்ளோம் எனத் தெரிவித்தார்.

பங்குத் தந்தை வண. எமிலியானுஸ்பிள்ளை வருடாந்த திருவிழாவுக்காக ஆலயத்துக்கு வர்ணம் தீட்டிய லங்கெம் றொபியலக்குக்கு நன்றி தெரிவித்தார். இலங்கையின் மன்னார் மாவட்டத்திலுள்ள ரோமன் கத்தோலிக்க ஆலயமான இந்த மடு மாதா ஆலயத் திருவிழாவுக்கு பக்தர்களை அன்புடன் நாம் வரவேற்கிறோம். 400 ஆண்டுகளுக்கு அதிகமான வரலாற்றைக் கொண்டுள்ள இவ்வாலயம் அற்புத சுகம், வழிபாடு மற்றும் புனித யாத்திரைக்கான தலமாக உள்ளது எனத் தெரிவித்தார்.

றொபியலக் குறியீட்டு உற்பத்திகளைத் தயாரித்து சந்தைப்படுத்தும் லங்கெம் பெயின்ட்ஸ் லிமிற்ரெட், இலங்கையின் மிகப்பெரிய உள்ளூர் நிறப்பூச்சு உற்பத்தியாளராக உள்ளது. இத்துறையின் முன்னோடியாகவும் உள்ள இந்நிறுவனம், 28 ஆண்டுகளுக்கு அதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ளது.

# குறைந்த நிதி வசதிகளைப் பெறும் இலங்கையர் வீடமைப்புக் கடனைப் பெறுவதற்கு ADB உதவி

வீடுகளை கொள்வனவு செய்தல் மற்றும் புனர் நிர்மாணம் செய்யும் தேவைகளுக்காக கடன் வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) 15 மில்லியன் அமெரிக்க டொலரை DFCC வர்த்தன வங்கிக்கு வழங்கவுள்ளதால், சுனாமி மற்றும் போரினால் வீட்டுக் கடன்களை பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ள இலங்கையர்கள் மிகவிரைவில் இலகுவாக வீடமைப்புக் கடன் பெற்றுக்கொள்ள முடியும்.

''சீரான வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக போர் அல்லது இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு வீடமைப்பு கடனைப் பெறுவதற்கு நியாயமான மற்றும் பாதுகாப்பான ஒரு திட்டம் தேவைப்படுகின்றது என ADB இன் தனியார் துறை தொழிற்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பிலிப் எர்குவாய்கா கூறியுள்ளார். ''முனைப்புடன் ஈட்டுக்கடன் வசதியை இயக்கும் வணிக வங்கி இதில் பங்கெடுத்துள்ளதால் பயனாளிகளுக்கு நன்மை பெறவும் சந்தை இடைவெளியைத் தவிர்ப்பதற்கும் இது உதவுமென அவர் மேலும் கூறுகின்றார்.

இது ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையில் மேற்கொள்ளும் முதலாவது தனியார் துறை வீடமைப்புக்கடன் கருத்திட்டமாகும். இதன் மூலம் இலங்கையில் வீடுகளின் பற்றாக்குறையை தீர்க்க 350,000 முதல் ஒரு மில்லியன் வரையான வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. மேலதிகமாக வருடாந்தம் 100,000 வீடுகளின் தேவையும் காணப்படுகின்றது.

DVB சந்தையில் குறைந்த வசதிகளைப் பெறுபவர்களுக்கு சேவையாற்றக்கூடிய நுட்பங்களை கொண்டுள்ள நடுத்தர அளவு வணிக வங்கியாகும்.

இது சிறியளவு வங்கியாக இருப்பினும் இலங்கையிலுள்ள பெரிய வணிக கடன் கொள்வனவு வங்கிகளுடன் ஒப்பிடும் போது அவற்றை அண்மித்து அல்லது சமநிலையில் காணப்படுகிறது. 2011 டிசெம்பர் முடிவில் DVB ஆனது இலங்கையின் மொத்த வங்கிக் கடன்களில் 1.3 வீதமளவு சந்தைப் பங்குகளை கொண்டிருந்தது.

இவ்வங்கியானது தனது அதிகரிக்கப்பட்ட வலையமைப்பினூடாக மோதலுக்கு பின்னரான நிதி தொழிற்பாட்டை பரவலாக்கியுள்ளது. அத்துடன் தனது ஈட்டுக்கடன் தொழிற்பாட்டை வளர்க்கும் நோக்கில் ADB இன் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்று வருகின்றது. மேலும் இலங்கையில் சிவில் போரினால் தமது துணைகளை இழந்தவர்கள் உட்பட பெண்களுக்காக ADB இன் உதவியுடன் வழங்கப்படும் வீடமைப்புக் கடன்களில் 5 வீதத்தை இவ்வங்கி ஒதுக்கியுள்ளது.

நாட்டின் ஈட்டுக்கடன்- மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவீடானது 6 வீதம் என்ற குறைவான நிலையில் உள்ள அதேவேளை இது சர்வதேச மட்டத்தில் 30 வீதமாக காணப்படுகிறது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வீடுகளுக்கான கேள்வி கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால் வாடிக்கையாளரின் மேலோங்கிய மனநிலை, வருமான மட்டம் உயர்வடைதல், வெளிநாடு சென்றவர்களின் மீள்வருகை போன்ற அம்சங்கள் வளர்ச்சி கண்டுள்ளன. இதேவேளை DVB ஆனது 2004 சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதிக்கும் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் வடகிழக்கு பகுதிகளுக்கும் குறைந்த பட்சம் 30 வீதமான நிதியை ஒதுக்கியுள்ளது.

மணிலாவை மையமாகக் கொண்டு இயங்கும் ADB பொருளாதார வளர்ச்சி, சுற்றாடல் நிலைபேறு தன்மை மற்றும் பிராந்திய ஒற்றுமை என்பவற்றின் ஊடாக ஆசிய மற்றும் பசுபிக் வலயத்தில் வறுமையை ஒழிப்பதற்காக அர்ப்பணிப்புடன் இயங்குகின்றது. இது 1966 இல் ஸ்தாபிக்கப்பட்ட வங்கியாகும்.

இதில் 67 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இவற்றில் 48 பிராந்திய நாடுகளாகும். 2011 இல் கூட்டிணைந்த நிதி மொத்தமாக 21.7 பில்லியன் டொலர் தொகைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகம் செல்லவேண்டாம்

## இலங்கையர்களுக்கு வெளிவிவகார அமைச்சு அறிவுரை

கொழும்பு, செப். 4

இலங்கையைச் சேர்ந்தோர் மறு அறிவித்தல் வரும் வரை தமிழ் நாட்டுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று இலங்கை அரசு அறிவுறுத்தி உள்ளது.

இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு மக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. அதில்-

தமிழ் நாட்டில், இலங்கையர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். எனவே இலங்கை பிரஜைகள் தங்களது பாதுகாப்பை கருத்தில் கொண்டு, மறு அறிவித்தல் வரும் வரை தமிழ் நாடுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என்று கூறியிருக்கிறது.

இதேவேளை தமிழ் நாடு தவிர்ந்த இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்கு செல்வதில் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்றும் அமைச்சு கூறியுள்ளது.

அண்மை நாட்களாக தமிழ் நாட்டுக்கு செல்லும் இலங்கை சுற்றுலா பயணிகள், யாத்ரிகர்கள், விளையாட்டு மற்றும் கலாசாரத் துறை தொடர்பானவர்கள், தொழில் முறை பயிற்சியாளர்கள் போன்றோர் அங்கு பாதுகாப்பு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே, இந்த விடயத்தில் இலங்கை பயணிகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் இந்திய அரசை இலங்கை கோரியுள்ளது.

(10)

### வாளால் வெட்டியவர் கைது

யாழ். ஆறுகால் மடம் பகுதியில் மனைவியை தகாத வார்த்தையால் பேசிய நபரை வாளால் வெட்டிய கணவன் நேற்று யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாள்வெட்டுக்கு இலக்காகிய நபர் கை மற்றும் வயிற்று பகுதியில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் தாம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகவும் அவரை இன்று நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கொக்குவில் இந்து அதிபர் தென்மராட்சி வலயத்துக்கு

யாழ்ப்பாணம், செப்.4

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் க. அகிலதாஸ் நேற்றுத் தொடக்கம் தென்மராட்சி கல்வி வலயத்துக்கு இடமாற்றப்ப பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்வி பணிப்பாளர் செல்வராஜா தெரிவித்தார் .

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் க. அகிலதாஸ் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் இட மாற்றப்பட்டுள்ளார்.

அவருக்கான இடமாற்றம் தொடர்பில் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் , நேற்றே தென்மராட்சி கல்வி வலயத்தில் பொறுப்பேற்றதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த இடமாற்றம் அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையா? என்பது தொடர்பாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கேட்ட போது தனக்கு இது தொடர்பில் எதுவும் தெரியாது என்றும் கல்வி அமைச்சின் செயலாளரிம் கேட்குமாறும் தெரிவித்தார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலனிடம் கேட்ட போது இது தொடர்பில் இப்போது கருத்துக் கூற முடியாது. நாளை (இன்று) தொடர்பு கொள்ளுங்கள்.- என்றார்.

(10-5)

## முஸ்லிம்களின் குடிசைகள் முசலியில் நேற்று தீக்கிரை

### கடற்படை மீது குற்றச்சாட்டு

மன்னார், செப். 4

மன்னார் முசலிப் பிரதேசத்துக்குட்பட்ட மறிச்சுக்கட்டி, மறைக்கா நகரில் மீள் குடியமர்த்தப்பட்ட முஸ்லிம் குடும்பங்களது தற்காலிக குடிசைகள் நேற்று இரவு தீயிட்டுக் கொளுத்தப்பட்டன; சில குடிசைகள் அடித்து நொருக்கப்பட்டன என்று கிராமவாசி ஒருவர் 'உதயனு'க்குத் தொலைபேசியில் தெரிவித்தார். கடற்படையைச் சேர்ந்தவர்களே இதனைச் செய்தனர் என்றும் கிராமவாசிகள் குற்றஞ்சாட்டினர்.

''நேற்று இரவு 7 மணியளவில் வாகனங்களில் வந்த 70 க்கும் மேற்பட்ட கடற்படையினர் எங்கள் குடிசைகளை அடித்து நொருக்கி தீ வைத்து கொளுத்திவிட்டு சென்றதால் நள்ளிரவில் நடு வீதியில் நிற்கிறோம். பெண்கள், குழந்தைகள் எல்லோருக்கும் இதே நிலைதான். இரவு உணவைக்கூட உண்ண சந்தர்ப்பம் கிடைக்கவில்லை''. என்று பாதிக்கப்பட்ட அந்த நபர் உதயனுக்குத் தெரிவித்தார்.

''பூர்வீகமாக மறைக்கா நகரில் வாழ்ந்த நாம் 90ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து புத்தளம் பகுதியில் வசித்து வந்தோம். போர் முடிவுற்றதன் பின்னர் 2010இல் மீளக் குடியமர்ந்தோம். 150 குடும்பங்கள் இப்போது வசித்துவருகிறோம்.

''எமக்கு அமைச்சர் ரிஷாத்தின் ஏற்பாட்டில் தற்காலிக குடிசைகள் வழங்கப்பட்டன. அவற்றை நிரந்தரமாக்க கற்களை அறுத்துக் கொண்டிருந்த வேளையே கடற்படையினர் எங்கள் கிராமத்துக்குள் நுழைந்து குடிசைகளை தீயிட்டுக் கொளுத்தி அடித்து நொருக்கிவிட்டுச் சென்றுள்ளனர். இதற்கு முன்னரும் பல தடவை கிராமத்தை விட்டுவெளியேறுமாறு கடற்படையினரால் அச்சுறுத்தப்பட்டு வந்தோம்'' - என்றார் அவர்.

எங்களிடம் காணிக்கான உறுதிப் பத்திரங்கள் உள்ளதாகவும் இந்த நிலையில் தம்மை எமது பூர்வீக நிலத்தை விட்டு வெளியேற்ற கடற்படையினர் கொடுக்கும் அழுத்தம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியிருந்தனர் என்றும் கிராம வாசிகள் கூறினர். ''இந்த நிலையிலேயே நேற்றிரவு கடற்படையினர் எம்மை நிர்க்கதியாக்கிவிட்டுச் சென்றுள்ளனர்'' எனவும் கிராம வாசிகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் உவைஸ் ஆகியோருக்கு உடனடியாகத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் மக்கள் கூறினர். கடற்படையினர் மீதான குற்றச்சாட்டை அவர்கள் தீவிரமாக மறுத்துள்ளனர். தமது படையினர் எவரும் அப்படிச் செய்யவில்லை என்று அவர்கள் கூறினர்.

(ஞ-10-12)

### தம்பதியரைத் தள்ளி வீழ்த்தி சங்கிலி அபகரிப்பு

சைக்கிளில் சென்ற தம்பதியினரை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த திருடர்கள் ஆள்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் பெண் அணிந்திருந்த ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மட்டுவில் காந்திபுரம் பகுதியில் இடம்பெற்றது.

சங்கிலி அறுத்துக்கொண்டு ஓடியவர்கள் தமது சைக்கிளைத் தள்ளிவிட்டதால் கீழே வீழ்ந்ததில் அவர்களது மோட்டார் சைக்கிள் இலக்கத்தைக் கூடப் பார்க்க முடியவில்லையெனத் தம்பதியினர் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது (த-9)

## வடக்குக் கல்வியை மழுங்கடித்தால் அரசுக்கு எதிராக போராடுவோம்

### தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப்.4

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்வியின் வளர்ச்சி மழுங்கடிக்கப்படுகின்றது. இதற்காக சம்மந்தப் பட்டவர்களுடன் பல தடவைகள் பேசியும் பயனளிக்கவில்லை. இந்த நிலை தொடருமானால் குறித்த அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது.

இலங்கைத்தமிழர் ஆசிரியர்சங்கத்தின் அகில இலங்கை ரீதியிலான தாய்ச் சங்க உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் , வலயச் செயலாளர்கள், கோட்டச் செயலாளர்கள் கலந்து கொண்ட கட்சி மன்றக் கூட்டம் நேற்று முன்தினம் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.


இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்ததாவது.

இலங்கையின் இன்றைய கல்வி நிலை பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது மேலும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் கோரிக்கைக்கு எமதுசங்கம் முழுமையான ஆதரவை வெளிப்படுத்துகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கல்வி வளர்ச்சி மழுங்கடிக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் பல தடவைகள் பேசியும் பயனில்லை .

இந்த நிலைமை தொடருமாக இருந்தால் குறித்த அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்வோம்.

ஆனாலும் மாணவர்களின் கல்வியை பாதிக்காத வகையிலேயே எமது போராட்டங்கள் முன்னெடுக்கப்படும். கல்வி அமைச்சின் அசமந்தப் போக்கை வன்மையாக கண்டிப்பதுடன் இதனால் இலங்கையின் கல்வி பின்னடைவை எதிர்நோக்கப் போகின்றது. எனவே இதனை ஜனாதிபதி தலையிட்டு முடிவுக்கு கொண்டு வர வேண்டும் - என்றார்.(10-5)




வவுனியாவில் இடம்பெற்ற நால்வர் விழாவின் போது வவுனியா மெய்கண்டார் ஆதீன குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவக்கொழுந்து சுவாமிகள், சுந்தரம் குமாரசாமி தம்பதியர், ந.பரந்தாமன், திருமதி ப.சிவவதனி, தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி சிவகுமாரன் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். (க-400)

### மட்டக்களப்பில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு , களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருமண்வெளி பகுதியில் குளம் ஒன்றுக்கு அண்மையாக ஆணொருவரின் சடலத்தை தாம் மீட்டுள்ளதாக கழுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊர்மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் நேற்று இரவு இந்த சடலம் மீட்கப்பட்டதாகவும், இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் இதே இடத்தைச் சேர்ந்த சண்முகம் கிருஸ்ணபிள்ளை (வயது-50) என அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(10)

## முத்துஐயன்கட்டில் மருத்துவ சேவை

நெடுங்கேணி,செப்.4

முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலையில் இப்பகுதி மக்களுக்கான மருத்துவ சேவையொன்று இடம்பெற்றுள்ளது.

பிரம்ம குமாரிகள் உலக ஆன்மிகப் பல்கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் இந்த மருத்துவ சேவை இடம்பெற்றது. இலங்கைப் பல்கலைக் கழகத்தின் மருத்துவப் பிரிவினர் இதனை நடத்தினர். கடந்த 31 ஆம் திகதி இடம்பெற்ற இந்த மருத்துவ சேவைக்கு மருத்துவர் மோகன் தலைமை தாங்கினார்.

இதில் ஆயுள்வேத சேவை, கண் மருத்துவம் உட்பட ஏனைய மருத்துவ சேவைகளும் இடம்பெற்றன. சுமார் 200 இற்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டு தமக்கான மருத்துவச் சேவைகளைப் பெற்றுக் கொண்டனர்.

மேலும் ஆன்மிகம் தொடர்பான கருத்துகளும் வழங்கப்பட்டன. போரினால் பாதிக்கப்பட்டுப் பல்வேறு இழப்புக்களையும் தாங்கியவாறு எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்ந்து வரும் இந்த மக்களுக்கு இதனால் பெரும் நன்மை கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மன அழுத்தத்துடன் வாழும் இவர்களுக்கு ஆன்மிகம் தொடர்பான கருத்துரைகள் மன ஆறுதலை வழங்கியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-435)

# தற்காலிக வீடுகளில் அல்லல்படும் பூநகரிப் பிரதேச மக்கள்

வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் முதன் முதலாக 2009 ஆம் ஆண்டு பூநகரிப் பிரதேசத்தில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட போதிலும் அவர்களுக்கு இன்று வரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை எனப் பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

தற்காலிக வீடுகளிலிருந்து அல்லல்படும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு பொது நிறுவனங்களும் அரசும் முன்வர வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

போர் காரணமாகப் பெருநிலப்பரப்பிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்து வந்த மக்களில் கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் முதன் முதலாக 2009 ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். இவர்களுக்குப் பொது நிறுவனங்களால் தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.


ஆனால் மூன்று வருடங்களுக்கு மேலாகியும் நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை.

19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட இந்தப் பிரதேசத்தில் நாகபடுவான், குமுழமுனை, பள்ளிக்குடா, வலைப்பாடு ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு மட்டும் பொது நிறுவனங்களால் குறிப்பிட்ட தொகையான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனைய கிராமங்களில் வசிக்கும் மக்கள் தற்காலிக குடிசைகளில் வசதியீனங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள்.

மூன்று வருடங்களுக்கு மேலாக சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வரும் இவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு பொது நிறுவனங்களும் அரசாங்கமும் முன்வரவேண்டுமென்றும் தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய அணிக்கும், கந்தபுரம் வாணி வித்தியாலய அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி அண்மையில் நடைபெற்றபோது நிகழ்வின் விருந்தினர் வீரர்களுக்கு கைலாகு கொடுத்து போட்டியை ஆரம்பித்துவைப்பதையும், ஆட்டத்தின்போது வீரர் ஒருவர் தடுப்பாட்டத்தில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

(ங-402)

# கிருபவன், யனுதாஸ் அபாரம் கே.ஸி.ஸி.ஸி. அரையிறுதியில்

யாழ்ப்பாணம், செப்.4

யனுதாஸ், கிருபவன் ஆகியோரின் துல்லியமான பந்து வீச்சின் துணையுடன் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி 7 இலக்குகளால் வெற்றியீட்டி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் விளையாட்டுக் கழக அணி, கே.ஸி.ஸி.ஸி. அணியைச் சேர்ந்த கிருபவன், யனுதாஸ் ஆகியோரின் அபாரமான பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இலக்குகளை அடுத்தடுத்து இழந்தது. இதனால் அந்த அணி ஓட்டங்களையும் குவிக்க முடியாமல் தடுமாறியது.

31.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்த பற்றீசியன் அணி 126 ஓட்டங்களை மாத்திமே பெற்றது.

இதில் பத்மமுரளி 23 ஓட்டங்களையும், நோபட் 31 ஓட்டங்களையும், எரிக் பிரதாப், சஜீந்திரன் ஆகியோர் தலா 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் யனுதாஸ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 54 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், கிருபவன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சிலோசன் 7.1 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 34 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

127 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியினர் 19.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மாத்திரமே இழந்து வெற்றியிலக்கை அடைந்தனர்.

இதில் உமாநாத் ஆறு சிக்ஸர்கள் அடங்கலாக 44 ஓட்டங்களையும், பங்குயன் 26 ஓட்டங்களையும், சாம்பவன் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் நோபட் ஏழு பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும், சஜீந்திரன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும், கிளிங்டன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் வீழ்த்தினர். (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட முன்னணி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

**பி.ப. 3.30 மணிக்கு**

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் .

**பி.ப. 4.30 மணிக்கு**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் எதிர் விண்மீன் விளையாட்டுக் கழகம்

(ங-23)

## மனோகரா, சென்.பீற்றர்ஸ் காலிறுதியில் வென்றன

யாழ்ப்பாணம், செப்.4

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற காலிறுதி ஆட்டங்களில் மனோகரா விளையாட்டுக்கழகம், சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றன.

முதலாவதாக இடம் பெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மனோகரா விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

இதில் மனோகரா விளையாட்டுக்கழகம் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 5:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதன்போது இரு அணியினரும் தலா இரண்டு கோல்களைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. எனவே வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. (ங-23)

## சிவானந்தா வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட முடிவுகள் சில

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட முன்னணி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:-

முதலாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

பரபரப்பான இந்தப் போட்டியில் கரவெட்டி நவசக்தி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் சுலபமாக வெற்றியீட்டியது.

(ங-23)

# மன்னார் பிறிமியர் லீக்; ஸ்ரார் ஈகிள், சென்.அன்ரனிஸ் சாதித்தன

யாழ்ப்பாணம், செப்.4

பெரியகடை ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் 'மன்னார் பிறிமியர் லீக்' கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் 25ஆம், 26ஆம் போட்டிகள் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.

25 ஆவது போட்டி ஏசியன் விளையாட்டுக்கழக அணிக்கும், ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஏசியன் விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் ஏசியன் விளையாட்டுக்கழக அணிசார்பாக சுஜி 18 பந்துகளில் 23 ஓட்டத்தினையும், ரெமி 24 பந்துகளில் 20 ஓட்டத்தினையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக்கழக அணிசார்பாக அஜித் 22 ஓட்டங்களுக்கு [illegible] இலக்குகளையும், [illegible] அருண் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக்கழக அணியினர் 7.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் ஸ்ரார் ஈகிள் அணிசார்பாக ஜோர்ஜ் 26 பந்துகளில் 39 ஓட்டங்களையும், மயூரன் 12பந்துகளில் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஏசியன் விளையாட்டுக்கழக அணி சார்பாக செல்வம், சுஜி ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினைக் கைப்பற்றினர்.

யங்ஸ்ரார்விளையாட்டுக்கழக அணிக்கும், சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெறவிருந்த 26ஆவது போட்டி நேரத்தின்போது யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியினர் சமுகமளிக்காததினால் ஆட்ட விதிமுறைகளுக்கமைய சென்.அன்ரனிஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

(ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது டெஸ்டிலும் வென்றது இந்தியா





நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் 5 இலக்குகள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது. இதன் மூலம் டெஸ்ட் தொடரை 2-0 என்று கைப்பற்றி கிண்ணத்தை வென்றது.

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணி இரண்டு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற இந்தியா 1-0 என்று முன்னிலை வகித்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் பெங்களூரில் உள்ள சின்னசாமி மைதானத்தில் ஆரம்பமானது.

முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 365 ஓட்டங்கள் எடுத்தது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ரெய்லர் 113, வன் விக் 71, குப்தில் 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இந்தியா சார்பில் ஓஜா 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 353 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் ஹோக்லி 103, டோனி 62, ரெய்னா 55 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் நியூஸிலாந்து சார்பில் ரிம்சௌதி 7 இலக்குகளை வீழ்த்தினார்.

12 ஓட்டங்கள் முன்னிலையுடன் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய நியூஸிலாந்து அணி சொதப்பியது. மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் இரண்டாவது இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 9 இலக்குகளை இழந்து 232 ஓட்டங்கள் எடுத்து, 244 ஓட்டங்கள் முன்னிலை வகித்திருந்தது. பட்டேல் (10), போல்ட் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த நிலையில் நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. பட்டேல் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, நியூஸிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 248 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இரண்டாவது இன்னிங்ஸில் 261 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது.

சேவாக், கம்பீர் ஜோடி அதிரடியான தொடக்கத்தை ஏற்படுத்தியது. அதிரடியாக தொடக்கிய சேவாக் (38), கம்பீர் (34) அடுத்தடுத்து பவிலியன் திரும்பினர். புஜாரா, சச்சின் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். மழையால் தடைப்பட்ட ஆட்டம் மீண்டும் தொடங்கியதும் சச்சின் (27), புஜாரா (48), ரெய்னா (0) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் 5 இலக்குகளுக்கு 166 ஓட்டங்கள் எடுத்து திணறியது.

பின்னர் விராத் ஹோக்லி, டோனி இணைந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர். இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 5 இலக்குகளை இழந்து 262 ஓட்டங்கள் எடுத்து, 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

விராத் ஹோக்லி (51), டோனி (48) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதையடுத்து டெஸ்ட் தொடரை 2-0 என்று, வென்று கிண்ணத்தை கைப்பற்றியது. ஆட்டநாயகனாக ஹோக்லியும், தொடர் நாயகனாக அஸ்வினும் தெரிவாகினர். (5)

**நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா 2-0 என்ற ரீதியில் வென்று கிண்ணத்தை கைப்பற்றியது. ஆட்டநாயகனாக ஹோக்லியும், தொடர் நாயகனாக அஸ்வினும் தெரிவாகினர்.**

# தடம் பதிக்கிறது இங்கிலாந்து



இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 4 ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. வழமையைப் போலவே சிறந்த ஆரம்ப இணைப்பாட்டத்தைப் பெற்ற தென்னாபிரிக்க அணி, ஒரு கட்டத்தில் ஒரு இலக்கை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆனால் அதன் பின்னர் இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட 4 இலக்குகளை இழந்து 115 ஓட்டங்களையும், 6 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களையும் அவ்வணி பெற்றிருந்தது.

இறுதிக்கட்டத்தில் சில வேகமான ஓட்டங்கள் கிடைக்கப் பெற்றிருப்பினும் தென்னாபிரிக்காவால் போட்டித்தன்மையான இலக்கொன்றை இங்கிலாந்து வழங்க முடிந்திருக்கவில்லை.துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஹசிம் அம்லா 45 ஓட்டங்களையும், ஏ.பி.டி.வில்லியர்ஸ் 39 ஓட்டங்களையும், டீல் எல்கர் 35 ஓட்டங்களையும், ரொபின் பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் ட்ரெட்வெல் 3 இலக்குகளையும், ரவி போப்பாரா 2 இலக்குகளையும், ஸ்டீவன் பின், ஜேட் டோர்ண்பக் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

221 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 46.4 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது இலக்காக அணித்தலைவர் அலஸ்ரெயர் குக் முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே ஆட்டமிழந்த போதிலும், தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பாக ஆடி இங்கிலாந்தின் வெற்றிக்கு உதவினர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக இயன் பெல் 88 ஓட்டங்களையும், ஜொனதன் ட்ரொட் 48 ஓட்டங்களையும், மோர்கன் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும், கிறெய்க் கீஸ்வெட்டர் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஸ்ரெய்ன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.ஆட்ட நாயகனாக இயன் பெல் தெரிவானதோடு, 5 ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரில் 4 ஆட்டங்களின் நிறைவில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VCM INSTITUTE
கோபால் லேன், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

A/L 2012 Repeat

இணைந்தகணிதம்
துரித மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் :
புதன் (05.09.2012) 7.30 am

B. ரவீந்திரன்
(22473)(6-8)


## லி நா அதிர்ச்சித் தோல்வி

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரின், பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாம் சுற்றில், சீனாவின் லி நா அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

நியூயோர்க்கில் அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் கிராண்ட்ஸ் லாம் தொடர் நடக்கிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாம் சுற்றில், தர வரிசையில் ஒன்பதாவது இடத்திலுள்ள சீனாவின் லி நா, பெல்ஜியத்தின் கிளைஸ்டர்சை வீழ்த்திய, பிரிட்டனின் லாரா ராப்சனை சந்தித்தார். இதில், லி நா 4-6, 7-6, 2-6 என்ற செற் கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

ஷரபோவா வெற்றி

உலகின் மூன்றாம் நிலை வீராங்கனை ரஷ்யாவின் மரியா ஷரபோவா, அமெரிக்காவின் மல்லோரியை 6-1, 6-1 என்ற செற் கணக்கில் வீழ்த்தினார். (5)


# NEW SCIENCE COLLEGE
வெங்கடேசன் வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

2013 A/L
DAY CLASS
செவ்வாய், புதன், வியாழன் 7.30 - 9 AM
COM. MATHS
திரு. பிறேம்நாத்
ஆரம்பம் : 05.09.2012 Model Paper 3. p.m
(E/3060)(6.8)

## அரிய வாய்ப்பு
கனடாவில் "SalesRep" விற்பனைப் பிரதிநிதிகள் பதவிகளிற்கு விண்ணப்பிப்பதற்கு ஆலோசனை
★ 40 வயதிற்குக் குறைந்த ஆண்கள்
★ IELTS 5.5 (Academy) இருப்பின் முன்னுரிமையும் உறுதியான விசா ஏற்பாடுகளிற்குரிய ஆலோசனை
★ IELTS இல்லாது விடின் நிட்சயமற்ற தன்மை இருப்பினும் விண்ணப்பிக்கலாம்
★ 12 இடங்களே வெற்றிடம் விரைந்து வாருங்கள் (புதன்கிழமைகளில் எமது நிறுவனம் திறக்கப்படமாட்டாது)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
(PV82703) முன் மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் லேன், பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9016
(22484)(6.8)

## IIS வழங்கும் கணனிக் கற்கை நெறிகளுக்கான விஷேட சலுகைகள்
சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்




2012 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!! உங்களுக்காகவே September மாதத்தில் கணனிக்கற்கை நெறிகளுக்கான விஷேட பிரிவுகள் ஆரம்பமாக உள்ளது.

மேலதிக விபரங்களுக்கு : 021 4 922 741

இப்பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் Kingston Flash Memory ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாய்ப்பு இப்பிரிவுகளுக்கு மட்டுமே.
(c/3861)

ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயின்று கொள்ளுங்கள்....

புதிய பிரிவுகள் ஆரம்பம்
05.09.2012
14.09.2012 காலை 10.00 மணி
15.09.2012

| Certificate Courses | Diploma Courses |
|---|---|
| Certificate in Office Solution Development | Diploma in Multimedia |
| Certificate in Multimedia | Diploma in Web Development |
| Certificate in Web Designing | Diploma in Computer Programming |
| Certificate in DeskTop Publishing | Diploma in Computerized Accounting |
| Certificate in Hardware Technology | Diploma in Eng. Drawing & AutoCAD |
| Certificate in Java Programming | Diploma in Software Development |
| Certificate in Visual Programming | Diploma in Business Information System |
| Certificate in Networking | Diploma in Computer Hardware & Networking |
| Certificate in Database Management | |

INSTITUTE OF INFORMATICS STUDIES
100 CLOCK TOWER ROAD,JAFFNA
T.P : 021 222 2831/021 492 2741 FAX : 021 222 6933
WEB : iis.edu.lk E-Mail : iis@iis.edu.lk

## A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு
சிங்கள வகுப்புக்கள்
சிங்கள மொழி எழுத, வாசிக்க, கதைப்பதற்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும்.
Batch I - திங்கள் முதல் வெள்ளி வரை
காலம் 3 மாதம் 8.30 am - 10.30 am
Batch II - திங்கள் முதல் வெள்ளி வரை
காலம் 3 மாதம் 4.00 pm - 6.00 pm
Batch III - சனி, ஞாயிறு
காலம் 9 மாதம் 4.00 pm - 6.00 pm
ஆசிரியர் J.R. சூரி

தொழிற்பயிற்சிகள்
* Mobile phone repairing
Batch I - திங்கள் முதல் வெள்ளி வரை
காலம் 2 மாதம் 8.30 am - 11.00 am
Batch II - சனி, ஞாயிறு 4.00 pm - 6.00 pm
* Electronics
Tv, Mobile phone, DVD வேறு எலக்ரோனிக் பொருள்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 10 மாதம்
* Air conditioning
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்
காலம்: 6 மாதம்
பயிற்சிகள் ஆரம்பம் - 09.09.2012
விவரங்களிற்கு Jaffna Technical Institute
இல. 7, பலாலி வீதி, யாழ்ப்பாணம் 0718561654
கிளை New Asian Center 56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 0778249949
(E/3074)(3.6)

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
CD 200 Road Master
88 sri
தொடர்பு:-
0777913930
0772378736

## தேவை
யாழ். நகரிலுள்ள தொழில் நிறுவனம் ஒன்றில் பணிபுரியக் கூடியவர்கள் தேவை.
(பெண்கள்)
(பயிலுநர்களும்சேர்க்கப்படுவர்)
0772174751
(22477)(3.14)

## ACCA
Association Of Chartered Certified Accountants
க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிய அனைத்துத்துறை மாணவர்களுக்குமான புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 09.09.2012 இல் யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் நடைபெறவுள்ளது. எனவே இதுவரை அனுமதியட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் OI பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் 06, 07.09.2012 ஆம் திகதிகளில் அனுமதியட்டையினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணம் தொழில் நுட்ப நிறுவனம் இல.7, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
0215670345 (அப்பலோ வைத்தியசாலை முன்பாக) (22442)(3.14)

## Physics A/L Day Class
| முத்தட்டு மடலேண், கோண்டாவில் மேற்கு. 0213734114 ஆரம்பம்:- 06.09.2012 09.00 am | New Science Centre வெலிங்டன் சந்தி அருகில் Jaffna ஆரம்பம்:- 05.09.2012 10.00 am |
|---|---|

By:- KAJAN (22487)(3.8)

## காணி விற்பனைக்கு
கிளிநொச்சி, பரந்தன் " குமரபுரம்" 2 ஆம் ஒழுங்கையிலுள்ள "பரந்தன் காடு" றூட் 01 பேட்ஸ் 31 விஸ்தீரணமான காணி உடன் விற்பனைக்குண்டு. வீடு கட்டப் பொருத்தமான காணி.
தொடர்புகளுக்கு: உபதபால் அலுவலகத்துக்கு அருகில், ஆழியவளை T.P : 077 3165507
(19314)(6-8)

## சல்லிகள் விற்பனைக்கு
தரமான கருங் சல்லிகள் (½", ¾", 1", 1½", 4", 9x6) போன்றவை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு- 0775890730.
(E/3034)(3.14.6)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்
Weekday batches : Wednesday , Monday (05th and 10th September) 9.00 am
Weekend batch : Saturday(08th September)9.00 am
Flexible time for Working Students

After Your A/L Don't Miss IT in your future

- International Diploma in Computing
- International Diploma in Business Management
- Diploma in Hardware & Networking
- Diploma in Web Engineering
- Diploma in Computerized Accounting Package
- Certificate in Programming Languages (C,Java,C#,ASP.Net,VB.Net,PHP,...)
- 2D & 3D Auto CAD
- Advanced Diploma in Computer Network
- CCNA(Cisco Certified Network Associate)

Register On or before 15th of September
OFFER
10 % of course fee / 8GB Pendrive
IHD / HND in
Software Development
Business Management
Computer Networks



IDM Nations Campus
Jaffna Branch
Managed by Aharam Solution (Pvt) Ltd
Hotline : 021 222 9901
Mobile : 077 5632056
#216, Navalar Road, Jaffna, Srilanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.